தரம் 6

# நாடகமும் அரங்கியலும்

## ஆசிரியர் வழிகாட்டி

(2015ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பெறும்)



அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீ லங்கா

Web: www.nie.lk
Email: info@nie.lk

# நாடகமும் அரங்கியலும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 6

(2015ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பெறும்)

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.

நாடகமும் அரங்கியலும்,
ஆசிரியர் வழிகாட்டி.
தரம் - 06.
பாடத்திட்டம் - 2015.

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2015
தேசிய கல்வி நிறுவகம்.

அழகியற்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.
மஹரகம

இணையத்தளம் **: www.nie.lk**
மின்னஞ்சல் **: info@nie.lk**

பதிப்பு :
அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம்.

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப் பெறும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் வழியாகப் புதிய தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பெற்றது. தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமையத் தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுற்படுத்தப்பட உள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின்போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பெற்று, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிவு நிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள், ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பெற்ற பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப்படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பெற்ற பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பெற்ற பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்,**
தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும் நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கும் கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக் கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள்,தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற் காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டி, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

பாடநிறைவில் அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றி வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். இவ்வாசிரியர் வழிகாட்டி, மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

## கலைத்திட்டக்குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும்:** **கல்விசார் அலுவல்கள் சபை.**
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட நிபுணத்துவ ஆலோசனை:** **கலாநிதி ம. சண்முகலிங்கம்,**
விரிவுரையாளர் (ஓய்வுபெற்ற).
யாழ் பல்கலைக்கழகம்.

**பாட இணைப்பாக்கம்:**
- **திரு. செ. செல்வகுமார்,**
  விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.
- **திரு. கே.ஜி. அஜித் ரூபசேன**
  செயற்றிட்டத் தலைவர், அழகியற்கல்வித் துறை.

**எழுத்தாளர் குழு:**
**(வெளிவாரி)**
- **திரு. க. திலகநாதன்,**
  விரிவுரையாளர்,
  தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.
- **திருமதி. செ. எ. வைதேகி,**
  ஆசிரியர் சேவை, கிளி / பளை மத்திய கல்லூரி.
- **திருமதி. கே. ஜீவாஜினி,**
  ஆசிரியர் சேவை, யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
- **திருமதி. ச. ஜெயந்தி,**
  ஆசிரியர் சேவை,
  யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை.
- **திரு. பி. ரவீந்திரன்,**
  ஆசிரியர் சேவை, மட் / செட்டிபாளையம் ம.வி.
- **திரு. இ. ஜெகநாதன்,**
  ஆசிரியர் சேவை, மட்/ கோட்டைக்கல்லாறு ம.வி.
- **திரு. யோ. யோன்சன் ராஜ்குமார்,**
  ஆசிரியர் சேவை,
  யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்.
- **திரு. க.இ. கமலநாதன்**
  விரிவுரையாளர்
  தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.
- **திரு. பொ.தை. யஸ்டின் ஜெலூட்**
  ஆசிரியர் சேவை, கிளி/கறுக்காய்த்தீவு ம.வி., பூநகரி.

**(உள்வாரி):**
- **திரு. செ. செல்வகுமார்,**
  விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.

**செவ்விதாக்கம்:**
- **திரு. செ. செல்வகுமார்,**
  விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.

**கணினிப் பதிப்பு:**
- **திருமதி. ஜீவாஜினி கேசவன்**
  யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
- **திருமதி. நிஸ்மியா அமீர்**
  தேசிய கல்வி நிறுவகம்.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

21 ஆம் நூற்றாண்டு என்பது அறிவுப் பொருளாதார யுகத்தைக் குறித்து நிற்பதாகும். உலகம் கிராமமாகச் சுருங்கியதைப் போலவே, அறிவுத் திரட்டையும் மிகமிகச் சுருக்கமான தாக்கித் தருவது இந்த நூற்றாண்டின் சவால் மிக்க பணியாகும். உலகளாவிய கல்விச் செயற்பாடுகள் அதனை நோக்கியே குவிக்கப் பெற்றுள்ளன. தொழிற்றுறை மனிதன் இயந்திரமல்லன். அவனை மனிதனாகவே வைத்திருக்கக் கலைகளே பயனுறு பங்காற்று கின்றன. ஆதலால் அன்பு, கருணை, ஒற்றுமை, நல்லிணக்கம், பிணைப்பு, பற்றுதி, படைப்பாற்றல் போன்றவற்றை மனிதர்களிடத்திற் பிரவாகிக்கச் செய்வதற்கு அழகியற் பாடங்கள் துணை செய்கின்றன.

நாடகம் மனிதரைப் பற்றிப் பேசுகிறது. அவர்கள் தமக்குட் கொள்ளும் உறவை இரத்தமும் சதையுமாக வெளிப்படுத்துகிறது. அறிவுப் பொருளாதார யுகத்தில் மனிதருக்கு மிக வேண்டப்பெறுகின்ற தொடர்பாடற் திறன், ஆளுமைத் திறன், கூட்டுணர்வு சார் நடத்தைகள், துல்லியமான, தெளிவான பேச்சு போன்றவற்றை விருத்தியுறச் செய்வதற்கு நாடகம் மிகவும் தாக்கவன்மையான சாதனமாகும். ஆகவேதான் இலங்கையின் பொதுக் கல்வித் துறையில் தரம் 6 முதல் தரம் 13 வரை நாடகமும் அரங்கியலும் ஒரு விளைதிறன் மிக்க பாடமாக முன்னிறுத்தப் பெற்றுள்ளது.

குறிப்பாகத் தரம் 6 மற்றும் தரம் 10இற் செய்முறை சார்ந்த கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப் பெற்றுள்ளது. கதை சொல்லுதல், போலச் செய்தல், புதிதளித்தல், வகிபாகம் ஏற்று நடித்தல், வேடப் புனைவு, காட்சி விதானிப்புச் செய்தல், நாடக எழுத்துரு எழுதுதல், அதனை நாடகவாக்கம் செய்தல், கணினியின் பிரயோகம் என மாணவரின் படைப்பாற்றல் மற்றும் கற்பனை விருத்தியுடன் தொடர்புடைய விடயங்கள் பாடத்திற் சேர்க்கப் பெற்றுள்ளன. அதேவேளை வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் தொடர்பிற் திட்டமிடுவதற்கு ஆசிரியருக்கு அதிக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதை இந்த ஆசிரியர் வழிகாட்டி சுட்டிக் காட்டுகின்றது. ஒவ்வொரு பாடவிடய உள்ளடக்கம் தொடர்பிலும், கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு இங்கு முன்வைக்கப் பெற்றுள்ளது. அவற்றை மாணவர்களுடன் தொடர்புறுத்து வதற்கான முறையியல் தொடர்பில், சில முன்மாதிரியான உதாரணங்கள் தரப்பெற்றுள்ளன. ஆசிரியர்கள் பாடவிடயம், வகுப்பறைச் சூழல், மாணவரின் நிலை, பாடவேளை போன்ற அம்சங்களைக் கருத்திற் கொண்டு பொருத்தமான முறையியலை வகுத்துக் கொள்ள முடியும். எவ்வாறெனினும், அவை மாணவரைச் செயற்படுபவராகவும் ஆசிரியரை வசதி செய்யும் வகிபாகத்தைக் கொண்டிருப்பவராகவும் கொள்ளும் வகையில் அமைதல் வேண்டும் என்று எதிர்பார்க்கப் பெறுகின்றது.

2015 முதல் கற்றற் பேறுகளை அடிப்படையாகக் கொண்ட தேர்ச்சி மையக் கலைத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது. ஆசிரியர் கைந்நூலிற் சில அடிப்படையான கற்றற் பேறுகள் முன்வைக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடவேளையையும் திட்டமிடும்போது, அக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் நிறைவில் மாணவர்கள் எத்தகைய அடைவைக் காட்டுவார்கள் என்பதை எதிர்நோக்கி மேலதிக கற்றற் பேறுகளைகளைத் தாமாகவே தயாரித்துக் கொள்ள வேண்டும். கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் போது கணிப்பீடு மதிப்பீடுகளைச் செய்வதன் வழியாக எதிர்பார்க்கப் பெற்ற கற்றற் பேறுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை அவதானித்து, பரிகாரச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களின் தேடலுக்கும், படைப்பூக்கத்திற்கும் வழிசமைக்கும் வகையிற் போதிய வாய்ப்புக்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறித்த தரத்திற் கற்கும் மாணவர்களின் வயது மற்றும் ஆளுமைப் பண்புகளுக்கு ஏற்ப, அமைக்கப் பெற்றுள்ள விடய உள்ளடக்கத்தினை எந்தளவிற்குக் கற்பிப்பது என்பதற்கான குறிப்புக்களாகப் பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள் அமைந்துள்ளன. புதிதாக அறிமுகஞ் செய்யப் பெற்றுள்ள மற்றும் தேடிப் பெறக் கடினமான உள்ளடக்கங்கள் தொடர்பில் மாத்திரம் சற்று விரிவான குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. அவ்வகையிற் செய்முறை சார்ந்த கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கைக் கட்டியெழுப்புவதற்கு இவ் வழிகாட்டி ஆசிரியர்களுக்குப் பயனுறுதி வாய்ந்ததாய் அமையும் என்று நம்புகின்றோம்.

**செயற்றிட்டக் குழு**

## உள்ளுறையாக


- பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி iii
- பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iv
- கலைத்திட்டக் குழு v
- ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் vi
- விரிவான பாடத்திட்டம்
  - அறிமுகம் viii-ix
  - தேசிய இலக்குகள் x
  - அடிப்படைத்தேர்ச்சிகள் xi - xii
  - பாடக்குறிக்கோள்கள் xiii
  - பாடத்திட்டம் xiv - ix
  - தவணை நிலைப்பட்ட பாடவிரிப்பு xx
- கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள் 1-78
- கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் 79-85

# விரிவான பாடத்திட்டம்

# அறிமுகம்

இலங்கையின் கல்வி மறுசீரமைப்புக்கான செல்நெறி தொடர்பில் 2007 குறிப்பிடத்தக்கதொரு ஆண்டாகும். உலகப் பரப்பில் நிகழ்ந்து வருகின்ற உலகமயமாதற் போக்குகளுக்கேற்ப மேற்கிளம்பிய, புதிய மாதிரியிலான சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஒரு பண்பு மாற்றம் அந்த வருடத்தில் தான் தொடங்கியது. புதிய சகாப்தத்திற்கான கல்வி மறுசீரமைப்பு எனத் தெரியவந்த தேர்ச்சி மையக் கலைத்திட்ட நோக்கே அது. இதுவரை காலக் கல்விப் போக்கில் அறிதல் ஆட்சிக்கு மாத்திரமே வழங்கப்பெற்றிருந்த முக்கியத்துவத்திற்கு அது முடிவுகட்ட முனைந்தது.

ஒன்றிணைந்த ஆளுமைப் பண்புகளான சிந்தனைத் திறன்கள், சமூகத் திறன்கள், சுயதிறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையிலான சிறந்த பொதுக் கல்வியை வழங்குவது முதலாவது கலைத்திட்ட மறுசீரமைப்பின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

2015 முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள, புதிய சகாப்தத்தின் இரண்டாவது கலைத்திட்ட மறுசீரமைப்பானது, தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட மாணவர் மையக் கலைத்திட்டத்தை இன்னொரு தளத்திற்கு எடுத்துச் செல்லும் பயனுறுதி வாய்ந்த நடவடிக்கை ஆகும். ஏனெனில், அது அடுத்துவரும் இருபது ஆண்டுகளில் தேசிய, சர்வதேசிய ரீதியில் சந்திக்க நேரிடும் நோக்குகள், போக்குகள், மாறுதல்கள், சவால்கள் என்பவற்றிற்கான வருமுன் காக்கும் நடவடிக்கையாகும்.

உலகளாவிய விஞ்ஞான, தொழில்நுட்ப இலத்திரனியல் விருத்தி காரணமாக எமது அறிவுத் திரட்டில் பாரிய மாற்றம் ஏற்பட்டு வருகிறது. பழைய அறிவின் இடத்தில் புதிய அறிவு தோன்றியுள்ளது. இந்த அறிவுப் பிரவாகம் காரணமாக, கைத்தொழில் யுகத்திலிருந்து அறிவுப் பொருளாதார யுகத்திற்கான மாறுதல் ஒன்று நடைபெற்று வருகிறது. உலக மனிதன் என்கிற கருத்தாக்கம் விருத்தியுற்று வருகிறது. எனவே, எமது மாணவர் சமூகம் படைப்பாற்றலற்ற மனன கலாசாரத்திற்குள் இருக்க முடியாது. இந்த நிலைமைகளுக்குத் தாக்குப்பிடிக்கும் வல்லமையுடைய தலைமுறையை உருவாக்குவது என்பது நமது பொதுக் கல்வித்துறைக்கு விடப்பட்ட சவாலாகும். எனவே,

1. தாமாக முன்வந்து தொடங்கும் மனப்பாங்குள்ள
2. தீர்மானங்களை எடுக்கும் திறனுடைய
3. பிரச்சினை தீர்க்கும் வல்லமையுடைய
4. முரண்பாடுகளை முகாமை செய்யும் ஆற்றலுள்ள
5. மற்றவர்களுடன் தாக்கவன்மையான தொடர்பாடலை மேற்கொள்ளத்தக்க

6. குழுவாகப் பணியாற்றும் இயலுமையும், மனமும் உள்ள
7. தலைமைதாங்கும் பண்புடைய
8. மொழியறிவுடைய

புதிய பரம்பரையொன்றை எழுச்சிபெறச் செய்யும் தேவை பொதுக் கல்வித் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறான, நிலைமைகள் சிந்தனைகளைக் கருத்துடன் உள்வாங்கிக் கொண்டுதான் நாடகமும் அரங்கியலும் புதிய பாடத்திட்டம் ஆக்கப் பெற்றுள்ளது. நாடகம் மனிதர்களுடன் இரத்தமும் சதையுமான தொடர்பைக் கொண்டிருக்கின்ற ஒரு அவைக்காற்றுக் கலை ஆகும். எனவே, நாடகம் மனிதரின் உணர்ச்சிகள், எண்ணங்கள், அபிலாஷைகள், விழுமியங்கள், திறன்கள் மற்றும் பண்பாடு என்பவற்றுடன் ஊடாடுகின்ற கலை வடிவம் ஆகின்றது. இதன் மூலமாக நல்லிணக்கம், ஒற்றுமை, பிணைப்பு, பற்றுறுதி போன்ற பண்புகளுடன் கூடிய ஒன்றிணைந்த ஆளுமைத் திறன்களை விருத்தி செய்ய முடியும். ஆகவே, நாடகமும் அரங்கியலும் தேசிய இலக்குகளை அடைவதற்கான மிகநெருக்கமான பாடமாகவும் உள்ளது.

புதிய சகாப்தத்திற்கான இரண்டாவது கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது, கலைத்திட்டச் சட்டகத்தில் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு மாற்றங்கள் எவையும் செய்யப்பெறவில்லை. அதேவேளை, பாடத்திட்டத்தில் கற்றற் பேறுகள் என்கிற விடயம் இணைக்கப்பட்டுள்ளது. கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் நிறைவில் மாணவரிடம் எதிர்பார்க்கப்பெறுகின்ற அடைவைச் சுட்டுவனவாக கற்றற் பேறுகள் அமைகின்றன. கணிப்பீடு மதிப்பீடுகள் மூலம் கற்றற் பேறுகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும். இந்த அடித்தளத்தில் நின்றே நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பொதுக் கல்வியானது மாணவர்களை வேலையுலகிற்குத் தயார்ப்படுத்துவதற்கான அடித்தளத்தை இடவேண்டும் என்கிற வகையில் நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டமானது எழுத்துருவாக்கம், ஒப்பனை, ஆடை வடிவமைப்பு, ஒலி விதானிப்பு, ஒளி விதானிப்பு, காட்சி விதானிப்பு போன்ற கலை நுட்ப விடயங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது, இதன் ஊடாகத் தொழிற் தேர்ச்சியும், படைப்பாக்க ஆளுமையும் உடையவர்களாக மாணவர்கள் உருவாக முடியும். அதனுடன் கூடவே நாடகக் கலைஞர்களாக , மானுட நேயமிக்கவர்களாக, அழகியல் நயப்புணர்வுடையவர்களாக அவர்கள் மிளிர முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

தவிர, பிரதான பாடங்களை இலகுவாகக் கற்பிப்பதற்கான முறையாகவும், அவதானம், கருத்தூன்றல், தர்க்க சிந்தனை என்பவற்றிற்கான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்யக் கூடிய துறையாகவும் நாடகம் வளர்ந்து வரும் பின்னணியில் நாடகமும் அரங்கியலும் பாடப் பயில்வு வழியாக மற்றப் பாடங்களையும் வினைத்திறனுடன் கற்க வசதி செய்ய முடியும் எனவும் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசியப் பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கு கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2003)***

# அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

## I. தொடர்பாடற் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவற் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள்,எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவற் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவற் தொடர்பாடற் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.



## II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

## III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையிற் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியற் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழற்றொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருள்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும். கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

- அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புக்களையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடுதல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தலும்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2003)**

## பாடக் குறிக்கோள்கள்

- அரங்கக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல்.
- படைப்பாக்கத் திறனைப் பெறுதல்.
- அழகியல் நயப்புடையவராதல்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கைக் கொண்டிருத்தல்.
- பண்பாட்டின் பாற் பற்றுறுதியும் மரபைக் கையேற்கும் மனப்பாங்கும் உள்ளவராதல்.
- தன்னாற்றலை இனங்கண்டு, செயல்முனைப்புடன் செயலாற்றுதல்.
- சமநிலை ஆளுமையை விருத்தி செய்து கொள்ளுதல்.
- தலைமைத்துவப் பண்பை உடையவராதல்.
- தன்னைச் சூழவுள்ள உலகைப் புரிந்துகொண்டு, சமூகமயமாகும் பண்பைக் கொண்டிருத்தல்.
- முரண்பாடுகளை முகாமை செய்தல்.
- மனித சுபாவங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் மானுடப் பண்புகளைப் பெறுதல்.
- தாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் திறன் பெறுதல்.
- நேர்மனப்பாங்கினை விருத்தி செய்தல்.
- சிறந்த தொடர்பாடற் திறனை கொண்டவராதல்.
- தாமாக முன்வந்து செயலாற்றும் திறன் பெறுதல்.
- இயற்கையோடு இசைந்து வாழப் பழகுதல்.
- வளர்ந்துவரும் விஞ்ஞான தொழினுட்ப சாதனங்களை அரங்கிற் கையாளும் ஆற்றலைப் பெறுதல்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- உள ஆற்றுப்படுத்தலுக்கான அணுகுமுறையாக அமைதல்.
- ஏனைய பாடங்களை இலகுவாகக் கற்பதற்கான முறைமையாக அமைதல்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குதல்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்பைப் பேணுதல்.

## நாடகமும் அரங்கியலும்
## விரிவான பாடத்திட்டம் - தரம் 6

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| 1.0 | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். | 1.1 தாம் அறிந்து வைத்துள்ள எளிமையான நாட்டார் கதைகளைக் கட்டமைத்துக் கூறக்கூடியவர் ஆவார். | • கதை சொல்லுதல். | • பல்வேறு நாட்டார் கதைகளையும் அறிந்து சுவைபட முன்வைக் கக்கூடிய திறன் பெற்றிருப்பார்.<br>• சூழலை நன்கு அவதானித்து, பிராணிகள், மனிதர், இயந்திரங் கள், வாகனங்கள் என்பவற்றின் புறவாரியான அசைவுகள் மற்றும் நடத்தைக் கோலங்களைப் போலச் செய்வார்.<br>• நால்வகைச் சித்திரிப்புக்களைப் பயன்படுத்தி, போலச்செய்தலில் ஈடுபடுவார்.<br>• நாடகத்தின் அம்சங்களைக் கூறுவார்.<br>• நாட்டார் கதைகள் மற்றும் நாடகங்களை நயப்பார். | 02 |
| | | 1.2 தாம் அறிந்துள்ள நாட்டார் கதைகளைச் சுவைபட முன்வைக்கக்கூடியவர் ஆவார். | • சுவைபடக் கதை கூறுதல். | | 04 |
| | | 1.3 பிராணிகளை அவதானித்து, அவற்றின் புறவாரியான நடத்தைகளைப் போலச் செய்யக்கூடியவர் ஆவார் | • போலச் செய்தல் - அறிமுகம்<br>• பிராணிகளைப் போலச்செய்தல். | | 03 |
| | | 1.4 மனிதர்களை அவதானித்து, அவர்களின் புறவாரியான நடத்தைகளைப் போலச் செய்யக்கூடியவர் ஆவார். | • மனிதர்களைப் போலச்செய்தல். | | 02 |
| | | 1.5 இயற்கையின் தோற்றப் பாடுகளைப் போலச்செய்யக் கூடியவர் ஆவார். | • இயற்கையின் தோற்றப்பாடுகளைப் போலச் செய்தல். | | 02 |
| | | 1.6 இயந்திரங்கள், வாகனங்கள் போன்றவற்றைப் போலச் செய்யக்கூடியவர் ஆவார். | • இயந்திரங்கள், வாகனங்களின் அசைவுகள், வடிவங்களைப் போலச் செய்தல். | | 02 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| | | 1.7 நால்வகைச் சித்திரிப்புக்களையும் இனங்காணக் கூடியவர் ஆவார். | • போலச் செய்வதற்காக நால்வகைச் சித்திரிப்புக்களையும் பயன்படுத்துதல். | | 03 |
| | | 1.8 "நாடகம்" என்பதனை இனங்காணக்கூடியவர் ஆவார். | • நாடகம் பற்றிய பயில்வு. | | 02 |
| 2.0 | கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார். | 2.1 சுற்றாடலுடன் தொடர்புடைய பல்வேறு அனுபவங்களைப் படைப்பாக்கம் செய்யக் கூடியவர் ஆவார். | • அனுபவ வழியான படைப்பாக்கச் செயற்பாடுகள். | • கற்பனையை வளப்படுத்திச் சுற்றாடல் சார் அனுபவங்களையும், சூழமைவுகளையும் பாத்திரங்களையும் படைப்பாக்கம் செய்வதில் விருப்பம் காட்டுவார்.<br>• கற்பனையை நெறிப்படுத்திப் பிராணிகள் மற்றும் மனிதப் பாத்திரங்களின் உள்ளார்ந்த இயல்புகளைப் புதிதளிப்பார்.<br>• பொருள்களைப் பயன்படுத்தித் தனியாகவும் கூட்டாகவும் புதிதளித்தலில் ஈடுபடுவார்.<br>• கூட்டாகச் செயற்பட்டுக் கதை புனைவதுடன் அதைத் தழுவி, சிறுவர் நாடக எழுத்துரு எழுதுவார்.<br>• கழித்தொதுக்கப்படும் பொருள்களில் இருந்து எளிமையான வேட முகங்கள், மேடைப் பொருள்களைப் படைப்பாக்கம் செய்வதுடன் அதனை வாழ்க்கைப் பழக்கமாக்கியும் இருப்பார். | 02 |
| | | 2.2 சுற்றாடல் சார்ந்த நிகழ்ச்சிகளையும் சூழமைவுகளையும் தழுவிப் படைப்பாக்கம் செய்ய வல்லவர் ஆவார். | • சூழமைவுகளைப் போலச் செய்தல். | | 02 |
| | | 2.3 சுற்றாடல் சார்ந்த பல்வேறு பாத்திரங்களை ஏற்றுச் சித்திரிக்கக்கூடியவர் ஆவார். | • பாத்திரப் பண்பை வெளிப்படுத்துதல். | | 02 |
| | | 2.4 பிராணிகளின் உள்ளார்ந்த இயல்புகளை இனங்கண்டு புதிதளிக்கக்கூடியவர் ஆவார். | • பிராணிகளின் உள்ளார்ந்த இயல்புகளைப் புதிதளித்தல். | | 02 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| | | 2.5 மனித மற்றும் கற்பனைப் பாத்திரங்களின் உள்ளார்ந்த இயல்புகளைப் புதிதளிக்க வல்லவராவார். | • வகிபாகச் சித்திரிப்பு. | | 02 |
| | | 2.6 பல்வேறு பொருள்களையும் பயன்படுத்திப் புதிதளிக்க வல்லவராவார். | • பொருள்களைப் பயன்படுத்திப் புதிதளித்தல். (தனியாகவும், கூட்டாகவும்) | | 01 |
| | | 2.7 கூட்டாகச் சேர்ந்து, நயக்கத் தக்க கதைகளைப் புனையக் கூடியவர் ஆவார். | • கூட்டாகக் கதை புனைதல். | | 02 |
| | | 2.8 படைப்பாற்றலை வெளிப்படுத்த வல்லவராவார். | • கதைப் பகுதியைப் பூர்த்தி செய்தல்.<br>• கதையிலுள்ள நாடகச் சூழமைவு களை இனங்காணுதல்.<br>• கதையைத் தழுவிச் சிறுவர் நாடக எழுத்துரு எழுதுதல். | | 03 |
| | | 2.9 கழித்தொதுக்கப்படும் பொருள் களையும் இயற்கைச் சூழலில் கிடைக்கின்ற பொருள்களை யும் பயன்படுத்தி ஆக்கம் புரியக்கூடியவர் ஆவார். | • வேடமுகங்கள் ஆக்குதல்.<br>• எளிமையான மேடைப் பொருள்களை ஆக்குதல். | | 04 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| 3.0 | நாடகக் கொள் நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார். | 3.1 தெரிந்தெடுக்கப்பெற்ற நாடக எழுத்துருவில் உள்ள சொல்லாடல்களைக் கருத்து வெளிக்கொணர்கையுடன் முன்வைக்கக் கூடியவர் ஆவார். | • கருத்து விளக்கத்துடன் சொல்லாடுதல். | • நாடகத்தில் அசைவுகள் மற்றும் மெய்ப்பாடுகளின் அவசியத்தை உணர்ந்திருப்பார்.<br>• பல்வேறு ஒலிகளைப் போலச் செய்வதுடன் சொல்லாடல் நுட்பங்களை அறிந்து வெவ் வேறு வீச்சுக்களுடன் குரலைப் புறத்தெறிவார்.<br>• பாத்திரப்பண்பு, சூழமைவு, உணர்ச்சி வேறுபாடுகளுக்குப் பொருத்தமானவாறு குரலைப் பயன்படுத்தும் ஆற்றல் பெற்றிருப்பார்.<br>• மரபுவழி நாடகத்துக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றிருப்பார்.<br>• நாட்டார் விளையாட்டுக்களை விளையாடிக் காட்டுவார். | 03 |
| | | 3.2 அசைவு முறைகளைப் பயன் படுத்தி, உடலுக்கும் உள்ளத்துக்கும் இடையிலான தொடர்பைக் கட்டியெழுப் பவல்லவர் ஆவார். | • மெய்ப்பாடுகள். | | 03 |
| | | 3.3 பாத்திரப் பொருத்தமறிந்து குரலைப் பயன்படுத்தக் கூடியவர் ஆவார். | • பாத்திரத்திற்கு ஏற்ற குரல் வழிச் சித்திரிப்பு<br>• ஒலிகளைப் பாவனை செய்தல். | | 04 |
| | | 3.4 குரலின் வெவ்வேறு வீச்சுக்கள் வெளிப்படுமாறு சொல்லாடல் களைக் கையாளக்கூடியவர் ஆவார். | • குரலின் வீச்சுக்கள். | | 03 |
| | | 3.5 உணர்ச்சி வேறுபாடுகளுக்கும் சூழமைவு வேறுபாடுகளுக்கும் ஏற்பப் பேச்சையும், குரலையும் பயன்படுத்தத்தக்கவர் ஆவார். | • குரலுக்கு ஊடாக உணர்ச்சியை வெளிப்படுத்துதல்.<br>• பாடல்களைக் கேட்டல். | | 02 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| | | 3.6 மரபுவழி நாடகத்திற்கு அடித்தளமாக அமைகின்ற ஆடல், பாடல் வாத்தியப் பிரயோகம் என்பவற்றில் ஈடுபடக்கூடியவர் ஆவார். | • தாளம் தட்டுதல்.<br>• தாளத்துக்கேற்ப, கால் போடுதல்.<br>• வாத்தியப் பிரயோகம்<br>• பாடி நடித்தல். | | 03 |
| | | 3.7 நாட்டார் விளையாட்டுக்களில் இருந்து ஆட்டத்தைக் கட்டுரு வாக்கம் செய்ய வல்லவராவார். | • கிராமிய விளையாட்டுக்கள்.<br>• ஆட்டத்தைக் கட்டுருவாக்கல். | | 02 |
| 4.0 | இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். | 4.1 சுதேச நாட்டார் இலக்கியங் களில் இடம் பெற்றுள்ள, சிறுவர்களுக்கு உகந்த எளிமையான கதைகளையும் அவற்றின் பின்னணியையும் அறிந்தவர் ஆவார். | • சுதேச நாட்டார் கதைகளின் பின்னணி . | • பல்வேறுபட்ட நாட்டார் கதை களைத் தேடியறிந்து நயப்பார்.<br>• நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் பண்புகளை அறிந்து கூறுவார்.<br>• நாட்டார் ஆற்றுகைக் கலைகள், பழமொழிகள், விடுகதைகள் என்பவற்றிற் காணப்படும் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளங்கி முன்வைப்பார்.<br>• சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளுள் ஒன்றான கும்மியை ஆடிக் காட்டுவார்.<br>• நாட்டார் அரங்கின் முக்கியத் துவத்தை அறிந்து அவற்றைப் பேணிப் பாதுகாப்பார். | 02 |
| | | 4.2 சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளில் இடம் பெற்றுள்ள எளிமையான பாடல்களையும் அவற்றின் பின்னணியையும் அறிந்தவர் ஆவார். | • சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலை களில் இடம் பெற்றுள்ள பாடல் களின் பின்னணி. | | 03 |
| | | 4.3 சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளைத் தேடியறிந்தவர் ஆவார். | • சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலை களைத் தேடிப் பயிலுதல். | | 02 |
| | | 4.4 நாட்டார் ஆற்றுகைக் கலை களின் சமூக பண்பாட்டு வரலாற்று இயல்புகளைக் கற்றறிந்தவர் ஆவார். | • சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலை களின் சமூக பண்பாட்டு இயல்புகள். | | 02 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| | | 4.5 சமூக பண்பாட்டுப் பெறுமானமுடைய கருத்துக்களைக் கொண்டமைந்த, நாடகப் பொருத்தமான சூழமைவுகளைப் படைக்கக் கூடியவர் ஆவார்.<br><br>4.6 நாட்டார் அரங்கின் சமூக பண்பாட்டு, வரலாற்று அம்சங்களைக் கற்றுணர்ந்தவர் ஆவார். | • பின்வருவன சார்ந்த நாடகச் சூழமைவுகள்.<br>- நாட்டார் பாடல்கள்.<br>- விடுகதைகள்.<br>- பழமொழிகள்.<br>- நாட்டார் கதைகள்.<br><br>• கும்மி | | 03<br><br>03 |
| 5.0 | நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார். | 5.1 நாடக எழுத்துருவை நயப்பார்.<br><br>5.2 விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் நயந்தவர் ஆவார். | • நயத்தல் - சிறுவர் நாடகம். “பிள்ளை அழுத கண்ணீர்” - சி.ஜெயசங்கரின்.<br>- விடயப் பொருள்.<br>- கரு.<br>- பாத்திரங்கள்.<br>- சொல்லாடல்கள்.<br>- உப பாடம் (Sub Text).<br><br>• சிறுவர் நாடக ஆற்றுகையை நயத்தல்<br>- சித்திரிப்பு<br>- துணைக் கலைகளின் பயன்பாடு. | • ‘பிள்ளை அழுத கண்ணீர்’ எனும் சிறுவர் நாடக எழுத்துருவை வாசிப்பதனூடாக நாடக உத்திகள் ஒழுங்கமைக்கப் பட்டுள்ள விதத்தை அறிந் திருப்பார்.<br>• சிறுவர் நாடக எழுத்துருவின் பண்புகளை விளங்கியிருப்பார்.<br>• ‘பிள்ளை அழுத கண்ணீர்’ எனும் சிறுவர் நாடகத்தின் கரு, சொல்லாடல், பாத்திரங்களைப் பற்றி விளங்கிக் கூறுவார்.<br>• சிறுவர் நாடக ஆற்றுகைகளை நயப்பார்.<br>• சிறுவர் நாடகங்களில் நடிக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துவார். | 09<br><br>06 |

## தரம் 6 இல் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை இலகுபடுத்துவதற்கான தவணை நிலைப்பட்ட பாடவிரிப்பு

| தவணை 1 | | தவணை 2 | | தவணை 3 | | மொத்த பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| தேர்ச்சி மட்டங்கள் | பாட வேளைகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட வேளைகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட வேளைகள் | |
| 1.1<br>1.2 | 02<br>04 | 1.3<br>1.4<br>1.5<br>1.6 | 03<br>02<br>02<br>02 | 1.7<br>1.8 | 03<br>02 | 20 |
| 2.1<br>2.2<br>2.3 | 02<br>02<br>02 | 2.4<br>2.5<br>2.6 | 02<br>02<br>01 | 2.7<br>2.8<br>2.9 | 02<br>03<br>04 | 20 |
| 3.1<br>3.2 | 03<br>03 | 3.3<br>3.4<br>3.5<br>3.6 | 04<br>03<br>02<br>03 | 3.7 | 02 | 20 |
| 4.1<br>4.2<br>4.3<br>4.4 | 02<br>03<br>02<br>02 | 4.5<br>4.6 | 03<br>03 | 5.1<br>5.2 | 09<br>06 | 30 |
| | 27 | | 32 | | 31 | 90 |

# கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள்

# கணிப்பீட்டுக் கருவிகளின் தொடர்

**தேர்ச்சி** 1.0: நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.1: தாம் அறிந்து வைத்துள்ள நாட்டார் கதைகளைச் சுவைபட முன்வைக்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** 1.1: 'நாட்டார் கதைகளைக் கட்டமைத்துக் கூறுவார்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- பல்வேறு நாட்டார் கதைகளையும் அறிந்திருப்பார்.
- நாட்டார் கதைகளைக் கட்டமைத்துக் கூறுவார்.
- நாட்டார் கதைகளை எளிமையான மொழிப் பிரயோகத்துடன் கூறுவார்.
- கதை சொல்லும் பழக்கத்தைக் கொண்டிருப்பார்.
- நாட்டார் கதைகளில் பொதிந்துள்ள செய்திகள், படிப்பினைகள், விழுமியங்கள் என்பவற்றை விளங்கி, வாழ்வை வளப்படுத்தும் உந்துதலைப் பெற்றிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு பொருத்தமான யாதேனுமொரு கற்பித்தல் முறையைக் கையாள முடியும் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள்.
  - * கதை ஒவ்வொன்றிலும் கட்டமைப்புக் காணப்படுகின்றது.
  - * பொதுவாக, தொடக்கம் - நடு - முடிவு எனும் கட்டமைப்பில் கதைகள் புனையப் பட்டுள்ளன.
  - * நாட்டார் கதைகள் தொடக்கம் - நடு - முடிவு எனும் கட்டமைப்பைக் கொண்டுள்ளன.
  - * நாட்டார் கதைகள் பல உள்ளன. அவையாவன:
    - * தேவதைக் கதைகள்.
    - * பஞ்ச தந்திரக் கதைகள்.
    - * பிரதேசவாரியான நாட்டார் கதைகள் போன்றன.
  - * நாட்டார் கதைக்கெனப் பிரத்தியேகமான. கிராமியப் பாங்கான மொழிப் பிரயோகம் கையாளப்பட்டிருக்கும்.
  - * நாட்டார் கதைகளில் பெரும்பாலும் எளிமையான பண்புடைய பல்வேறு பாத்திரங்கள் காணப்படும்.
  - * நாட்டார் கதைகள் வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்துவனவாக அமையும்.
  - * நாட்டார் கதைகள் படிப்பினைகளை விளக்குவதற்காகக் கற்பனையுடன் புனையப் பட்டனவாக இருக்கும்.
- மேற்படி விடயங்களை மனதிற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்க் கண்டவாறோ அன்றேல் வேறு விதமாகவோ திட்டமிடுங்கள்.
- மாணவர் அறிந்து வைத்துள்ள நாட்டார் கதைகள் பற்றி வினவுங்கள்.
- மாணவர் எண்ணிக்கைக்கேற்ப அவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு வகைக் கதையைத் தெரிவு செய்வதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மாணவர் குழுக்களுக்குக் கதைக்குரிய காட்சித் துண்டங்களை வழங்கி, அவற்றை ஒழுங்குபடுத்திக் கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- குழுவாகச் சேர்ந்து கலந்துரையாடுவதற்கு வாய்ப்பளியுங்கள்.
- தமது குழுவுக்குரிய நாட்டார் கதையைத் தொடக்கம் - நடு - முடிவு எனும் கட்டமைப்புடன் தொடர்புபடுத்தி முன்வைப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- குழுவிலுள்ள அனைவரும் இணைந்து கதையினைப் பகுதி, பகுதியாகக் கட்டமைப்பின் வழி கூறி முடிப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

  உதாரணம்: ஒரு குழுவில் ஐந்து உறுப்பினர் இருப்பின் முதலாம் நபர் கதையை ஆரம்பித்து, ஒரு பகுதியைக் கூற, ஏனையோர் மிகுதிப் பகுதிகளை ஒழுங்குமுறையிற் கூறி முடித்தல் வேண்டும்.
- கதைக்குப் பொருத்தமான கிராமியப் பாங்கான மொழியைப் பயன்படுத்தித் தாம் தெரிவு செய்த கதையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பாத்திரங்களுக்கேற்பச் சொல்லாடல்களைப் பயன்படுத்தி, தாம் தெரிவுசெய்த கதையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- நாட்டார் கதைகளிற் பொதிந்துள்ள செய்திகள், படிப்பினைகள், விழுமியங்களை விளங்கிக் கொள்வதற்குரிய வகையிற் கலந்துரையாடுங்கள்.
- கதையினைக் கட்டமைத்துக் கூறும்போது தர்க்கரீதியான கதைத் தொடர்ச்சி இருக்க வேண்டும் என்பது பற்றி விளக்குங்கள்.
- மாணவர்களது முன்வைப்புத் தொடர்பில் சிறப்பான அம்சங்களை விதந்துரைத்துப் பாராட்டுங்கள். நலிவான அம்சங்களைச் சுட்டிக்காட்டுங்கள்.

## முதன்மைப் பதங்கள்
- நாட்டார் கதைகள்.
- தொடக்கம் - நடு - முடிவு (கட்டமைப்பு).

## தரவிருத்தி உள்ளீடுகள்
- இணையத் தகவல்கள்.
- நாட்டார் கதைகள் உள்ளடங்கிய இறுவட்டுக்கள்.
- பல்வேறு நாட்டார் கதை நூல்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்
- நாட்டார் கதைகள் தொடக்கம் - நடு - முடிவு எனும் கட்டமைப்பைக் கொண்டிருக்கும் எனக் குறிப்பிடுவார்.
- நாட்டார் கதைகளைத் தொடக்கம் - நடு - முடிவு எனக் கட்டமைத்துக் கூறுவார்.
- நாட்டார் கதைகளைத் தேடியறிந்து வாசித்து மகிழ்வார்.
- நாட்டார் கதைகளைக் கிராமியப் பாங்கான மொழிப் பிரயோகத்துடன் முன்வைப்பார்.
- நாட்டார் கதைகளைச் சுவைப்படக் கூறும் மனப்பாங்கைப் பெறுவார்.

**தேர்ச்சி** **1.0:** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **1.2:** தாம் அறிந்து வைத்துள்ள நாட்டார் கதைகளைச் சுவைபட முன்வைக்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **1.2:** 'சுவைபடக் கதை சொல்வோம்'.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :

- அறிந்த கதைகளைச் சுவைபட முன்வைக்கக்கூடிய திறன் பெற்றிருப்பார்.
- கேட்டறிந்த கதைகளை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளுவார்.
- வெவ்வேறு உணர்வுகளுக்கேற்ப உணர்ச்சி வெளிப்பாட்டுடன் கதை சொல்லுவார்.
- அவைக் கூச்சமின்றி முன்வந்து கதை கூறுவார்.
- சுவைபட முன்வைப்பதற்காக உணர்ச்சிகள், உடல்மொழிகள், முகபாவங்களைப் பயன்படுத்துவார்.
- கதை சொல்வதில் விருப்பம் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

* கதையொன்றினை மாணவர்களுக்குச் சுவைபடக் கூறுங்கள் அன்றேல் ஒலிப்பேழையின் ஊடாக வெளிப்படும் கதையினை மாணவரைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
* மாணவர்களுக்குத் தெரிந்த கதையை நயப்புணர்வுடன் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
* கதையில் வரும் பாத்திரங்களின் மனோபாவங்கள், மெய்நிலைகள், இயல்புகள் வெளிப்படும் வகையில் முன்வைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
* கேட்போர், கதையை நன்றாக விளங்கிக்கொள்ளுமாறு சொற்களை ஏற்ற இறக்கங்களுடன் தெளிவாகவும் சுவையாகவும் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
* கேட்போரின் அகக்கண்களில் கதைநிகழ்வுகள் காட்சியாகப் புலப்படுமாறு அவைக் கூச்சமின்றி அங்க அசைவுகள், முகபாவங்கள் மூலம் மெருகூட்டி முழு வகுப்பையும் ஈர்த்துக்கொள்ளச் செய்யுங்கள்.

**முதன்மைப் பதங்கள்**

- நாட்டார் கதைகள்.
- சுவைபட முன்வைத்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பல்வேறு நாட்டார் கதை நூல்கள்.
- இணையத் தகவல்கள்.
- இறுவட்டுக்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நாட்டார் கதைகளைச் சொல்வதனாலும் கேட்டபதனாலும் இரசனையை வெளியிடுவார்.
- நாட்டார் கதைக்குப் பொருத்தமான கிராமியப் பேச்சு வழக்கைப் பயன்படுத்துவார்.
- கேட்பவரின் மனதிற் பதியுமாறு கதை கூறுவார்.
- கதையில் வரும் பாத்திரங்களின் மனோபாவங்கள், இயல்புகள் வெளிக்கொணரப் பெறும் வகையில் கதையை முன்வைப்பார்.
- கதைகள் மூலம் வாழ்க்கைக்குத் தகுந்த படிப்பினைகளைப் பெறலாம் என்பதை விளங்கிக்கொள்வார்.

**உசாத்துணைகள்**

- அம்புலி மாமா கதைகள்.
- பஞ்ச தந்திரக் கதைகள்.
- ஈழத்து நாட்டுப்புறக் கதைகள்.

**தேர்ச்சி** 1.0: நாடகமும் அரங்க கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.3: பிராணிகளை அவதானித்து, அவற்றின் புறவாரியான நடத்தைகளைப் போலச்செய்யக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** 1.3: 'பிராணிகளைப் போலச்செய்வோம்'.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- போலச்செய்தல் என்பதனை அறிந்திருப்பார்.
- பிராணிகளின் நடத்தைகளை அவதானிப்பார்.
- பிராணிகளைப் போலச்செய்வார்.
- பிராணிகளிடையேயான வேறுபட்ட நடத்தைக் கோலங்களை விளங்கியிருப்பார்.
- போலச்செய்தலை நயப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:

* மாணவர்களைச் செயல் சார்ந்த கற்றல் - கற்பித்தலுக்குத் தயார் செய்யும் முகமாகச் சோடியைக் கண்டுபிடித்தல் என்னும் அரங்க விளையாட்டில் ஈடுபடுத்துங்கள்.
* மாணவர் தொகைக்கு ஏற்ப, ஓரே பிராணிகளின் இரண்டு பெயர்கள் வீதம் சீட்டுக்களில் எழுதிக் குலுக்கல் மூலம் ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு பிராணியைத் தெரிவு செய்யச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
* தான் தெரிவு செய்த பிராணி இன்னதென்று எவருக்கும் வாயாற் சொல்லக் கூடாது.
* வழங்கப்பெறும் முதல் நேர அளவிற்குள் ஒவ்வொருவரும் தத்தமது பிராணிக்குரிய மெய்யசைவுகளைச் செய்தவாறு வெளியினுள் அசைதல் வேண்டும்.
* அடுத்த நேரஅளவிற்குள் தமக்கான மெய்யசைவுகளைச் செய்வதுடன் தமது சோடியை இனம் காணவும் வேண்டும்.
* மூன்றாவது நேர அளவிற்குள் மெய்யசைவுகளாற் சோடிப் பிராணியுடன் தொடர்பாடி, அழைத்து வருதல் வேண்டும்.
* சோடியைக் கண்டறியக் காரணமாய் அமைந்தவை எவை? என்பது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* பிராணிகள், அவற்றின் இனம், உடற்பருமன், குரல் ஆகியவற்றுக்கமைய வேறுபாடுகளைக் கொண்டவை என்பதை விளங்கிக் கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
* அவதானம், கருத்தூன்றல், கற்பனை, பயிற்சி, வெளிப்படுத்தும் திறன் போன்றவற்றைக் கலந்துரையாடுங்கள்.
* போலச்செய்தல் என்பது, 'பார்க்கும் ஒன்றினை எமது உடலால், குரலால், உணர்வுகளால் மிக ஒத்தவகையில் மீளச்செய்வது' என்ற எண்ணக்கருவை விளங்கிக்கொள்ளச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
* பிராணிகளைப் புறவாரியாகப் போலச்செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் மீளவும் கலந்துரையாடுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- பிராணிகள்.
- புறவாரியான நடத்தைகள்.
- போலச்செய்தல்.

### தரவிருத்தி உள்ளீடுகள்
• விலங்குளின் பெயர்கள் எழுதப்பட்ட சீட்டுக்கள்.
• தாளப் பிரயோகத்துக்கான இசைக்கருவி.
• காட்டுன் இறுவட்டுக்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும்
- போலச்செய்தல் என்றால் என்ன என்று கூறுவார்.
- பிராணிகளைக் கூர்மையாக அவதானித்து அவற்றின் இயல்புகளைக் கூறுவார்.
- பிராணிகளைப் போலச்செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய வழிவகைகளை இனங்கண்டு கூறுவார்.
- பிராணிகளைப் போலச்செய்வார்.
- போலச்செய்தலை நயக்கும் தூண்டுதல் பெறுவார்.

### பின்தொடர் பயிற்சி
சொந்தச் சூழலிற் காணப்பெறாத விலங்கு ஒன்றினைத் தொலைக்காட்சியிலோ அன்றேல் இணையத்தளத்திலோ அவதானித்து, அதன் பண்புகள், புறவாரியான அசைவுகள் தொடர்பாகக் கற்றிந்து வர வழிப்படுத்துங்கள். உதாரணம்: டைனோசர்.

### உசாத்துணைகள்
- Animal farm.
- Animal planet போன்ற தொலைக்காட்சி அலைவரிசைகள்.





**தேர்ச்சி** **1.0:** நாடகமும் அரங்க கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **1.4:** மனிதர்களை அவதானித்து, அவர்களின் புறவாரியான நடத்தைகளைப் போலச்செய்யக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **1.4:** 'மனிதர்களைப் போலச்செய்வோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- சமூகத்தில் உள்ள பல்வேறுபட்ட மனிதர்களை அவதானிப்பார்.
- மனிதர்களிடையேயான நடத்தை வேறுபாடுகளை அறிந்திருப்பார்.
- பல்வேறுபட்ட மனிதப் பாத்திரங்களைப் போலச்செய்வார்.
- மனிதரின் நடத்தைக் கோலங்களை நயப்பார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:

* வகுப்பறையில் மாணவர்களை வட்டமாக நிற்க வழிப்படுத்துங்கள்.
* சமூகத்தில் அவதானிக்கின்ற பாத்திரங்களின் பெயர்கள் எழுதப்பெற்ற சொல்லட்டைகளை எல்லோருக்கும் வழங்குங்கள். உதாரணம்: தாய், வைத்தியர், தபாற்காரன், பழவியாபாரி போன்றன.
* வழங்கப்பெற்ற பாத்திரங்களைப் போலச்செய்வதற்குத் தம்மைத் தயார்படுத்துவற்குரிய நேரத்தை வழங்குங்கள்.
* மாணவருக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களையும் ஆலோசனைகளையும் வழங்குங்கள்.
* மாணவர் ஒவ்வொருவரும் தத்தமது பாத்திரங்களை நிகழ்த்திக் காட்டச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
* பின்வரும் விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுங்கள்.

- மனித இயல்புகள் வேறுபட்டவை.
- மனித இயல்புகளுக்கு ஏற்ப அசைவுகள், மெய்நிலைகள் வேறுபடுகின்றன.
- வகிபாகம், சூழமைவு என்பவற்றுக்கு ஏற்ப அசைவுகள் மெய்நிலைகள், மொழிக்கையாள்கை, குரலின் தன்மை, உணர்ச்சி வெளிப்பாடு என்பனவும் வேறுபடும்.
- சமூகத்திற் காணப்பெறும் மனிதர்களது புறவாரியான நடத்தைகளைக் கூர்ந்து அவதானிப்பதன் ஊடாகப் போலச்செய்தலைச் சிறப்பாக மேற்கொள்ளலாம்.

### முதன்மைப் பதங்கள்

- மனிதப் பாத்திரங்கள்.
- புறவாரியான நடத்தை.
- போலச்செய்தல்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாத்திரப் பெயர்கள் கொண்ட சொல்லட்டைகள்.
- பாத்திரங்களின் ஒளிப்படங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- சமூகத்தில் உள்ள பல்வேறுபட்ட பாத்திரங்களைக் கூர்ந்து அவதானிப்பார்.
- மனிதர்களின் வேறுபட்ட நடத்தைக் கோலங்களை இனங்காண்பார்.
- வேறுபட்ட மனிதப் பாத்திரங்களைப் போலச்செய்வார்.
- சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப, மனித நடத்தைகள் மாற்றம் பெறும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- மனிதரின் நடத்தைக் கோலங்களைச் செய்து காட்டலின் ஊடாக நயப்பார்.

## உசாத்துணைகள்

- அரங்கியல் - கலாநிதி சி.மௌனகுரு.
- ஸ்ரனிஸ்லவஸ்கியின் பார்வையில் ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.
- நடிப்பிலக்கணம் - ஜீவன்.M.A.



**தேர்ச்சி** 1.0: நாடகமும் அரங்க கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.5: இயற்கையின் தோற்றப்பாடுகளைப் போலச்செய்யக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** 1.5: ‘இயற்கையைப் போலச்செய்வோம்’.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- இயற்கையின் தோற்றப்பாடுகளைத் தொடர்ச்சியாக அவதானிப்பார்.
- இயற்கையின் தோற்றப்பாடுகளைப் போலச்செய்வார்.
- இயற்கையுடன் ஒன்றிவாழ விருப்பம் காட்டுவார்.
- இயற்கையின் கொடையை எண்ணிப் பெருமிதமுறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

* மாணவரை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச்சென்று சூழலில் உள்ள இயற்கையான காட்சிகள், பொருள்கள், நிலைமைகளை அவதானிக்கவும், இனங்காணவும், நயக்கவும் சந்தர்ப்பம் அளியுங்கள்.

* மாணவர்கள் சூழலில் அவதானித்தவற்றுட் போலச்செய்யக் கூடியவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.

* இயற்கைச் சூழலை நன்கு அவதானிப்பதன் மூலம் அவற்றின் தோற்றப்பாடுகள், அசைவுகள் என்பவற்றைப் போலச்செய்யலாம் என்பதும் அதன் மூலம் போலச்செய்யும் ஆற்றலை விருத்தி செய்ய முடியும் என்பதும் தொடர்பாக விளக்கம் அளியுங்கள்.

* மாணவர் தொகைக்கு ஏற்ப அவர்களைக் குழுக்களாக்குங்கள்.

* இயற்கைச் சூழலோடு தொடர்புடைய கடல், காற்று, மழை, இடி மின்னல், நெற்பயிர்கள் போன்றவற்றைத் தெரிவு செய்யுங்கள்.

* தெரிவு செய்த விடயங்களோடு தொடர்புடைய சம்பவங்களைக் கற்பனை செய்து போலச்செய்ய வழிபடுத்துங்கள்.

* போலச்செய்தலிற் கையாளத்தக்க நுட்பமுறைகளை விளக்குங்கள்.

* தேவையான குறிப்புகளை எடுத்துக்கொள்ள மாணவருக்கு இடமளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்**
- இயற்கைத் தோற்றப்பாடுகள். • போலச்செய்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**
- இயற்கைத் தோற்றப்பாடுகளைக் காட்டும் ஒளிப்படங்கள். • இறுவட்டுக்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**
- சூழலில் காணப்படும் இயற்கைத் தோற்றப்பாடுகளை இனம் கண்டு பெயரிடுவார்.
- இயற்கையின் தோற்றப்பாடுகளைப் போலச்செய்வார்.
- சூழலை நேசிப்பார்.
- சூழல் தொடர்பான ஒலிகளைப் போலச்செய்வார்.
- போலச்செய்தல் நுட்பங்களைப் பயன்படுத்துவார்.

**உசாத்துணைகள்**
- சிறுவர் கலைக் களஞ்சியம்.

**தேர்ச்சி** **1.0:** நாடகமும் அரங்க கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **1.6:** இயந்திரங்கள்,வாகனங்கள் போன்றவற்றைப் போலச்செய்யக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **1.6:** இயந்திரங்கள், வாகனங்களின் அசைவுகள், வடிவங்களைப் போலச்செய்வோம்.

**பாடவேளை** : 02

## கற்றற் பேறுகள்:

- இயந்திரங்கள், வாகனங்களின் அசைவுகளை அவதானிப்பார்.
- இயந்திரங்கள், வாகனங்களின் வடிவங்களை அவதானிப்பார்.
- இயந்திரங்கள், வாகனங்களின் அசைவுகள், வடிவங்களைப் போலச்செய்வார்.
- வடிவமைப்பு வேறுபாட்டிற்கேற்ப அவற்றின் அசைவுகள் வேறுபடும் என்பதை விளங்கியிருப்பார்.
- தமது உடலைப் பயன்படுத்தி இயந்திரங்கள், வாகனங்களின் வடிவங்களை ஆக்கமுடியும் என்பதை உணர்ந்திருப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:

* மாணவர்களைக் குழுக்களாக்குவதற்கு உதவக்கூடிய அரங்க விளையாட்டு ஒன்றினை விளையாட வழிப்படுத்துங்கள்
* வாகனங்கள் , இயந்திரங்களது படங்கள், சொல்லட்டைகள், விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
* ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைவாக வாகனங்கள், இயந்திரங்களைத் தமது உடலின் மூலம் கூட்டாகச் செய்வதற்குரிய தயார்படுத்தலுக்கான நேரத்தை வழங்குங்கள்.
* ஒவ்வொரு குழுவும் தமது முன்வைத்தல்களைச் செய்யச் சந்தர்ப்பமளியுங்கள்.
* தமது கருத்துக்களை வழங்க ஏனைய குழுக்களுக்கும் சந்தர்ப்பமளியுங்கள்.
* பின்வரும் விடயங்கள் வெளித்தெரியுமாறு கலந்துரையாடுங்கள்.

- வாகனங்கள் , இயந்திரங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வடிவமைப்புக்களைக் கொண்டவை.
- வாகனங்கள் , இயந்திரங்களது வகைக்கேற்ப அவற்றின் அசைவுகளும் இயக்கங்களும் வேறுபடக்கூடியவை.
- அவற்றின் வடிவங்கள், ஒலிகள், அசைவுகள் என்பவற்றை ஆழமாக அவதானிப்பதனூடாகப் போலச்செய்ய முடியும்.

## முதன்மைப் பதங்கள்

- வாகனங்கள்.
- இயந்திரங்கள்.
- போலச்செய்தல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- வாகனங்கள், இயந்திரங்களது ஒளிப்படங்கள்.
- சொல்லட்டைகள்.
- காணொளிப் படங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- உடலினைப் பயன்படுத்திப் பல்வேறு இயந்திரங்கள், வாகனங்களைப் போலச்செய்யலாம் என்பதை அறிந்திருப்பார்.
- வாகனங்கள்,இயந்திரங்களின் வடிவங்கள், அசைவுகளை ஆழமாக அவதானிக்கும் திறனை வெளிக்காட்டுவார்.
- வாகனங்கள், இயந்திரங்களின் வடிவங்கள், அசைவுகளைப் போலச்செய்வார்.
- வாகனங்கள், இயந்திரங்களின் ஒலிகளைப் போலச்செய்வார்.
- உடலினைப் பயன்படுத்திப் பல்வேறு இயந்திரங்கள் வாகனங்களைப் போலச்செய்வதில் விருப்பம் காட்டுவார்.

## உசாத்துணைகள்

- உடல் அசைவும் உடல் மொழியும் - டாக்டர்.என்.சிறிதரன்.
- நடிப்பிலக்கணம் - ஜீவன் .M.A.
- அரங்கியல் - கலாநிதி. சி.மௌனகுரு.
- நாடகப் படைப்பாக்கம் - பேராசிரியர் சே.இராமானுஜம்.



**தேர்ச்சி** 1.0: நாடகமும் அரங்க கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.7: நால்வகைச் சித்திரிப்புக்களையும் இனங்காணக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** 1.7: 'நால்வகைச் சித்திரிப்புக்களையும் அறிவோம்'.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- நால்வகைச் சித்திரிப்புக்களையும் அறிந்திருப்பார்.
- நால்வகைச் சித்திரிப்புக்களையும் பயன்படுத்திப் போலச்செய்வார்.
- போலச்செய்தலுக்கு நால்வகைச் சித்திரிப்புக்களின் அவசியத்தை உணர்ந்திருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**செய்முறை 1**

* மாணவரை வெளியொன்றுக்கு அழைத்துச் சென்று சுயாதீனமாக அசையவிடுங்கள்.
* அசையும்போது ஓர் விசில் ஓசை அன்றேல் இசைக்கருவி இசைக்கு மாணவரை உறைநிலைப்படுத்தி, பிராணி ஒன்றின் பெயரைக் கூறிப் போலச்செய்தலுக்கு இடமளியுங்கள்.
* ஒலி மூலமான கட்டளைகளை மீண்டும் வழங்கி, மனிதப் பாத்திரம், இயந்திரம், இயற்கை போன்ற அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப இயங்கச் செய்யுங்கள்.
* இச் செயற்பாட்டின் அனுபவத்தினைக் கொண்டு அப்பாத்திரங்களைச் சித்திரித்த முறைமை பற்றிக் கலந்துரையாடி, உடல்வழிச் சித்திரிப்புப் பற்றி விளக்கமளியுங்கள்.
* மீண்டும் அதே பயிற்சியினை வழங்கி, குறித்த பாத்திரத்தோடு தொடர்புடைய ஒலியினை எழுப்பச் செய்யுங்கள்.
* இவ்வாறு தொடர்ச்சியாக மேற்கொண்ட பின்னர், குரல் ஒலிகளின் மூலமும் சூழலைப் போலச்செய்யமுடியும் என்பது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* குரல்வழிச் சித்திரிப்புத் தொடர்பாக விளக்கமளியுங்கள்.
* உடல்வழி(ஆங்கிகம்), குரல்வழிச் (வாச்சிகம்) சித்திரிப்பினூடு போலச்செய்தலைச் சிறப்பாகச் செய்யமுடியும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

**செய்முறை 2**

- மாணவரைச் சோடியாக இணைந்து, தாம் விரும்பிய இரு பிராணிகளைத் தெரிவு செய்யக்கூறுங்கள்.
- அவைகளுக்கிடையிலான ஒலிவழி உரையாடலை வளர்த்துச் செல்லுமாறு அறிவுறுத்துங்கள்.
- குறித்த நேர அவகாசத்திற் கோபம், மகிழ்ச்சி, கவலை, ஏமாற்றம், பயம் போன்ற உணர்வுகளுடன் அவ்வுரையாடலை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- மேற்படி செயற்பாடுகள் வழியாகப் பெற்ற அனுபவங்களினூடு உடல்வழி, குரல்வழி, உணர்ச்சி வழிச் சித்திரிப்பின் முழுமை உணரப்படத்தக்கவகையிற் கலந்துரையாடுங்கள்.

**செயன்முறை 3:**

- சில பிராணிகளின் வேடமுகங்கள், வேடஉடைகள், துணிகள் போன்றவற்றைப் பல்வேறு இடங்களிலும் தொங்கவிடுங்கள்.
- மாணவரைத் தொகைக்கேற்பக் குழுவாகக் பிரியுங்கள்.
- விரும்பிய வேடப் பொருள்களைத் தேர்ந்தெடுக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- தேர்ந்தெடுத்த வேடப்பொருள்களுடன் ஒரு பிராணியைப் போலச்செய்ய வழிப்படுத்துங்கள்.
- போலச்செய்த அனுபவத்தினைக் கொண்டு நால்வகைச் சித்திரிப்புக்களின் இணைவு, பொருத்தப்பாடு, போலச்செய்தலில் அவற்றின் முக்கியத்துவம் என்பன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- நால்வகைச் சிதிதிரிப்புக்களின் எண்ணக்கருவை மீளவலியுறுத்துங்கள்.
- மாணவர் குறிப்பெடுப்பதற்கு இடமளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்**

- நால்வகைச் சித்திரிப்புக்கள்.
- ஆங்கிகம், வாச்சிகம்,ஸாத்விகம்,ஆகார்யம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொருத்தமான இசைக்கருவி, விசில்.
- வேடமுகங்கள், வேடஉடைகள்.
- துணிவகைகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நால்வகைச் சித்திரிப்புக்களும் எவை எனக் கூறுவார்.
- போலச்செய்வதற்கான நுட்பங்களை முன்வைப்பார்.
- நால்வகைச் சித்திரிப்பு நுட்பங்களைப் பயன்படுத்திப் போலச்செய்வார்.
- நால்வகைச் சித்திரிப்புக்களையும் பயன்படுத்திப் போலச்செய்வதன் மூலம் நயப்பை அதிகரிக்கலாம் என்பதனை உணர்வார்.
- நால்வகைச் சித்திரிப்புக்களுடன் போலச்செய்யும் செயற்பாட்டினை முழுமையாகச் செய்யமுடியும் என்ற நம்பிக்கையைப் பெறுவார்.

**உசாத்துணைகள்**

- பரதநாட்டிய சாஸ்திரம் - ஸ்ரீராம தேசிகர்.
- அரங்கு ஓர் அறிமுகம் - கா.சிவத்தம்பி, சி.மௌனகுரு, க.திலகநாதன்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் 9 (2009).

**தேர்ச்சி** **1.0:** நாடகமும் அரங்க கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **1.8:** நாடகம் என்பதனை இனங்காணக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **1.8:** 'நாடகக் கலையை அறிவோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- நாடகம் என்பதற்கான விளக்கத்தைப் பெற்றிருப்பார்.
- நாடகத்தின் அம்சங்களை அறிந்திருப்பார்.
- நாடகம் நடிப்பதில் ஆர்வம் தூண்டப்பெற்றிருப்பார்.
- நாடகத்தைப் பார்த்து நயப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
**செய்முறை 1:**

* நாடக ஆற்றுகையொன்றின் ஒரு பகுதியைக் காண்பியுங்கள்.
* ஆற்றுகையிலுள்ள பிரதான அம்சங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* மாணவர்களைக் குழுக்களாக்கிக் கலந்துரையாடப்பெற்ற அம்சங்களைப் பட்டியற்படுத்துமாறு வழிப்படுத்துங்கள். நாடகத்திற்குப் பின்வரும் அம்சங்கள் அவசியம் என்பதை இனங்கண்டுகொள்ள ஆவன செய்யுங்கள்.
    - மோதுகை.
    - பாத்திரங்கள்.
    - சொல்லாடல்.
    - கரு.
    - அரங்க வெளி.
    - நடிகன்.
    - பார்வையாளர்.
    - சம்பவங்கள்.

**செய்முறை 2:**

சிறுவர் நாடகம் ஒன்றினைப் பகுதிகளாக்கி, ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பகுதியைப் பகிர்ந்தளியுங்கள்.

- ஒவ்வொரு குழுவினரும் தத்தம் பகுதிகளை ஒழுங்குமுறையிற் சித்திரிப்பதற்கு வாய்ப் பளியுங்கள்.
- நால்வகைச் சித்திரிப்புக்களையும் பயன்படுத்திப் போலச்செய்வதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பாத்திரமேற்று நடிப்பதற்கு நடிகன் முக்கியமானவன் என்பதை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
- நாடகம் நடிகனின் கலை என்பதை விளங்கிக் கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.
- நாடகம் என்பதற்கான விளக்கத்தைச் சுருக்கமாகக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஏற்கெனவே கற்ற விடயங்களைத் தொடர்புபடுத்தி நாடகம் என்பதற்கு விளக்கமளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்**

- நாடகம்.
- பாத்திரமேற்றல்.
- நடிகன்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- சிறுவர் நாடக இறுவட்டுக்கள்.
- இணையத்தளத் தகவல்கள்.
- ஆற்றுகையின் பகுதியொன்று.

### கணிப்பீடும் மதிப்பீடும்

- நாடகம் என்பதற்கான விளக்கத்தைக் கூறுவார்.
- நாடகத்தின் பிரதான அம்சங்களை இனங்காண்பார்.
- நடிப்பதற்கான ஆர்வம் தூண்டப் பெறுவார்.
- நாடகங்களைப் பார்த்து நயப்பார்.

### உசாத்துணைகள்

- அரங்கு ஓர் அறிமுகம் (புதிய பதிப்பு 2014) - கா.சிவத்தம்பி, சி.மௌனகுரு, க.திலகநாதன்.





**தேர்ச்சி** **2.0:** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.1:** சுற்றாடலுடன் தொடர்புடைய பல்வேறு அனுபவங்களைப் படைப்பாக்கம் செய்யவல்லவர் ஆவார்.

**செயற்பாடு** **2.1:** 'அனுபவங்களைப் படைப்பாக்கம் செய்வோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- சுற்றாடலை நன்கு அவதானிப்பார்.
- சுற்றாடல்சார் அனுபவங்களைப் பெற்றிருப்பார்.
- கற்பனையை வளப்படுத்திப் படைப்பாக்கம் புரிவார்.
- சூழலை நேசிக்கும் மனப்பாங்கைக் கொண்டிருப்பார்.
- தம் அனுபவங்களைப் படைப்பாக்கம் செய்வதில் விருப்பம் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

* பல்வேறு சூழல் நிலைமைகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* ஒரு நாளிற் சந்தித்த நிகழ்ச்சிகள், நபர்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* தாம் எதிர்கொண்ட அனுபவத்திற் செல்வாக்குச் செலுத்தும் பௌதிகச் சூழல், மனிதச்சூழல் அம்சங்களை இனங்காண வழிப்படுத்துங்கள்.
* ஒவ்வொரு அனுபவங்களில் இருந்தும் பெற்றுக்கொண்ட படிப்பினைகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* சூழல் நிலைமைகள் மாறுபடும்போது அனுபவம் மாறுபடும் என்பதை விளங்கிக்கொள்ள வழிப்படுத்துங்கள்.
* மாணவரைக் குழுக்களாகவோ அன்றேல் தனியாகவோ அன்றேல் சோடியாகவோ செயற்படுவதற்குப் பின்வரும் நிலைமைகளை வழங்கிப் படைப்பாக்கம் செய்யத் தூண்டுங்கள்.
    - நாய் துரத்தும் போது தப்பி ஓட முயற்சித்தல்.
    - மழையில் குடையின்றி அகப்படல்.
    - கடற்கரைச் சுடுமணலில் காலணி (செருப்பு) இன்றி நடத்தல்.
    - கல்விச் சுற்றுலா செல்வதற்கான ஆயத்தம்.
* சூழல் அனுபவங்களை அவதானித்து படைப்பாக்கத்தைக் கற்பனையுடன் வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
* ஒருவர் அன்றேல் ஒரு குழுவின் படைப்பாக்கம் தொடர்பாக ஏனையோர் கருத்துக்களை முன்வைப்பதற்கு இடமளியுங்கள்.
* அனைத்துப் படைப்பாக்கம் தொடர்பாகவும் ஆசிரியர் தொகுத்து நோக்கி மீள வலியுறுத்தலாம்.

**முதன்மைப் பதங்கள்**

- அனுபவம்.
- படைப்பாக்கம்.
- பௌதிகச் சூழல்.
- மனிதச் சூழல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பல்வேறு சூழமைவுகளின் படங்கள்.
- இசைக்கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நாளாந்தம் எதிர்கொள்ளும் சூழமைவுகள் பல்வகைப்பட்டவை என்பதைக் கூறுவார்.
- பெற்றுக்கொண்ட அனுபவங்களைப் படைப்பாக்கம் செய்வார்.
- சூழலை அவதானிப்பதனூடு பல்வேறுபட்ட படிப்பினைகளைப் பெறுவார்.
- சிறந்த படைப்பாக்கத்துக்குச் சூழல் அனுபவங்கள் துணைசெய்கின்றன என்பதை ஏற்றுக் கொள்வார்.
- சூழல்சார் அனுபவங்கள் வாழ்வை வளம்படுத்துவதிற் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்வார்.

**உசாத்துணைகள்**

- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி- தரம் 6 (2007).

**தேர்ச்சி** **2.0:** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.2:** சுற்றாடல் சார்ந்த நிகழ்ச்சிகளையும் சூழமைவுகளையும் தழுவிப் படைப்பாக்கம் செய்யவல்லவர் ஆவார்.

**செயற்பாடு** **2.2:** 'சூழமைவுகளைப் படைப்போம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- சுற்றாடலை அவதானித்துச் சூழமைவுகளைத் தெரிவுசெய்வார்.
- சூழமைவுகள், நிகழ்ச்சிகளைப் போலச்செய்வார்.
- தாம் வாழும் சூழலிற் படைப்பாக்கம் செய்யத்தக்க சூழமைவுகள் காணப்படுவதை விளங்கிக்கொள்ளுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

* மனிதர்கள் கூட்டமாக இயங்கும் இடங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
உதாரணம்:- திருமண வைபவம், தேர்தல் கூட்டம், விளையாட்டு நிகழ்வு.

* அத்தகைய இடங்களில் நிகழும் பிரதான நிகழ்ச்சிகள் பற்றி வினவுங்கள்.

* கலந்துரையாடலின் மூலம் பெறப்பட்ட சூழமைவுகள், பாத்திரங்கள், நிகழ்ச்சிகளை அட்டவணைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

* மாணவர் எண்ணிக்கைக்கேற்ப, பொருத்தமான உத்திகளைக் கையாண்டு மாணவரைக் குழுக்களாக்குங்கள்.

* மாணவர் குழுக்களைத் தாம் விரும்பிய ஒரு சூழமைவைத் தெரிவுசெய்து கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.

* குழுவிலுள்ள அனைவரும் சேர்ந்து அச்சூழமைவில் இடம்பெறும் நிகழ்ச்சிகள், பாத்திரங்கள் பற்றிக் கலந்துரையாடித் தெளிவுபெற வழிப்படுத்துங்கள்.

* தாம் தெரிவு செய்த சூழமைவைச் சித்திரிப்பதற்கும் பொருத்தமான வகிபாகங்களை ஏற்பதற்கும் வழிப்படுத்துங்கள்.

* குழுவிலுள்ள அனைவரும் கூட்டாகச் சித்திரிப்பதற்கு வாய்ப்பளியுங்கள்.

* குழுக்களின் வேறுபட்ட சித்திரிப்புக்கள் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு இடமளியுங்கள்.

  - நாம் வாழும் சூழலில் பல்வேறு வகைப்பட்ட பாத்திரங்கள், சூழமைவுகள், நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.
  - சூழலின் நிகழ்ச்சிகள் யாவும் எமது வாழ்க்கையின் துண்டங்களே.
  - சூழமைவுகளை நன்கு அவதானிப்பதன் மூலம் அவற்றின் சிறப்பியல்புகளைக் கண்டறியலாம்.
  - நாளாந்த வாழ்வில் வேறுபட்ட சூழமைவுகள் வேறுபாடான முறைகளில் எதிர்கொள்ளப் படுகின்றன.
  - வேறுபட்ட சூழமைவுகளை எதிர்கொள்ளும்போது சூழல் - தனியாள் வேறுபாட்டுக்கேற்ப நடத்தைக் கோலங்கள், முகபாவங்கள்,உணர்ச்சி வெளிப்பாடுகள் என்பன வேறுபடும்.
  - சித்திரிப்புக்குப் பொருத்தமான சூழமைவுகளைச் சூழலிலிருந்து தெரிவு செய்து கொள்ளலாம்.
  - சூழல் நிலைமைகளை அவதானித்து,விளங்கிக்கொண்டு பாத்திரங்களுக்கு ஊடாகச் சூழமைவுகளைச் சித்திரிக்கலாம்.

**முதன்மைப் பதங்கள்**
- சூழமைவுகள்.
- துண்டம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**
- சம்பவங்களின் நிழற்படங்கள்.
- ஒளிப்பேழைகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**
- வாழ்விற் தாம் கண்ட, கேட்ட அனுபவங்களை வெளிப்படுத்துவார்.
- கற்பனையை வளப்படுத்திப் படைப்பாக்கம் புரிவார்.
- சூழமைவுகளின் வேறுபாட்டுக்கேற்ப நடத்தைக் கோலங்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள் வேறுபடும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- வாழ்க்கையில் பல்வேறுபட்ட சூழமைவுகளையும், அறைகூவல்களையும் எதிர்கொள்வதற்கு, அனுபவங்கள் உதவுகின்றன என்பதை ஏற்றுக் கொள்வார்.
- கற்பனைத் திறன் வேறுபாட்டுக்கேற்பப் படைப்பாக்கம் வேறுபடும் என்பதை ஏற்றுக் கொள்வார்.





**தேர்ச்சி** 2.0: கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.3: சுற்றாடல் சார்ந்த பல்வேறு பாத்திரங்களை ஏற்றுச் சித்திரிக்கக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** 2.3: 'பாத்திரங்களைச் சித்திரிப்போம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- சுற்றாடலிற் காணப்படும் பல்வேறு பாத்திரங்களையும் அவதானிப்பார்.
- பாத்திரங்களின் பல்வேறுபட்ட குணாம்சங்களை விளங்கிக் கொள்ளுவார்.
- பாத்திரக் குணாம்சங்களைச் சித்திரிப்பதில் விருப்பம் காட்டுவார்.
- பாத்திரக் குணாம்சங்களைச் சித்திரிக்கும் திறன் பெற்றிருப்பார்.
- பாத்திரக் குணாம்சங்களை நயப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

* மாணவர்களைச் சுயாதீனமாக வகுப்பறையில் நடக்கச் செய்யுங்கள்.
* பொருத்தமான இசைக்கருவியை இசைக்கும்போது அந்த இசையினை உள்வாங்கி, விரும்பிய அசைவுகளை மேற்கொள்ள வழிப்படுத்துங்கள்.
* பின்வரும் பாடல் ஆசிரியராற் பாடப்பெறும் போது அப்பாடலை மாணவர்கள் கேட்டுப்பாடுமாறு அறிவுறுத்துங்கள்.

  "சங்கு வெத்திலை சருகு வெத்திலை
  எங்கும் கட்டளை ராசா கட்டளை
  ராசா சொன்னா கேப்பியளோ?".

* மேற்படி பாடலில் "ராசா சொன்னா கேப்பியளோ?" என்னும் வரி பாடப்படும்போது மட்டும் மாணவர்கள் அதனைப் பாடாமல் "ஓம்" என்று கூறவேண்டும். அப்போது, ''ராசா சொல்லுறார் நரி போல நடக்கட்டாம்'' எனக் கட்டளையிட மாணவர்கள் அச்சித்திரிப்பை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள். இவ்வாறே விளையாட்டின் இடையே, ராசாவின் கட்டளையாக மாணவர்களுக்குப் பரிச்சயமான வெவ்வேறு பாத்திரங்களைச் சித்திரித்துக் காட்டச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
* மற்றைய பாடல் வரிகளை மாணவர்கள் மீளவும் பாடவேண்டும் என்று கூறுங்கள். விளையாட்டின் நிறைவாக, ராசாவின் கட்டளையாக இருவர் இருவராக மாணவர்கள் சோடி சேர வழிப்படுத்துங்கள்.
* ஒவ்வொரு குழுவுக்கும் சோடிப் பாத்திரம் கொண்ட சொல்லட்டைகள் அன்றேல் படங்களை வழங்குங்கள்.

  உதாரணமாக: தாய் - மகள், பூசகர் - பக்தர், வைத்தியர் - நோயாளி,
  நாய் - வழிப்போக்கன், பொலிஸ் - திருடன்.

* குழுக்கள் ஒவ்வொன்றும் தமது பாத்திரச் சித்திரிப்பை மேற்கொள்வதற்கான நேரத்தையும் ஆலோசனைகளையும், வாய்ப்புக்களையும் வழங்குங்கள்.
* கற்றல் - கற்பித்தற் செயன்முறையை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, நாடகக் காட்சிகள் அடங்கிய இறுவட்டுக்களைப் பயன்படுத்தலாம்.
* பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பாத்திரச் சித்திரிப்புப் பற்றி விளக்கமளியுங்கள்.

- நாம் வாழும் சூழலில் பல்வகைப்பட்ட பாத்திரங்கள் காணப்படுகின்றன. அவை மனிதர்களாகவோ அன்றேல் பிராணிகளாகவோ இருக்கலாம்.
- பாத்திரம் பற்றிய முழுமையான விளக்கத்தைப் பெற்று, பாத்திரத்தைச் சித்திரிப்பது அவசியமாகும்.
- பாத்திரச் சித்திரிப்பு வெற்றிகரமாக அமைவதற்கு அப்பாத்திரத்தின் அகப்புற இயல்புகள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு பாத்திரமும் பல்வேறு இயல்புகளைக் கொண்டிருக்கும்.
- பாத்திரச் சித்திரிப்பின் போது அதன் உணர்வு வெளிப்பாடு, மெய்ந்நிலைகள், அசைவுகள், மட்டம், சமனிலை போன்றவற்றைக் கவனத்திற் கொள்வது அவசியம்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- மனிதனின் பல்பருவ படங்கள்.
- discovery இறுவட்டு.

### கணிப்பீடும் மதிப்பீடும்

- சுற்றாடலிற் காணப்படும் பல்வேறு பாத்திரங்களையும் அறிந்து கூறுவார்.
- சூழலிற் காணப்படும் பல்வகைப் பாத்திரங்களது குணாம்சங்களை விளங்கியிருப்பார்.
- சுற்றாடலிற் காணப்படும் வெவ்வேறு பாத்திரங்களை அவதானிப்பார்.
- பாத்திரங்களைச் சித்திரிப்பதற்கான விருப்பத்தைக் கொண்டிருப்பார்.
- பல்வேறு பாத்திரங்களைக் கொண்டு நாடகங்களைச் செய்வதற்குத் தயாராவார்.

**தேர்ச்சி** **2.0:** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.4:** பிராணிகளின் உள்ளார்ந்த இயல்புகளை இனங்கண்டு புதிதளிக்கக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **2.4:** 'பிராணிகளின் உள்ளார்ந்த இயல்புகளைப் போலச்செய்வோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- புதிதளித்தல் பற்றி அறிந்திருப்பார்.
- பிராணிகளின் உள்ளார்ந்த இயல்புகளை இனங்காணுவார்.
- புதிதளித்தல் மூலம் பிராணிகளின் உள்ளார்ந்த இயல்புகளை வெளிப்படுத்துவார்.
- பிராணிகளிடையேயான உள்ளார்ந்த இயல்புகளின் வேறுபாட்டை விளங்கிக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

* இறுவட்டைப் பயன்படுத்திப் பல்வேறு பிராணிகளின் செயல்கள் அடங்கிய காட்சியை மாணவர்கள் பார்ப்பதற்கு வழிசெய்யுங்கள்.

* மாணவர்களை, அவர்களது எண்ணிக்கைக்கேற்பக் குழுக்களாகப் பிரியுங்கள்.

* அவர்கள் பார்த்த காட்சியிலிருந்து விரும்பிய பிராணி ஒன்றைத் தெரிவு செய்யச் சந்தர்ப்ப மளியுங்கள்.

* அப்பிராணியின் உள்ளார்ந்த இயல்பு பற்றிக் கலந்துரையாடி, அவற்றின் பண்புகளைப் புதிதளிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

* மாணவர்களாற் புதிதளிக்கப்பெற்ற, பிராணிகளின் வேறுபட்ட நடத்தைக் கோலங்கள் மூலம் பெறப்பெற்ற அனுபவத்தினைக் கலந்துரையாடுங்கள்.

* பிராணிகள் ஒவ்வொன்றுக்கும் வேறுவிதமான தனித்துவம் உள்ளது.

* பிராணிகளைப் புதிதளிக்கும்போது அவற்றின் உள்ளார்ந்த இயல்புகளைத் துல்லியமாகப் பிரதிபலிக்க வேண்டும்.

* மாணவர்களை மற்றொரு புதிதளித்தற் செயற்பாட்டுக்குத் தயார் செய்யுங்கள்.

* பின்வரும் சூழமைவுகளை உடனுக்குடன் வழங்கி விரும்பிய பிராணியாக, அவற்றின் உள்ளார்ந்த இயல்புகளைப் புதிதளிக்கச் செய்யுங்கள்.
    - பிராணிகளின் பாடசாலை.
    - கானகத்திற் கடும்புயல்.
    - பிராணிகளின் திருமண வைபவம்.

* புதிதளித்தற் செயற்பாட்டு அனுபவங்களினூடாகப் புதிதளித்தல் என்றால் என்ன? புதிதளித்தலின் நன்மைகள் யாவை? என்பதையும் புதிதளித்தல் மூலம் பல்வேறு நாடக சூழமைவுகளையும் செய்யமுடியும் என்பதையும் விளக்குங்கள்.

**முதன்மைப் பதங்கள்**
- உள்ளார்ந்த இயல்புகள்.
- புதிதளித்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**
- Tom and Jerry.
- Discovery.
- சிறுவர் நாடக இறுவட்டுக்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- புதிதளித்தல் என்றால் என்ன என்பது பற்றிக் கூறுவார்.
- பிராணிகளின் வேறுபட்ட உள்ளார்ந்த இயல்புகளைக் கூறுவார்.
- பிராணிகளின் உள்ளார்ந்த இயல்புகளைப் புதிதளித்தல் மூலம் சித்திரிப்பார்.
- பிராணிகளின் உள்ளார்ந்த இயல்புகளை அவதானிக்கும் பழக்கத்தை வெளிப்படுத்துவார்.

## உசாத்துணைகள்

- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் 06(2007).







**தேர்ச்சி** **2.0:** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.5:** மனித மற்றும் கற்பனைப் பாத்திரங்களின் உள்ளார்ந்த இயல்பு களைப் புதிதளிக்கக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **2.5:** 'மனித மற்றும் கற்பனைப் பாத்திரங்களின் உள்ளார்ந்த இயல்பு களைப் புதிதளிப்போம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- மனிதர்களிடம் பல்வேறு விதமான உள்ளார்ந்த இயல்புகள் இருப்பதைக் கண்டுகொள்வார்.
- அதிமானிடப் பாத்திரங்களின் தோற்றப்பாடுகளைக் கற்பனை செய்வார்.
- கற்பனையை வளப்படுத்த மனித,அதிமானிடப் பாத்திரங்களின் உள்ளார்ந்த இயல்புகளைப் புதிதளிப்பார்.
- தனியாள் வேறுபாட்டிற்கேற்பக் கற்பனைத் திறன் வேறுபடுவதை விளங்கிக்கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

* மாணவர்களை வகுப்புக்கு வெளியே அழைத்துச் சென்று சூழலில் உலவுகின்ற மனிதர்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
* பொருத்தமான ஒருவரின் வகிபாகம் ஒன்றினைத் தெரிவுசெய்து கொள்வதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
* தெரிவுசெய்யப்பெற்ற மனிதப் பாத்திரத்தின் தோற்றப்பாடுகள், மெய்ந்நிலைகள், நடத்தைக் கோலங்களை அவதானிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
* மாணவர்கள் தெரிவுசெய்து கொண்ட மனித மற்றும் கற்பனைப் பாத்திரம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
* பிறப்புத் தொடக்கம் இறப்பு வரையில் மனிதன் பல்வேறு பருவங்களைத் தாண்டுகின்றான். வாழ்க்கையில் வெவ்வேறு தோற்றமும் வேறுபட்ட உணர்வுகளும் நடத்தைக் கோலங்களும் காணப்படுகின்றன.
* ஒருவரின் பாத்திரத்தைக் கட்டியெழுப்புவதிற் பல வகிபாகங்கள் பங்களிப்புச் செய்யும்.
  உதாரணமாக:- பெண்ணொருவள் ஒரு சந்தர்ப்பத்தில் மகளாகவும், இன்னொரு சந்தர்ப்பத்தில் மாணவியாகவும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் விளையாட்டுப் போட்டியில் இல்லத் தலைவியாகவும் பல் வகிபாகங்களை ஏற்கிறாள்.
* மாணவர் தெரிவுசெய்து கொண்ட வகிபாகம் தொடர்பான விளக்கத்துடன் புதிதளிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
* மாணவர் முன்வைத்த சித்திரிப்புக்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
  - வெவ்வேறு நபர்களின் பாத்திரங்களை அன்றேல் வெவ்வேறு கற்பனைப் பாத்திரங்களைப் புதிதளிக்கலாம்.
  - புதிதளித்தல் என்பது விசேட ஆயத்தமும் ஒத்திகையும் இன்றி வெவ்வேறு பாத்திரங்களை நடிப்பு மூலம் சித்திரிப்பதாகும்.
  - கற்பனைப் பாத்திரங்களின் வெளித்தோற்றமும் உணர்வுகளும் நடத்தைக் கோலங்களும் வேறுபட்டுக் காணப்படும்.
  - புதிதளித்தல் மூலம் ஒருவரது இயல்பான சித்திரிப்புத் திறனை வெளிக்கொணர வாய்ப்புக் கிடைக்கும்.
  - புதிதளித்தல் மூலம் ஆளுமை விருத்திக்காக உறுதியான ஓர் அடித்தளத்தை அமைத்துக் கொள்ளலாம்.
* தேவையான குறிப்புக்களை மாணவர்கள் எடுத்துக்கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.

### முதன்மைப் பதங்கள்
- உள்ளார்ந்த இயல்புகள்.
- கற்பனைப் பாத்திரங்கள்.

### தரவிருத்தி உள்ளீடுகள்
- வகிபாக எண்ணக்கரு விளக்க அட்டைகள்.
- சொல்லட்டைகள்.

### கணிப்பீடும் மதிப்பீடும்
- நாளாந்த வாழ்க்கையிற் பல்வேறு வகிபாகங்களின் தன்மைகளை விளங்கிச் செயற்படுவார்.
- தனியாள் பாத்திரத்தில் வெவ்வேறு வகிபாகங்கள் அடங்கியிருக்கும் எனக் குறிப்பிடுவார்.
- அதிமானிடப் பாத்திரங்களைக் கற்பனை செய்து நிகழ்த்திக் காட்டுவார்.
- அவ் வகிபாகங்கள் வெவ்வேறுபட்ட நடத்தைகளைக் கொண்டவை என்பதை எடுத்துக் காட்டுவார்.
- அவ் வகிபாகங்களைப் புதிதளித்தல் மூலம் சித்திரித்துக் காட்டுவார்.







**தேர்ச்சி** 2.0: கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.6: பல்வேறு பொருள்களைப் பயன்படுத்திப் புதிதளிக்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** 2.6: 'பொருள்களைப் பயன்படுத்திப் புதிதளிப்போம்'.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :

- புதிதளித்தலுக்காகச் சூழலிற் கிடைக்கக்கூடிய பொருள்களைத் தெரிவுசெய்வார்.
- பொருள்களைப் பயன்படுத்தித் தனியாகவும் கூட்டாகவும் புதிதளித்தலில் ஈடுபடுவார்.
- புதிதளித்தலில் ஈடுபடும் ஆர்வத்தை வெளிப்படுத்துவார்.
- புதிதளித்தலில் பரிச்சயம் பெறுவார்.
- கற்பனை ஆற்றலை வெளிக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

* பொருள்களை அடிப்படையாகக் கொண்ட புதிதளித்தலிற் பின்வரும் விடயங்கள் எதிர்பார்க்கப் பெறுகின்றன.

- சூழலில் கிடைக்கக்கூடிய பொருள்களைப் பயன்படுத்திப் புதிதளித்தலை மேற் கொள்ளலாம்.
- யாதேனுமொரு பொருளைத் துணையாகக் கொண்டு எமது அனுபவத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்ப, பல்வேறு வகையிற் புதிதளித்தலை மேற்கொள்ளலாம்.
- புதிதளித்தல் மூலம் கற்பனா சக்தியையும் படைப்பாக்கத் திறனையும் விருத்தி செய்ய முடியும்.
- பொருளை அடிப்படையாகக் கொண்ட புதிதளித்தலினூடாக நாடகத்திற்கான கதையை, செயலியக்கங்களைக் கட்டியெழுப்ப முடியும்.
- பொருளின் பௌதிகத் தோற்றப்பாடு, அளவு, கனதி ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டு அவற்றிற்கேற்பவும் புதிதளித்தலை மேற்கொள்ளலாம்.

* பின்வருமாறு குழுச் செயற்பாட்டு முறையிலோ அன்றேல் வேறு நுட்ப முறைகளைக் கையாண்டோ புதிதளித்தலுக்கு வழிப்படுத்துங்கள்.

- சூழலிற் கிடைக்கக்கூடிய யாதேனுமொரு பொருளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் (தடி, குடை போன்றன).
- மாணவரை வட்டமாக நிற்க வழிப்படுத்துங்கள். பொருத்தமான இசையினை ஒலிக்கச் செய்யுங்கள்.
- வட்டத்தின் நடுவே ஆசிரியர் நின்றவாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- ஆசிரியர் தான் வைத்திருக்கும் பொருளை எழுமாற்றாக ஒரு மாணவருக்கு எறியும் போது, அப்பொருளைப் பற்றிப் பிடிப்பவர் அதனை வேறொரு பொருளாகப் பாவனை செய்து புதிதளித்தலை மேற்கொள்ள வழிப்படுத்துங்கள்.
- இவ்வாறாக வட்டத்தில் உள்ள அனைத்து மாணவருக்கும் சந்தர்ப்பமளியுங்கள்.
- தொடர்ந்து மாணவர் எண்ணிக்கைக்கேற்பக் குழுக்களாக்குங்கள். கூட்டாகப் புதிதளித்தலை மேற்கொள்வதற்குப் பொருத்தமான யாதேனுமொரு பொருளை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- குழுவிலுள்ள அனைவரும் இணைந்து தமக்கு வழங்கப்பட்ட பொருளைப் பயன்படுத்திக் கூட்டாகப் புதிதளித்தலைச் செய்து பார்ப்பதற்கு உரிய நேரத்தையும் ஆலோசனை களையும் வழங்குங்கள்.

- ஒவ்வொரு குழுவாகப் புதிதளித்தலைச் சித்திரித்துக் காட்டச் சந்தர்ப்பமளியுங்கள். குழு சார்ந்த கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேற்குறித்த விடயங்களின் அடிப்படையிற் சூழலில் கிடைக்கக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தித் தனியாகவும் கூட்டாகவும் புதிதளிக்க முடியும் என்பதனைத் தெளிவு படுத்துங்கள்.
- தனியான புதிதளித்தலுக்கும் கூட்டான புதிதளித்தலுக்குமிடையிலான வேறுபாடுகளை விளங்கிக்கொள்ளும் வகையிற் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- அனுபவங்கள்.
- பொருள்கள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பலவிதமான பொருள்கள்.
- வர்ணத்தாள்கள்.
- Building Blocks.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- புதிதளித்தலுக்கான நுட்பங்களை அறிந்திருப்பார்.
- சூழலிற் கிடைக்கக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தித் தனியாகவும் கூட்டாகவும் புதிதளிப்பார்.
- சூழலை அவதானிக்கும் திறனைக் காட்டுவார்.
- கற்பனை ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- புதிதளித்தலில் ஈடுபடும் விருப்பத்தைத் தெரிவிப்பார்.

## உசாத்துணைகள்

- இணையத்தளத் தகவல்கள்.



**தேர்ச்சி** **2.0:** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.7:** கூட்டாகச் சேர்ந்து நயக்கத்தக்க கதைகளைப் புனையக்கூடிய வராவார்.

**செயற்பாடு** **2.7:** 'கூட்டாகக் கதைகள் புனைவோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- கற்பனைத் திறனை வெளிக்காட்டுவார்.
- கூட்டாகச் செயற்படும் பண்பினை வெளிப்படுத்துவார்.
- கதைகளை நயப்பார்.
- ஒவ்வொருவரினது அபிப்பிராயங்களையும் மதிப்பார்.
- ஒவ்வொருவரும் கதைசொல்வதில் இணைந்துகொள்ளச் சந்தர்ப்பம் வழங்குவார்.
- உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் கதைபுனைதலில் ஈடுபடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- மாணவரை வட்டமாக நிற்கத்தக்க ஒழுங்கிற்குள் கொண்டு வாருங்கள்.
- ஆசிரியர் கதையொன்றினை ஆரம்பித்து அதனை வளர்த்துச் செல்லுமாறு ஒவ்வொரு மாணவருக்கும் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- தேவைப்படுமிடத்து உதவுங்கள்.
- கதை உருவாக்கம் தொடர்பான மாணவரின் அனுபவங்களைக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர் அறிந்து வைத்துள்ள பல்வேறு நிகழ்ச்சிகள், அனுபவங்கள் உள்ளன. அந்த அனுபவங்கள் வேறுபட்டவை.
- அனுபவங்களைக் கோர்வைப்படுத்துவதன் மூலம் சுவையான கதைகளைப் புனையலாம்.
- அவ்வாறான கதைகளை ஒருவர் தனியாகவும் பலர் சேர்ந்து கூட்டாகவும் புனையலாம்.
- குழுவில் அனைவரும் பங்களிப்புச் செய்வதாற் சுவையான கதைகளைப் புனையலாம்.
- கற்பனா சக்தியை முடுக்கி விடுவதாற் சுவையான ஆக்கங்களைப் படைக்கலாம்.
- பல்வேறு விடயங்களில் இருந்தும் கதைக்கான கருக்களைத் தெரிவு செய்யலாம்.
- ஒழுங்காகச் சேர்க்கப்பட்ட மாலை போன்று தொடக்கம் - நடு - முடிவு என ஒழுங்கு படுத்தப்பெற்ற கதைகள் அழகானவையாகும்.
- தொடர்ந்து, மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
- விலங்குகள் மற்றும் பறவைகளின் பெயர்கள், மனிதப் பாத்திரங்களின் பெயர்கள் எழுதப்பெற்ற அட்டைகளை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- வழங்கப்பெற்ற பாத்திரங்களை இணைத்துக் கதையொன்றை ஆக்க வழிப்படுத்துங்கள்.
- இடர்ப்படும் மாணவர் குழுக்களை இனங்கண்டு கதைகளை வளர்க்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- உருவாக்கிய கதை ஆக்கத்தினை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மிகச்சிறந்த கதை எது என மாணவரிடம் வினவுங்கள்.
- மிகச்சிறந்த கதையாக இருப்பதற்கான காரணங்களை வினவி, நல்ல கதைக்கான அம்சங்கள் பற்றிக் கூறுங்கள்.
- நல்ல கதைக்கான அம்சங்களாவன:
    - தொடக்கம் - நடு - முடிவு என்னும் கட்டமைப்பைக் கொண்டிருத்தல்.
    - கதையின் வடிவம்.
    - நகைச்சுவைப் பாங்கானதாகக் காணப்படுதல்.
    - அடுத்து என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பு இருத்தல்.
    - சமூகப் பெறுமானங்கள், விழுமியங்களைக் கொண்டிருத்தல்.
    - பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான முடிவுகளைக் கொண்டிருத்தல்.

### முதன்மைப் பதங்கள்

- கதை புனைதல்.
- கூட்டாகச் சேர்தல்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- கதை அட்டைகள்.
- படங்கள்.
- ஓவியங்கள்.
- பொம்மைகள்.

### கணிப்பீடும் மதிப்பீடும்

- ஏனையோர் கூறும் கதைகளைக் கேட்பதில் விருப்பம் காட்டுவார்.
- கதைகளின் சிறப்பான அம்சங்களைக் கூறுவார்.
- கதைகளைத் தேடித் திரட்ட முனைவார்.
- கதைபுனைவதில் விருப்பம் காட்டுவார்.
- கூட்டாகச் செயற்படுவதில் விருப்பம் காட்டுவார்.

### உசாத்துணைகள்

- சிறுவர் கதைகள்.
- அம்புலி மாமா கதைகள்.
- கவிஞர் துரைசிங்கம் சிறுகதைகள்.
- பஞ்ச தந்திரக் கதைகள்.
- ஈசாப் கதைகள்.



**தேர்ச்சி** 2.0: கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.8: படைப்பாற்றலை வெளிப்படுத்த வல்லவராவார்.

**செயற்பாடு** 2.81: 'கதையைப் பூர்த்தி செய்வோம்'.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- தரப்பட்ட கதைப் பகுதியை வாசித்து விளங்கிக் கொள்ளுவார்.
- கதையை வளர்த்துச் செல்லும் திறனைப் பெற்றிருப்பார்.
- கதையொன்றின் கூறுகளை விளங்கிக் கொண்டிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
* மாணவர்களை வட்டமாக அமர்ந்திருக்கப் பணியுங்கள்.
- கதையொன்றினைச் சுவையுடன் ஆரம்பியுங்கள்.
- ஆரம்பித்த கதையை ஒவ்வொருவராக வளர்த்துச் செல்லுமாறு பணியுங்கள்.
- ஒவ்வொருவரும் ஒவ்வொரு சம்பவங்களை நகர்த்தும் படி கூறுவதுடன் கதையின் பொருத்தமான வளர்ச்சியை மதிப்பீடு செய்யுங்கள்.
- கதை நகர்வு பல்வேறு சம்பவங்களாக அமைவதனையும் நகர்வதனையும் முறையாகச் சேர்க்கப்படும் தன்மையையும் மேற்பார்வை செய்யுங்கள்.
- கதையை முழுமையாகச் சொல்லப்பட்டதன் பின்னர் அக்கதை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
    * கதையின் தொடர்ச்சி.
    * சம்பவத்தின் பொருத்தமான வளர்ச்சி.
    * கதையில் வரும் பாத்திரங்கள்.
    * கதை கேட்கும்போது இருக்கின்ற இரசனை.
- பின்வருவன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்
    * கதையின் வளர்ச்சி.
    * அதன் நம்பும் படியான நகர்வு.
- மாணவர்களின் தொகைக்கு ஏற்பச் சிறு சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் முழுமையடையாத கதை ஒன்றின் பகுதிகளை வழங்குங்கள்.
  குழு 1- கதையின் முற்பகுதி.
  குழு 2 - கதையின் பிற்பகுதி.
- அப் பகுதிகளைச் சம்பவங்களாக அமையத்தக்க சூழமைவுடன் முழுமையான கதையாக அமைக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துங்கள்.
- பூர்த்தி செய்த கதையைக் குழுவில் ஒருவரை வாசிக்கச் செய்து ஏனைய குழுக்களின் அபிப்பிராயங்களைப் பெறுங்கள்.
- அவர்களின் அபிப்பிராயங்களில் இருந்தும் அவதானிப்பில் இருந்தும் பெறப்பட்ட அனுபவங் களைக் கலந்துரையாடுங்கள்.
    * சம்பவங்களின் தொடர்ச்சி.
    * கேட்பதற்குரிய இரசனை வெளிப்பாடு.
    * தொடக்கம் - நடு - முடிவு என்று கூறத்தக்க வகையில் கதைக்கு ஒரு ஒழுங்கு இருக்கும்.
    * ஒன்றுடன் ஒன்று பொருந்தி வரும் வகையிற் கோர்வைப்படுத்திக் கதையைப் பூர்த்தி செய்யலாம்.
    * கதையின் நகர்வு நம்பும்படியான பண்புடன் காணப்படவேண்டும்.
    * கற்பனையுடனும் செய்தி வெளிப்பாட்டுடனும் அழகியல் உணர்வுடனும் கதையைப் பூரணப்படுத்துவது ஆரோக்கியமானது.

### முதன்மைப் பதங்கள்

- படைப்பாற்றல்.
- அனுபவங்கள்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- மாதிரிக் கதைகள்.
- கதையின் தொடக்கப் பகுதிகள்.
- கதையின் முடிவுப் பகுதி.

### கணிப்பீடும் மதிப்பீடும்

- கதையொன்றினை இரசித்து வாசிப்பார்.
- கதையை வளர்த்துச் செல்லும் திறன் பெற்றிருப்பார்.
- கதையொன்றில் அமைய வேண்டிய பண்புகளைக் கூறுவார்.
- கதைகளைத் தேடி வாசிக்கும் ஆர்வம் பெற்றிருப்பார்.
- கதைகளைப் புனைய விருப்பம் காட்டுவார்.

### உசாத்துணைகள்

- கதைசொல்லும் கதை – பிரளயன்.

**தேர்ச்சி** **2.0:** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.8:** படைப்பாற்றலை வெளிப்படுத்த வல்லவராவார்.

**செயற்பாடு** **2.8.2:** கதைகளிலுள்ள நாடகச் சூழமைவுகளை இனங்கண்டு சிறுவர் நாடக எழுத்துருவை எழுதுவோம்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- கதையிலுள்ள நாடகச் சூழமைவை இனங்காணுவார்.
- கதையைத் தழுவிச் சிறுவர் நாடக எழுத்துரு எழுதுவார்.
- சிறுவர் நாடக எழுத்துருவைத் தேடி வாசிப்பார்.
- கற்பனைத் திறனை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

* மாணவரைக் குழுக்களாக்கிக் கதைப் பகுதிகளை வழங்குங்கள்.
- கதையிலுள்ள நாடகச் சூழமைவுகளைக் கதைக்கேற்ப ஒழுங்குபடுத்த வழிப்படுத்துங்கள்.
- ஒழுங்குபடுத்திய நாடகச் சூழமைவுகளைக் கொண்டு, நாடக எழுத்துருவை எழுத வழிப்படுத்துங்கள்.
- முன்னைய குழுச் செயற்பாட்டினை நினைவுபடுத்துங்கள். அக் குழுக்களை மீளவும் ஒன்று சேரச் செய்யுங்கள்.
- நாடகமாக்கக்கூடிய சூழமைவுகளைக் கொண்ட, நாடகப் பண்புடைய சூழமைவுகள் என்பதனாற் கருதப்பெறுவது யாது? என்பது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- குழுக்களால் ஏற்கெனவே எழுதப்பெற்ற கதைகளிற் காணப்பெறுகின்ற நாடகப் பண்புடைய சூழமைவுகளை இனங்காண வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களால் எழுதப்பெற்ற நாடகப் பண்புடைய சூழமைவுகளைக் கொண்ட கதைகளை மையமாகக் கொண்டு, சிறுவர் நாடக எழுத்துருவினை ஆக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- மாணவரால் எழுதப்பெற்ற நாடக எழுத்துருவின் பின்வரும் அம்சங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
    * நாடக எழுத்துருவின் கட்டமைப்பு.
    * கதையில் இடம்பெற்றுள்ள பாத்திரங்கள்.
    * பிரதான பாத்திரங்கள்.
    * பாத்திரங்களின் இயல்புகள்.
    * மொழிப் பயன்பாடு.
    * மோதுகையும் அதற்கான தீர்வும்.

**பின்தொடர் பயிற்சி**

மாணவர்கள் தேடிக் கொண்டுவந்த கதை ஒன்றைச் சிறுவர் நாடகமாக எழுதி வருமாறு அறிவுறுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள்**

- சுற்றாடல் சார் அனுபவம்.
- கற்பனை.
- படைப்பாக்கம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- நாட்டார் கதைகள்.
- பஞ்சதந்திரக் கதைகள்.
- ஈசாப் கதைகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கதைகளிலுள்ள நாடகச் சூழமைவுகளை இனங்காண்பார்.
- கதையைத் தழுவிச் சிறுவர் நாடக எழுத்துரு ஒன்றினை ஆக்குவார்.
- சிறுவர் நாடகங்களைத் தேடி வாசிப்பதில் விருப்பம் கொள்வார்.
- சிறுவர் நாடகப் பாத்திரங்கள் மற்றும் பாத்திர இயல்புகள் பற்றிக் கூறுவார்.
- சிறுவர் நாடகங்களைப் பார்த்து நயப்பார்.

**உசாத்துணைகள்**

நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.
கூத்தரங்கு - செயல் திறன் அரங்க இயக்க வெளியீடு.

**தேர்ச்சி** **2.0:** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.9:** கழித்தொதுக்கப்படும் பொருள்களையும் இயற்கைச் சூழலிற் கிடைக்கும் பொருள்களையும் பயன்படுத்தி ஆக்கம் புரியக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **2.9.1:** 'வேட முகங்களை ஆக்குவோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- இயற்கைச் சூழலிற் கிடைக்கும் கழித்தொதுக்கப்படும் பொருள்களை இனங்காண்பார்.
- வேடமுகங்கள் பற்றி அறிந்திருப்பார்.
- வேடமுகங்களை ஆக்குவதற்குப் பொருத்தமாகக் கழித்தொதுக்கப்படும் பொருள்களைத் தெரிவு செய்வார்.
- கழித்தொதுக்கப்படும் பொருள்களில் இருந்து எளிமையான வேடமுகத்தை ஆக்குவார்.
- கழித்தொதுக்கப்படும் பொருள்களைப் பயனுள்ள ஆக்கமாக மாற்றமுடியும் என்பதைக் கண்டுகொள்வார்.
- படைப்பாக்கச் சிந்தனையைப் பெற்றிருப்பார்.
- எத்தகைய இயற்கைப் பொருள்களையும் கழித்தொதுக்கப்பெறும் பொருளையும் படைப்பாக்கமாக மாற்றுதை வாழ்க்கைப் பழக்கமாக்க முயல்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- பல்வகைப்பட்ட வேடமுகங்கள், வேடமுகத்தின் படங்கள் என்பவற்றை வகுப்பறையிற் காட்சிப்படுத்தி, அதுபற்றிக் கலந்துரையாடுங்கள்.
- வேடமுகங்களை ஆக்குவதற்காகச் சூழலில் கிடைக்கும் கழிவுப் பொருள்கள் மற்றும் இயற்கைப் பொருள்களைச் சேகரித்து வர மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
  உதாரணம்:- தென்னோலை,கமுகம் ஓலை, கடதாசி, பன்னாடை, விதைகள் போன்றன.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, அவர்களது சுய கற்பனைக்கும் விருப்பத்திற்கும் ஏற்பச் சேகரித்து வந்த பொருள்களை அடிப்படையாகக் கொண்டு, வேடமுகங்களை ஆக்க வழிப்படுத்துங்கள்.
- ஆக்கப் பெற்ற வேடமுகங்களுக்கு வர்ணந் தீட்டுவதன் மூலமோ, இயற்கை விதைகள், மரப்பட்டைகள் போன்றவற்றை ஒட்டுவதன் மூலமோ முழுமைப்படுத்தி அழகுபடுத்த வசதியளியுங்கள்.
- மாணவர்கள் ஆக்கிய வேடமுகங்களைக் காட்சிப்படுத்தி, அவற்றை எல்லோரும் பார்வையிடவும் கருத்துக்களைப் பரிமாறவும் வாய்ப்பளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மாணவர் விளங்கிக்கொள்ளும் வகையிற் கலந்துரையாடுங்கள்.
  வேடமுகம் என்பது:-
  * வெவ்வேறு வடிவங்களைக் கொண்டவை.
  * வேறுபட்ட உணர்வுகளைக் கொண்டவை.
  * பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபட்டவை.
- வேடமுகங்களை வெவ்வேறு நுட்பமுறைகளுக்கூடாக உருவாக்கமுடியும்.
- வேடமுக உருவாக்கத்திற்காகப் பல்வேறு மூலப்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- மனிதமுகச் சாயலுக்கும், பிராணிகள் மற்றும் பறவைகளது முகச்சாயலுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன (வடிவம், வர்ணம்).
- வேடமுகப் பயன்பாட்டினூடாகச் சாதக,பாதக விளைவுகள் ஏற்படுகின்றன.
- வேடமுகங்களை நேர்த்தியாக உருவாக்கத் தொடர்பயிற்சி அவசியம்.

### முதன்மைப் பதங்கள்
- கழித்தொதுக்கப்பெறும் பொருள்கள்.
- இயற்கைச் சூழல்.
- வேடமுகம்.


### தரவிருத்தி உள்ளீடுகள்
- கூரிய கத்தி.
- பன்னாடை.
- பனையோலை.
- வாழை மடல்.
- மரப்பட்டை.
- நிறப்பூச்சு.

### கணிப்பீடும் மதிப்பீடும்
- வேடமுகங்களின் பல்வகைத் தன்மைகளை அறிந்து கூறுவார்.
- வேடமுகவாக்கத்தின் வகைப்பாடுகளைத் தெரிந்திருப்பார்.
- இயற்கைப் பொருள்கள் , கழிவுப் பொருள்களைக் கற்பனையுடன் படைப்பாக்கமாக மாற்றும் திறனை வெளிப்படுத்துவார்.
- வேடமுகத்தின் பயன்பாடுகளை எடுத்துக் கூறுவார்.
- பாத்திரச் சித்திரிப்பிற்குப் பயனுள்ள வகையில் வேடமுகங்களைப் பயன்படுத்துவதில் விருப்பம் காட்டுவார்.












**தேர்ச்சி** 2.0: கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.9: கழித்தொதுக்கப்படும் பொருள்களையும் இயற்கைச் சூழலிற் கிடைக்கும் பொருள்களையும் பயன்படுத்தி ஆக்கம் புரியக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** 2.9.2: 'எளிமையான மேடைப் பொருள்களை ஆக்குவோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- இயற்கைச் சூழலிற் கிடைக்கும் கழித்தொதுக்கப்பெற்ற பொருள்களை இனங்காணுவார்.
- கைப்பொருள்கள் , மேடைப் பொருள்கள் பற்றி அறிந்திருப்பார்.
- மேடைப் பொருள்களை ஆக்குவதற்குப் பொருத்தமான கழித்தொதுக்கப்பெறும் பொருள் களைத் தெரிவு செய்வார்.
- கழித்தொதுக்கப்பெறும் பொருள்களில் இருந்து எளிமையான மேடைப் பொருள்களை ஆக்குவார்.
- கழித்தொதுக்கப்பெறும் பொருள்களைப் பயனுள்ள ஆக்கமாக மாற்றமுடியும் என்பதை உணர்ந்திருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- பாத்திர அந்தஸ்து, குணாதிசயம், உணர்வு நிலை போன்ற பல்வேறு வெளிப்பாட்டு நிலைகளில் மேடைப் பொருள் மற்றும் கைப்பொருள் பயன்பாடு பற்றிக் கலந்துரை யாடுங்கள்.
- கிடைக்கக்கூடிய பொருள்களையும் மேடைப் பொருள், கைப்பொருள் தொடர்பான ஒளிப்படங்களையும் காட்சிப்படுத்துங்கள்.
- காட்சிப்படுத்திய கைப்பொருள்களின் நோக்கங்கள், அவற்றின் உள்ளீட்டுப் பொருள்கள், உருவாக்கும் முறைமை போன்றன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- மேடைப் பொருள், கைப்பொருள் என்பவற்றைச் செய்வதற்குப் பொருத்தமான, கழித்தொதுக்கப்பெறும் பொருள்களையும் இயற்கைச் சூழலிற் கிடைக்கும் பொருள்களையும் சேகரிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- கைப்பொருள், மேடைப் பொருள்களை யதார்த்தமானதாகவோ அன்றேல் கற்பனைத் தன்மை நிறைந்ததாகவோ தயார் செய்வது தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- கதாயுதம் ஒன்றினை ஆக்குவதற்குக் கையாளக்கூடிய முறைமைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள். அவற்றுட் பொருத்தமான முறைமைகளைத் தெரிவு செய்யச் சந்தர்ப்பமளியுங்கள்.
- கதாயுதத்தினைப் பயன்படுத்தும் நபரினது பாத்திரம், அவரது உயரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, அதன் அளவினைக் குழுவாகச் சேர்ந்து திட்டமிட வாய்ப்பளியுங்கள்.
- திட்டமிட்ட அளவிற் செய்வதற்கு ஏற்றவகையிற் பொருத்தமான கழித்தொதுக்கப்பெறும் பொருள்கள், ஒளிப்படங்களை வழங்கி அதனை ஆக்குவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- குழுவினது ஆக்கம் தொடர்பாகக் கருத்துரைக்க வழிசெய்யுங்கள்.
- மாணவர் தாமாகத் தயாரிப்பு முறையைத் தெரிவு செய்ய இடர்ப்படும் சந்தர்ப்பத்தில் றெஜிபோம் அன்றேல் குடம் ஒன்றினைத் தெரிவு செய்ய வழிப்படுத்துங்கள்.
- றெஜிபோம் அன்றேல் குடத்தின் நடுவிற் துளையிட்டு, உருளை வடிவான தடி அன்றேல் அட்டைக் குழாயினை உட்செலுத்திக் கைப்பிடியினை உருவாக்குங்கள்.

- கதாயுதத்தின் வடிவம் சரியாக வரும்வரை கடதாசிக் கீலங்களை ஒட்டி உருவத்தினைச் செப்பனிட வாய்ப்பளியுங்கள்.
- அதன் மேல் வர்ணத்தாளினையோ அன்றேல் வர்ணப் பூச்சினையோ பயன்படுத்தி மேற்பரப்பினை அலங்கரித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
- சூழலில் இலகுவிற் கிடைக்கத்தக்க பொருத்தமான வேறு பொருள்களையும் பயன்படுத்தலாம் என்பதையும் தெளிவுபடுத்துங்கள்.
  உதாரணம்:- கழிக்கப்பெற்ற றெஜிபோம், குவளைகள், பிளாஸ்ரிக் குடங்கள்,பிளாஸ்ரிக் போத்தல்கள், பலகைத் துண்டங்கள், தடிகள், வயர், தகரம், கம்பிகள், ரொபித் தாள்கள், பந்துகள், அட்டைப் பெட்டிகள் போன்றன.
- எளிமையாகச் செய்யக்கூடிய பிற கைப்பொருள்கள் மற்றும் மேடைப் பொருள்களையும் செய்யலாம்.

### முதன்மைப் பதங்கள்
- கழித்தொதுக்கப்பெறும் பொருள்கள்.
- இயற்கைச் சூழல்.
- மேடைப் பொருள்கள்.
- கைப்பொருள்கள்.
- கதாயுதம்.

### தரவிருத்தி உள்ளீடுகள்
- வர்ணத்தாள்கள்.
- பசை.
- வர்ணப் பூச்சு.
- தூரிகை.
- மேடைப் பொருள், கைப்பொருள்களின் ஒளிப்படங்கள்.
- மாதிரி உருக்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும்
- பல்வேறு வகையான கைப்பொருள்கள் மற்றும் மேடைப் பொருள்களைத் தயாரிக்கும் நுட்ப அறிவைப் பெற்றிருப்பார்.
- மேடைப் பொருள், கைப்பொருள்களின் பயன்பாடுகளை எடுத்துக் கூறுவார்.
- பாத்திர வெளிப்பாடு மற்றும் அரங்க அசைவு வியாக்கியானிப்பிற் கைப்பொருள், மேடைப் பொருள்களின் முக்கியத்துவத்தினைச் செயன்முறையாகப் புரிந்திருப்பார்.
- இயற்கை மற்றும் கழிவுப் பொருள்களைக் கொண்டு மேடைப் பொருள், கைப்பொருள்களைப் படைப்பாக்கம் செய்வார்.
- தமது அனுபவங்களை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வார்.

### உசாத்துணைகள்
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் - தரம் 6, 7 (2007, 2008).

**தேர்ச்சி** **3.0:** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.1:** தெரிந்தெடுக்கப்பெற்ற நாடக எழுத்துருவில் உள்ள சொல்லாடல் களைக் கருத்து வெளிக்கொணர்கையுடன் முன்வைக்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **3.1:** 'கருத்து வெளிப்பாட்டோடு சொல்லாடுவோம்'.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- சொல்லாடல்களுக்குப் பின்னால் கருத்து விளக்கம் இருப்பதைத் தெரிந்து கொள்ளுவார்.
- கருத்து விளக்கம் வெளிப்படச் சொல்லாடுவார்.
- சொல்லாடுவதற்குரிய நுட்பங்களை விளங்கியிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "பஞ்சவர்ண நரியார்" சிறுவர் நாடகத்தின் ஒரு பகுதியைத் தெரிவு செய்யுங்கள்.
- மாணவரைக் குழுக்களாக்கித் தெரிவு செய்யப்பட்ட ஒரே பகுதியை அனைத்துக் குழுக்களுக்கும் வழங்குங்கள்.
- பஞ்சவர்ண நரியார் சிறுவர் நாடக ஆற்றுகையின் ஒரு பகுதியைக் காண்பியுங்கள்.
- சொல்லாடலுக்குப் பின்னால் கருத்து விளக்கம் இருப்பதை விளக்குங்கள்.
- பாத்திர வேறுபாட்டுக்கேற்பச் சொல்லாடும் முறைமை வேறுபடும் என்பதை விளங்கிக் கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.
- சொல்லாடல்களுட் பொதிந்துள்ள செயல்களை இனங்காண்பதற்கு உதவுங்கள்.
- சொல்லாடலுக்குரிய நுட்பங்களைப் பயிலுவதற்கு வாய்ப்பளியுங்கள்.
- தெரிவு செய்யப்பட்ட எழுத்துருப் பகுதியை ஒவ்வொரு குழுவாகச் சொல்லாடல் நுட்பம், கருத்து வெளிப்பாட்டுடன் முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினது அளிக்கை முன்வைப்புக்களின் நிறைவிலும், ஏனைய குழுவினரது அவதானிப்புக்கள் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் தொடர்பிற் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு இடமளியுங்கள்.
    * எழுத்துருவிலுள்ள சொல்லாடல்கள் நடிப்பதை நோக்காகக் கொண்டு எழுதப்பட்டவை
    * சொல்லாடல்களுள் செயல்கள் பொதிந்திருக்கும்.
    * சொல்லாடல்கள் ஆழமான கருத்துக்களைக் கொண்டிருக்கும்.
    * சொல்லாடல்கள் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டவை.
- சொல்லாடுதற்குரிய நுட்பங்கள் பலவுள. அவை:-
    * தொனி.
    * புறத்தெறிகை.
    * வீச்சு.
    * ஏற்ற இறக்கம்.
    * மௌனம்.
    * ஒலிக்குறி.
    * மொழி.
    * கவர்ச்சி.
    * நளினம்.
    * லாவகம்.
- அனைத்துக் குழுவினதும் முன்வைப்புத் தொடர்பாக, ஆசிரியர் தமது கருத்துக்களைத் தொகுத்து மீளவலியுறுத்தலாம்.

### முதன்மைப் பதங்கள்

- சொல்லாடல்.
- சொல்லாடல் நுட்பங்கள்.
- கருத்து வெளிக்கொணர்கை.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- சொல்லாடல் அட்டைகள்.
- சொல்லாடல் இறுவட்டுக்கள்.
- ஆற்றுகை இறுவட்டுக்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும்

- சொல்லாடல்களுக்குப் பின்னாலுள்ள கருத்து விளக்கத்தை அறிந்து கூறுவார்.
- சொல்லாடலுக்குரிய நுட்பங்களைக் கையாண்டு கருத்து விளக்கத்துடன் சொல்லாடலில் ஈடுபடுவார்.
- பாத்திரங்கள் மற்றும் சூழல் வேறுபாட்டுக்கேற்ப, சொல்லாடும் முறைமை வேறுபடும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- பொருத்தமான உணர்வு வெளிப்பாட்டினடிப்படையிற் சொல்லாடலை அர்த்தமுள்ளதாக்கலாம் என்பதை உணர்வார்.
- வேறுபட்ட நாடக எழுத்துருக்களைத் தேடியறிந்து, சொல்லாடலில் ஈடுபட ஆர்வம் காட்டுவார்.

### உசாத்துணைகள்

- சிறுவர் அரங்கு - முத்து இராதாகிருஸ்ணன்.
- பஞ்சவர்ண நரியார் - குழந்தை.ம.சண்முகலிங்கம்.
- பிள்ளை அழுத கண்ணீர் - கலாநிதி.சி.ஜெய்சங்கர்.
- பஞ்சவர்ண நரியார் - நாடக இறுவட்டு.



**தேர்ச்சி** 3.0: நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.2: அசைவு முறைகளைப் பயன்படுத்தி, உடலுக்கும் உள்ளத்துக்கு மிடையிலான தொடர்பைக் கட்டியெழுப்பவல்லவர் ஆவார்.

**செயற்பாடு** 3.2: 'உடல் உளத் தொடர்புடன் அசைவுகளை மேற்கொள்வோம்.'

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- அசைவுகளை அவதானிப்பார்.
- அசைவுகளை மேற்கொள்வார்.
- அசைவுகளைக் கட்டியெழுப்புவதில் உடலுக்கும் உள்ளத்துக்கும் இடையிலான ஒத்திசைவை விளங்கிக்கொண்டிருப்பார்.
- நாடகத்தில் அசைவுகளின் முக்கியத்துவத்தை விளங்கிக் கூறுவார்.
- பல்வேறு அசைவுகளுக்கான மெய்ப்பாடுகள், நிலைகளின் அவசியத்தை உணர்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- மாணவரை வெளியில் சுயாதீனமாக உலவ இடமளியுங்கள்.
- ஓர் இசையினை எழுப்பி அதற்கேற்ப அசையவிடுங்கள்.
- மெல்லிய இசையைப் பின்னணியாக வழங்கிக்கொண்டு பின்வரும் நிலைமைகளுடன் தொடர்புபட்டு அசைவதற்கு வாய்ப்பளியுங்கள்.
    - * சகதி.
    - * சுடுமணல்.
    - * நீரோடை.
    - * நெருப்பு.
    - * கடற்கரை மணல்.
    - * கூழாங்கற் பாதை.
    - * முட்கள்.
    - * சருகுகள் போன்றவற்றினூடு நடந்து செல்வதற்கு அறிவுறுத்தல் வழங்கி வழிப்படுத்துங்கள்.
    - மாணவரது அனுபவம் தொடர்பாகப் பின்வருவன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்
    - அசைவுகள் பல்வேறு வகைப்பட்டன.
    - உள்ளத்து உணர்வுக்கேற்ப அசைவு வெளிப்பாடும் வேறுபடும்.
    - நாடகத்தில் உள்ளத்து உணர்வுகளை உடல்மொழியாலும், குரல் வழியாலும் வெளிப்படுத்தலாம்.
    - நாடகத்தில் உள்ளத்துக்கும் உடலுக்குமிடையிலான தொடர்பு அவசியம்.
    - அசைவுகளை மேற்கொள்ளும்போது.
        - * மெய்ந்நிலைகள்.
        - * சைகைகள்.
        - * குறியீடுகள்.
        - * மட்டங்கள்.
        - * பரப்புக்கள்.
        - * ஒத்திசைவு. என்பவற்றைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.
- பாத்திர வேறுபாட்டுக்கேற்ப அசைவுகள் வேறுபடும்.
- உடலுக்கும் உள்ளத்துக்கும் இடையிலான ஒத்திசைவுடனான அசைவு பயனுறுதி வாய்ந்ததாகும்.

- நாடகத்தில் அசைவுகள் முக்கியமானவை.
- கவனத்தைச் செலுத்திச் செயல்களைச் செய்யும்போது உணர்வு ஏற்படும்.
- தொடுகை காரணமாக ஏற்படும் பல்வேறு உணர்வுகளை அசைவின் மூலம் வெளிப்படுத்த முடியும்.
- வெவ்வேறு பொருள்கள் மூலம் வெவ்வேறு வகையான தொடுகை உணர்வு ஏற்படும்.
- அசைவுகளின் முககியத்துவம் தொடர்பாகத் தொகுத்துக் கூறுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- அசைவுகள்.
- உடல் உளத் தொடர்பு.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பொருத்தமான இசைக்கருவிகள்.
- அசைவுகள் தொடர்பான இறுவட்டுக்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- நாடகத்தில் அசைவுகளின் முக்கியத்துவத்தைக் கூறுவார்.
- கவனத்தைச் செலுத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- தொடுகை காரணமாக ஏற்படும் பல்வேறு உணர்வுகளை அசைவுகளின் மூலம் வெளிப்படுத்துவார்.
- உணர்வு வெளிப்பாட்டின்போது உள்ளத்துக்கும் உடலுக்குமிடையிலான ஒத்துணர்வு அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- நாடகங்களில் அசைவுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவார்.

## உசாத்துணைகள்

- உடல், குரல் ஒருங்கிணைவு - சே.இராமானுஜம், கு.முருகேசன்.
- நாடகப் படைப்பாக்கம் - சே.இராமானுஜம்.
- உடல் அசைவும் உடல் மொழியும் - டாக்டர்.என்.ஸ்ரீதரன்.
- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.
- பஞ்சவர்ண நரியார் இறுவட்டு.
- மாவை நித்தியானந்தனின் சிறுவர் நாடகங்கள்.



**தேர்ச்சி** 3.0: நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.3: பாத்திரப் பொருத்தமறிந்து குரலைப் பயன்படுத்தக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** 3.3.1: 'பாத்திரத்திற்கேற்பக் குரல்வழியாகச் சித்திரிப்போம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- பாத்திரங்களின் குணாம்சங்களை எடுத்துரைப்பார்.
- பாத்திரப் பண்புகளுக்கேற்பக் குரல்வழிச் சித்திரிப்பைச் செய்து காட்டுவார்.
- பாத்திரப் பண்புகளுக்கேற்பக் குரல் வெளிப்பாடு வேறுபடுவதை விளங்கியிருப்பார்.
- பாத்திர வெளிப்பாட்டில் குரல்வழிச் சித்திரிப்பின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொண்டிருப்பார்.
- பல்வேறு பாத்திரங்களினதும் குரல் வெளிப்பாடுகளை அவதானிக்கும் பழக்கம் பெற்றிருப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:

### செயற்பாடு 1:

- மாணவரை வெளிச் சூழலுக்கு அழைத்துச் சென்று பிராணிகள் எழுப்பும் சத்தத்தை அவதானிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அவ்வாறு அவதானித்த பாத்திரங்களின் சத்தத்தைப் பாவனை செய்யும்படி கூறுங்கள்.
- மாணவரைக் குழுவாகப் பிரித்து, குழுவிலுள்ள மாணவர் தமக்குள், தாம் விரும்பிய பிராணிப் பாத்திரத்தின் குரலொலி மூலம் உரையாடச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அப் பாத்திரங்களுக்குப் பொருத்தமான சில சொல்லாடல்களைத் தாமாகவே மேற்கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பாத்திரங்களின் சத்தங்களோடும் சொல்லாடல்களோடும் மெய்யசைவுகளையும் இணைத்து மேற்கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.

### செயற்பாடு 2 :

- பொருத்தமான வெளி ஒன்றில் மாணவரை உலாவ விடுங்கள்.
- வேறுபட்ட வயதெல்லை கொண்ட மனிதப் பாத்திரங்கள், சிரிக்கின்ற, அழுகின்ற, கெஞ்சுகின்ற செயற்பாட்டை மேற்கொள்ளும்படி கேளுங்கள்.
- வேறுபட்ட பாத்திரங்களைக் குரல்வழிச் சித்திரிப்பாற் பாவனை செய்யுமாறு கேளுங்கள். (செயற்பாட்டிற்குக் குறித்ததொரு சொல்லாடலை அன்றேல் பாடலின் வரியினை வழங்கலாம்.).
    * சிறுவன்.
    * அறிவிப்பாளர்.
    * வயோதிபர் அன்றேல் வயோதிப மாது.
    * குறத்தி.
    * பொலிஸ் அதிகாரி.
    * மக்கட் பிரதிநிதி.
- பின்வரும் விடயங்கள் குறித்து எடுத்துரையுங்கள்.
- பாத்திரங்களுக்கு ஏற்றவாறான குரற் பயன்பாட்டில் வேறுபாடுகள் உள்ளன.
- குரலின் சுருதி, லயம், தொனியோடு கூடியதாக வேறுபாடுகள் வெளிப்பட வேண்டும்.
- பாத்திரங்களின் முழுமையான வெளிப்பாட்டிற்குக் குரல்வழிச் சித்திரிப்புக்கள் உதவுகின்றன.

- பாத்திரங்களின் வயது, வகை, குணவியல்பு, உணர்ச்சி, அந்தஸ்து வேறுபாடுகளுக்கு அமையக் குரல்வழிச் சித்திரிப்பு வேறுபடும்.
- குரல்வழிச் சித்திரிப்புப் பயிற்சிகள் பாத்திரங்களைப் பொருத்தமுறப் படைப்பதற்கு உதவுகின்றன.

**முதன்மைப் பதங்கள்**

- பாத்திரக் குணாம்சங்கள்.
- குரல்வழிச் சித்திரிப்பு.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- ஒலி நாடாக்கள் - வானொலி நாடகம்.
- வர்ணனைகள்.
- மாதிரிச் செய்திகள்.
- இறுவட்டு (பல்வகை மிருக ஒலிகளைக் கொண்ட தொகுப்பு).

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பல்வேறு பாத்திரங்களின் குணாம்சங்களை அறிந்து கூறுவார்.
- பாத்திரப் பண்புக்கேற்பக் குரல்வழிச் சித்திரிப்பு வேறுபடும் என்பதை விளங்கியிருப்பார்
- பாத்திரப் பண்பறிந்து குரலைப் பிரயோகிக்கும் நுட்பங்களை முன்வைப்பார்.
- சமூகத்திற் பல்வேறுபட்ட பாத்திரங்களை அவதானிக்கும் ஆர்வத்தை வெளியிடுவார்.
- பாத்திரங்களுக்குப் பொருத்தமான குரல் வெளிப்பாட்டினூடாக இரசணை உணர்வைப் பெற்றிருப்பார்.

**உசாத்துணைகள்**

- உடல் குரல் ஒருங்கிசைவு - சே. இராமானுஜம்.
- நாடகப் படைப்பாக்க அடித்தளங்கள் - சே. இராமானுஜம்.
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர். கா. சிவத்தம்பி.
  பேராசிரியர். சி. மௌனகுரு.
  திரு. க. திலகநாதன்.

**தேர்ச்சி** **3.0:** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.3:** தெரிந்தெடுக்கப்பெற்ற நாடக எழுத்துருவில் உள்ள சொல்லாடல் களைக் கருத்து வெளிக்கொணர்கையுடன் முன்வைக்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **3.3.2:** 'ஒலிகளைப் பாவனை செய்வோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- பல்வேறு ஒலிகளை அவதானித்து வேறுபடுத்துவார்.
- ஒலிகளைப் பாவனை செய்யும் திறனை வெளிப்படுத்துவார்.
- ஒலிகளின் வேறுபாட்டை இரசனையோடு நோக்குவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:

### செயற்பாடு 1:

- மாணவரை வட்டமாக நிற்கச் செய்யுங்கள்.
- மாணவரிடம் தங்கள் உடலின் ஒவ்வொரு பாகங்களிலும் கைகளைத் தட்டி ஒலி எழுப்ப வழிப்படுத்துங்கள் (உள்ளங்கை, புறங்கை, கைப்புஜம், கன்னம் போன்றன).
- எல்லா மாணவரும் இணைந்து தமது உடற்பாகங்களிற் தட்டிக் கூட்டொலி எழுப்புவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- இவை தாளத்திற்குள் அமையாதும், தாளத்திற்குள் அமையுமாறும் மேற்கொள்ளலாம்
- இதன்மூலம் ஒலி வேறுபாடுகளை உணர்த்துங்கள்.
- மாணவரைத் தொகைக்கேற்பச் சிறு சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒரு குழு தாம் அவதானித்த அன்றேல் விரும்பிய ஓர் ஒலியினைத் தெரிவு செய்து, குழுவிலுள்ள அனைவரும் ஒரே மாதிரியான ஒலி எழுப்பும்படி கேளுங்கள்.
- மற்றைய குழுக்களிடமும் அவ்வாறு வேறு ஒலிகளை எழுப்புமாறு கேளுங்கள்.
- குழுக்களின் ஒலிப் பாவனையை ஒருவரின் சைகை மூலம் கட்டுப்படுத்தி இசைக்கச்சேரி போல நிகழ்த்தலாம்.
  - பிராணிகள், பறவைகளின் ஒலிகள்(மயில் அகவல், குயில் கூவுதல்).
  - இயற்கைச் சூழலின் ஒலிகள் (காற்று, இடி, கடலலை).
  - வாத்தியக் கருவிகளின் ஒலிகள் (தவில், பறை, நாதஸ்வரம்).
  - வாகனங்கள் , இயந்திரங்களின் ஒலிகள்.
- பின்வருவனவற்றை அழுத்திக் கூறுங்கள்.
- மாணவர் தம் உடலைப் பயன்படுத்திப் பல்வேறு ஒலிகளை எழுப்பமுடியும்.
- வெவ்வேறு ஒலிகளை எழுப்பும்போது ஒலிக்கூறுகள் (சுருதி, லயம், தொனி, இழைமானம் என்பன) வேறுபடுவதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.

### செயற்பாடு 2:

- மாணவரைக் குழுவாகப் பிரியுங்கள்.
- அவர்களிடம் அதிகாலை, காலை, இரவு ,காடு, கடற்கரை போன்ற சூழமைவுகளைத் திருவுளச் சீட்டிற் குறிப்பிட்டுக் குழுத் தலைவரிடம் கையளியுங்கள்.
- அவர்கள் குரலொலியால் அச்சூழலைச் சித்திரிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

## செயற்பாடு 3:

- சூழலிற் கிடைக்கக்கூடிய, ஒலி எழுப்பக்கூடிய பொருள்களைச் சேகரித்து வருமாறு மாணவரை அறிவுறுத்துங்கள்.
- மாணவர் தெரிவு செய்த பொருளினாற் பலவித ஒலிகளையும் எழுப்பும் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- அவ்வொலியோடு பொருந்தக்கூடிய குரலொலியை இணைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்
- கீழ்வரும் விடயங்களை அழுத்துங்கள்.
- சூழலிற் கிடைக்கப்பெறும் பொருள்களைக் கொண்டும் சிறப்பான ஒலிகளை எழுப்பமுடியும்
- வேறு வேறு விதமான உராய்வுகளால் அன்றேல் அதிர்வுகளால் குரலொலியுடன் பொருள்களின் ஒலியும் மாறுபடுவதை அறியமுடியும்.
- நாடகத்திற் பல்வேறு ஒலிகளைப் பயன்படுத்தலாம்.
- நாடகத்தின் சூழமைவுகள், நிகழ்ச்சிகள், உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதற்கு வெவ்வேறு ஒலிகளைப் பயன்படுத்தலாம்.
- நாடகத்திற் காலங்களை வெளிக்காட்ட ஒலிகளைச் சேர்ப்பதனாற் காத்திரமான சித்திரிப்பை மேற்கொள்ளலாம்.
- வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு ஒலிக்கோலங்கள் பயன்படுத்தப்படும்.

## முதன்மைப் பதங்கள்

- ஒலிகள்.
- வீச்சு.
- பாவனை செய்தல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தாளம்.
- பதிவு செய்யப்பட்ட வாகன ஒலிகள்.
- சொல்லட்டைகள் (பல் ஒலிவகைகளை உள்ளடக்கியது).

## கணிப்பீடும் மதிப்பீடும்

- ஒவ்வொருவரது செயலியக்கத்திற்கும் அதற்கேயான தனித்துவமான ஒலி காணப்படும் என்பதை உணர்த்துவார்.
- நாடகத்தின் சூழமைவை ,உணர்வை, பாத்திரங்களைச் சித்திரிக்கும் திறனை வெளிப் படுத்துவார்.
- இனிமையான ஒலிகளைச் செவிமடுப்பதில் விருப்புக் காட்டுவார்.
- ஒவ்வொரு ஒலிக்கும் வெவ்வேறு பண்புகள் உண்டு என்று கூறுவார்.
- அமைதியின் தாக்கமான தன்மையைப் புரிந்துகொள்வார்.

**தேர்ச்சி** **3.0:** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.4:** குரலின் வெவ்வேறு வீச்சுக்கள் வெளிப்படுமாறு சொல்லாடல் களைக் கையாளக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **3.4:** 'வெவ்வேறு வீச்சுக்களில் சொல்லாடுவோம்'.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- குரலின் பல்வேறு வீச்சுக்களையும் அறிந்திருப்பார்.
- வெவ்வேறு வீச்சுக்களுடன் குரலைப் புறத்தெறிவார்.
- வெவ்வேறு வீச்சுக்களுடன் சொல்லாடுவார்.
- பாத்திரப் பண்புகளின் வேறுபாட்டுக்கேற்பக் குரலின் வீச்சுக்கள் வேறுபடுவதை விளங்கிக் கொண்டிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- குரலின் ஒலியின் தூரம், அதன் அளவுப் பிரமாணம் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- உணர்வு வெளிப்பாட்டிற்குக் குரலினது வீச்சின் அவசியத்தைத் தெளிவுபடுத்துங்கள்.
- பாத்திர வெளிப்பாட்டுக்குரிய பொருத்தமான கவிதைப் பகுதியைத் தெரிவுசெய்யுங்கள். உதாரணம்:- மகாகவியின் புதியதொரு வீடு, கோடை போன்றன.
- யாதாயினும் கவிதைப் பகுதி அன்றேல் சொல்லாடற் பகுதி ஒன்றினை வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவரைக் குழுக்களாக்கி, பிறிதொரு கவிதையின் ஒரு பகுதியைத் தெரிவு செய்ய வாய்ப்பளியுங்கள்.
- அப்பகுதியை உரத்து வாசிப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பல்வேறு வீச்சுக்களில் அதனை வெளிப்படுத்த இடமளியுங்கள்.
- குரல் வீச்சுக்குரிய நுட்பங்களுடனும் பல்வேறு உணர்வுகளுடனும் குரலைப் புறத்தெறிய வாய்ப்பளியுங்கள்.
- பாத்திரப் பண்புகளின் வேறுபாட்டுக்கேற்பக் குரலின் வீச்சுக்களைப் பயன்படுத்த வழிப்படுத்துங்கள்.
- சித்திரிப்பை வெற்றிகரமானதாக்கப் பாத்திரத்திற்குரிய சொல்லாடலில் ஈடுபட வாய்ப்பளியுங்கள்.
- பின்வருவன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
    - வெவ்வேறு வீச்சுக்களில் குரலைப் புறத்தெறியலாம்.
    - குரலின் ஒலி சென்றடையும் தூரமும் அளவுப் பிரமாணமும் வீச்சு எனப்படுகிறது.
    - உணர்வு வேறுபாட்டுக்கேற்பக் குரலின் வீச்சுக்கள் மாறுபடும்.
    - பல்வேறுபட்ட வீச்சுக்களுடன் சொல்லாடலில் ஈடுபடலாம்.
    - வேறுபட்ட குரல் வீச்சுக்களின் மூலம் பல்வேறுபட்ட பாத்திரங்களை வெளிப்படுத்தலாம்.
- பின்வரும் நுட்பங்களைக் கையாண்டு, குரலின் பல்பரிமாணங்களைக் கருத்தாழத்துடன் வெளிப்படுத்தலாம்.
    * ஏற்ற இறக்கம்.
    * தொனி.
    * நளினம்.
    * லாவகம்.
    * ஒலிக்குறி.
    * புறத்தெறிகை.

* லயம்.
* உச்சரிப்புக் கோலங்கள்.

- பாத்திரங்களின் பேச்சுப் பாங்குகள் பல்வேறுபட்டவை.
- நடிப்பின் வெற்றிக்குக் குரலைப் பொருத்தமாகப் பயன்படுத்துவது அவசியம்.
- வெவ்வேறு விதமாகக் குரலைக் கட்டுப்படுத்துவதன் மூலம், சொல்லாடலை அர்த்தமுள்ளதாக்கலாம்.

### முதன்மைப் பதங்கள்

- வீச்சு.
- புறத்தெறிகை.
- அளவுப் பிரமாணம்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- கவிதை இறுவட்டுக்கள்.
- கவிதை நாடக எழுத்துருக்கள்.
- கவிதை நூல்கள்.
- நாடக பாடங்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும்

- குரலின் பல்வேறு வீச்சுக்களையும் அறிவார்.
- பல்வேறு வீச்சுக்களில் குரலைப் புறத்தெறிவார்.
- பல்வேறு வீச்சுக்குரிய நுட்பங்களுடன் குரலைப் புறத்தெறிவார்.
- பாத்திரப் பண்பு வேறுபாட்டுக்கேற்பக் குரலின் வீச்சு வேறுபடும் என்பதைப் புரிந்து கொள்வார்.
- குரலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சொல்லாடலை அர்த்தமுள்ளதாக்குவார்.

### உசாத்துணைகள்

- நடிப்பிலக்கணம் - ஜீவன். எம்.ஏ
- ஸ்ரனிஸ்லவஸ்கியின் பார்வையில் ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.

**தேர்ச்சி** 3.0: நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.5: உணர்ச்சி வேறுபாடுகளுக்கும் சூழமைவு வேறுபாடுகளுக்கும் ஏற்ப, பேச்சையும் குரலையும் பயன்படுத்தத்தக்கவர் ஆவார்.

**செயற்பாடு** 3.5: 'குரலுக்கு ஊடாக உணர்ச்சியை வெளிப்படுத்துவோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- உணர்ச்சி வேறுபாடுகளை அறிந்திருப்பார்.
- குரலுக்கூடாக உணர்ச்சிகளை வெளிப்படுத்துவார்.
- சூழமைவுகளுக்குப் பொருத்தமானவாறு உணர்ச்சிகள் வேறுபடுவதை விளங்கிக் கொண்டிருப்பார்.
- உணர்ச்சி வேறுபாடுகளுக்கேற்பக் குரல் வெளிப்பாடு வேறுபடுவதை உணர்ந்திருப்பார்.
- உணர்ச்சி வேறுபாடுகளுக்கும் சூழமைவு வேறுபாடுகளுக்கும் ஏற்பக் குரலைப் பயன்படுத்தும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- மாணவர்களைத் தம் வசதிக்கேற்ப அமர்ந்திருந்து கண்களை மூடுமாறு கூறுங்கள். சூழலிற் கேட்கும் பல்வேறு ஒலிகளையும் கவனமாகச் செவிமடுக்குமாறு கூறுங்கள். அவ்வொலிகள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- சுருக்கமான வாக்கியமொன்றினை எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அதனை அன்பு, மகிழ்ச்சி, துக்கம், கோபம், வெறுப்பு , நகைச்சுவை ஆகிய உணர்வுகளுடன் கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

  உதாரணம் :-
  - அதைத் தானே நானும் சொல்கிறேன்.
  - நான் அப்பவே சொன்னனான் தானே.
  - சொல்கிறேன் கேள்.
- இதனை வகுப்பிலுள்ள அனைத்து மாணவரும் குறைந்தது இரு உணர்வுகளுடன் வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலும், யாதாயினும் பிராணியொன்றின் ஒலியை எழுப்பி இனங்காணச் செய்யுங்கள்.
- கண்களை மூடியவாறு ஒரே விதமான ஒலி எழுப்புவோர் கூட்டமாக ஒன்றிணைதல் போன்ற பிற முறைகளையும் பின்பற்றலாம்.
- பின்வருவன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
  * நாடகத்தின் வெவ்வேறு உணர்வுகளைச் சித்திரிக்கும்போது சொல்லாடல்களின் உச்சரிப்புக் கோலம் வேறுபடும்.
  * நாளாந்த வாழ்விலும் வகிபங்கு மாற்றத்திற்கேற்பக் குரலும் பேச்சும் மாறுபடும். உதாரணம்:- ஒரு நபர்
    - தந்தையாக – வீட்டில்.
    - முகாமையாளராக – வங்கியில்.
    - மேடைப் பேச்சாளராக – நிகழ்ச்சி ஒன்றில்.
    - சகபாடியாக – நண்பர்களுடன்.

* இவ்வாறு காலம் , இடம் மாறும்போது குரல், பேச்சு , உணர்ச்சி வெளிப்பாடு என்பனவும் மாற்றமுறும். உணர்வு வேறுபாட்டிற்கேற்பக் குரல், பேச்சு வேறுபடும்.
* இயற்கைச் சூழலிற் காணப்படும் ஒலிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவது அவசியம்.

* நாடகச் சூழமைவுகளுக்கு உயிரூட்டுவதற்காகக் குரல், பேச்சு மற்றும் ஒலிகளைப் பயன்படுத்தலாம்.
* சூழல், நேரம், ஒளி ஆகியவற்றுடன் உணர்வு வேறுபாட்டுடனான ஒலிகளை இணைப்பதன் மூலம் சூழமைவுகளைக் காத்திரமான வகையிற் சித்திரிக்கலாம். பல்வேறு உணர்வுகளையும் வெளிப்படுத்துவற்காகக் குரலைக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தலாம்.

- கலந்துரையாடல் மூலம் அறிந்துகொண்ட பிரதான விடயங்களை மாணவர் குறிப்பெடுத்துக் கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.

## முதன்மைப் பதங்கள்

- உணர்வு வெளிப்பாடு.
- சூழமைவு.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- எக்ஸ்ரே தாள்கள்.
- மணி.
- மேளம்.
- சிரட்டைகள்.
- போத்தல்கள்.
- மாதிரி உரையாடற் தொகுப்புக்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- சொல்லாடல்களும், ஒலிகள், குரல்களும் நாடகமொன்றின் வெற்றிக்கு அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- பல்வேறு ஒலிகளைப் பிறப்பிப்பதற்காகப் பிரதியீட்டுப் பொருள்களைப் பயன்படுத்துவார்.
- இனிமையான ஒலிகளைச் செவிமடுப்பதில் விருப்புக் காட்டுவார்.
- இயற்கைச் சூழலில் இடம்பெறும் நிகழ்ச்சிகளை ஒலிகளினூடாக உணர்ந்து, அதற்கேற்பத் துரிதமாகச் செயற்படுவார்.
- காலம், இடம், சூழலுக்கேற்பப் பொருத்தமான முறையில் குரலுக்கூடாகத் தம் உணர்ச்சியை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி** **3.0:** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.6:** மரபுவழி நாடகத்திற்கு அடித்தளமாக அமைகின்ற ஆடல், பாடல், வாத்தியப் பிரயோகம் என்பவற்றில் ஈடுபடுபவர் ஆவார்.

**செயற்பாடு** **3.6.1:** 'பாடல்களுக்குத் தாளம் போடவும் கால் போடவும் பயில்வோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- மரபுவழி நாடகப் பாடல்களைச் செவிமடுப்பார்.
- பாடலுக்கேற்பத் தாளம் போடுவார்.
- தாளத்துக்கேற்பக் கால் போடுவார்.
- கூத்திற்கு அடிப்படையான ஆடல் பற்றி விளங்கியிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**செயன்முறை 1 :**
- கூத்துப் பாடல்கள் சிலவற்றைக் கேட்கச் செய்யுங்கள். உதாரணம்:- வடமோடி, தென்மோடிப் பாடல்கள்.
- அப் பாடல்களின் கேட்டல் அனுபவத்தினை வினவிக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மேலெழுமாறு கலந்துரையாடுங்கள்.
  - * மரபுவழிக் கூத்துப் பாடல்கள் கிராமியப் பண்புடையவை.
  - * பாத்திரப் பண்புகள், உரையாடற் பாங்கு, உணர்ச்சி வெளிப்பாடு என்பன இந்தப் பாடல்களில் வெளிப்படுகின்றன.
  - * இப் பாடல்களுக்குச் சுருதி, தாளம், என்பன அமைந்துள்ளன.
  - * இங்கு பிற்பாட்டுப் பாடும் வழமை காணப்படுகின்றது.
- அவர்கள் கேட்ட பாடல்களுள் ஒன்றுக்கான வரிகளை வழங்குங்கள்.
- அப் பாடலை மரபுவழி மெட்டுப் பிசகாது மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள்.
- பல தடவைகள் பாடிப் பரிச்சயமானதன் பின்னர் தாளப் பிரயோகத்தினை மேற்கொள்ளத் தூண்டுங்கள்.
- பாடிக்கொண்டே தாளத்தைப் போடச் செய்யுங்கள்.தாளத்தினை மனதிற்குள் போட்டவாறு தாளப் பிசகின்றிப் பாடச் செய்யுங்கள்.

**செயன்முறை 2:**
- பாடல் மெட்டும், தாளப் பிரயோகமும் லாவகமாக வரப் பெற்றதன் பின்னர் அப் பாடலை நடந்தவாறு பாடச் செய்யுங்கள்.
- நடை தாளத்துக்கு அமைகிறதா?நடக்கும்போது தாளப் பிசகின்றிப் பாடுகின்றாரா? என்பதனை அதானியுங்கள்.
- தாளத்திற்கு நடக்கக்கூடிய நிலை வந்ததன் பின்னர், ஆடலின் அடிப்படையான கால் அசைவுகளைக் கற்றுக் கொடுங்கள்.
  - * தாளத்துக்கேற்பக் கால் போடுதல்.
  - * தாளத்துக்கேற்ப அசைதல்.
  - * பாடிக்கொண்டே ஆடுதல்.
- மாணவரைக் குழுவாகப் பிரித்துப் பாடலைப் பாடி ஆடுவதற்கு வழிப்படுத்துங்கள்.

- அவ்வனுபங்களைப்பற்றிப் பின்வருன தொடர்பிற் கலந்துரையாடுங்கள்.
    * எமது பாரம்பரிய அரங்குகள் பாடுதல், ஆடுதலுடன் தொடர்புபட்டவை.
    * பாடலுக்கு மாதா - சுருதி என்றும், பிதா - தாளம் என்றும் கூறுவார்.
    * மரபுவழி நாடகங்களுக்கென வழிவழியாகப் பயன்படுத்தப் பெறுகின்ற மெட்டுக்கள், ஆடற்கோலங்கள் என்பன உள்ளன.
    * அம் மெட்டுக்கள், அவற்றுக்கான ஆடல் அசைவுக் கோலங்கள் பிசகாத வகையில் அவற்றை வகைத் தூய்மையுடன் பின்பற்றுதல் வேண்டும்.
    * தொடர்ச்சியான பயிற்சிகளில் ஈடுபடும்போதே இப்பாடல்களைச் செம்மையாகப் பாடவும் ஆடவும் முடியும்.
- வேறு இரு பாடல்களுக்கான வரிகளை வழங்கி, அவற்றினைப் பாடிக்காட்டிப் பயின்று வர வழிப்படுத்துங்கள்.
- பயிலுகையிற் பின்வருன தொடர்பாகக் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்துங்கள்.

* கூத்துப் பாடல்களைக் கேட்டல்.
* வரன்முறையான மெட்டமைப்பிற் பாடுதல்.
* சுருதி, தாளம் பற்றி விளங்கிக் கொள்ளல்.
* பாடல்களுக்குத் தாளப் பிரயோகம் செய்தல்.
* தாளகதிகளுக்கேற்பக் கால்போடுதல்.
* தாளக் கட்டுக்களுக்கு ஆடுதல்.

### முதன்மைப் பதங்கள்

- மரபுவழி.
- மெட்டமைப்பு.
- தாளப் பிரயோகம்.
- கால்போடுதல்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- கூத்துப் பாடல் இசை இறுவட்டுக்கள்.
- கூத்துப் பாடல் வரிகள் எழுதப்பெற்ற அட்டைகள்.
- சல்லரி.

### கணிப்பீடும் மதிப்பீடும்

- பாடலுக்கு அடிப்படையான நுட்பங்களை எடுத்துரைப்பார்.
- மரபுவழிப் பாடல் மெட்டுக்களுக்கமையச் சுருதி, தாளத்துடன் பாடுவார்.
- தாள கதிகளுக்குள் ஆடல் நிகழ்த்தக் கற்றிருப்பார்.
- தாளப் பிரமாணங்களுக்குள் அசைவுகளை நிகழ்த்துவது காண்பிய ரீதியாக அழகினைத் தரும் என்பதனை உணர்வார்.
- மரபு வழி நாடகங்களில் அபிமானம் கொள்வார்.

### உசாத்துணைகள்

- தமிழ்க் கூத்துக் கலை - கலாநிதி. சி.மௌனகுரு.
- தென்மோடி இசைமெட்டுக்கள் - திருமறைக்கலாமன்றம்.

**தேர்ச்சி** 3.0: நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.6: மரபுவழி நாடகத்திற்கு அடித்தளமாக அமைகின்ற ஆடல், பாடல், வாத்தியப் பிரயோகம் என்பவற்றில் ஈடுபடுபவர் ஆவார்.

**செயற்பாடு** 3.6.2: 'பாடல்களுக்கான வாத்தியப் பிரயோகம் செய்யவும் பாடி நடிக்கவும் பயில்வோம்'.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :

- சூழலிற் கிடைக்கத்தக்க வாத்தியங்களைப் பாடலுக்குப் பொருத்தமானவாறு பிரயோகிப்பார்.
- மரபுவழி நாடகப் பாடல்களைப் பாடி ஆடுவார்.
- தமது உடலைத் தாளப்பிடிப்புடன் வைத்திருப்பார்.
- பாத்திரப் பண்புடன் பாடி ஆடி நடிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- முதற் பாடத்திற் பயின்ற பாடலை மாணவர்கள் மீண்டும் பாடுவதற்குத் தூண்டுங்கள்.
- வீட்டு வேலையாக வழங்கிய பாடல்களைப் பாடுமாறு பணியுங்கள்.
- மாணவர்களுடன் சேர்ந்து பாடல்களைப் பாடியவாறு நடவுங்கள்.
- பின் ஆடியவாறு பாடுங்கள்.
- அப் பாடல்களின் பொருளை வினவுங்கள்.
- அப்பாடல்களில் அமைந்துள்ள
    - * பாத்திரம்.
    - * சூழமைவு.
    - * உணர்வு வெளிப்பாடு.
    - * அப்பாடலுக்கான சந்தர்ப்பம்.

  போன்றவற்றைக் கலந்துரையாடுங்கள்.
- அவ்விடயங்களை உள்வாங்கியவாறு பாடி நடிக்கச் செய்யுங்கள்.
- பாத்திரப் பண்புகளுடன் நடிக்கத் தூண்டுங்கள்.
- மாணவர்கள் பாடி நடிக்கும்போது மிருதங்கம் அன்றேல் டொல்கி அன்றேல் யாதேனும் ஒரு தோற்கருவியை அடிப்படைத் தாளத்திற்கேற்பப் பிரயோகம் செய்யுங்கள்.
- இசைப்பிரயோகம் அவர்களின் பாடலிலும் ஆடலிலும் நடிப்பிலும் மெருகூட்டம் செய்தமையை உணர்த்துங்கள்.
- இசையைப் பிரயோகிக்கவல்ல மாணவரை அப்பணியில் ஈடுபடுத்துங்கள்.
- தொடர்ந்து செய்முறை தொடர்பான அனுபவத்தினை விவரிக்கச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை முன்வைத்துக் கலந்துரையாடுங்கள்.
    - * கூத்துக்கள் ஆடல், பாடல் என்பவற்றின் ஒன்றிணைப்பைக் கொண்டவை.
    - * மூன்றும் பொருத்தமுற இணையும் தன்மையிலேயே கூத்து அளிக்கை சிறப்புறும்.
    - * ஆடல், பாடல்களை மெருகூட்டுவதிலும் அவற்றை நிகழ்த்துவோருக்குத் தூண்டலை வழங்குவதிலும் இசைக்கருவிகள் பெரும்பங்கு வகிக்கின்றன.
    - * பாடலுக்கு அடிப்படையானவை சுருதி, தாளம் என்பனவாகும்.

### முதன்மைப் பதங்கள்
- கூத்து.
- சுருதி.
- தாளம்.

### தரவிருத்தி உள்ளீடுகள்
- கூத்துப்பாடல் வரிகள்.
- சல்லரி.
- தோற்கருவி.
- சதங்கை.

### கணிப்பீடும் மதிப்பீடும்
- மரபுவழி நாடகப் பாடல்களின் பண்புகளைக் கூறுவார்.
- பாடல்களுக்குத் தாளம் போடுவார்.
- பாடுதல் - ஆடுதல் - நடித்தல் ஆகிய நுட்பங்களை விளங்கிக் கொள்வார்.
- மரபுவழி நாடகங்களில் நடிப்பதற்கு விருப்புக் கொள்வார்.
- மரபுவழி நாடகங்களை நயப்பார்.

### உசாத்துணைகள்
- தமிழ்க் கூத்துக்கலை – கலாநிதி. சி. மௌனகுரு.
- தெருக்கூத்தில் நடிப்பு – மு. இராமசாமி.



**தேர்ச்சி** **3.0:** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.7:** நாட்டார் விளையாட்டுக்களில் இருந்து ஆட்டத்தைக் கட்டுருவாக்கம் செய்யவல்லவர் ஆவார்.

**செயற்பாடு** **3.7.1:** 'நாட்டார் விளையாட்டுக்கள் மூலம் ஆட்டத்தைக் கட்டுருவாக்கம் செய்வோம்'.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :

- நாட்டார் விளையாட்டுக்களை அறிந்து கூறுவார்.
- நாட்டார் விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலம் தமது ஆளுமையை வெளிப்படுத்துவார்.
- நாட்டார் விளையாட்டுக்களில் ஆர்வத்தைக் காட்டுவார்.
- நாட்டார் விளையாட்டுக்களைச் சேகரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- வகுப்பறையில் மாணவர் ஒவ்வொருவருக்கும் A4 தாள்களை வழங்குங்கள்.
- அதில், தமக்குத் தெரிந்த நாட்டார் விளையாட்டுக்களை எழுதுமாறு கூறுங்கள்.
- அவர்களைச் சோடி சேர அறிவுறுத்துங்கள். அவ்விளையாட்டுக்கள் பற்றிச் சோடிகள் தமக்குட் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அவ் விளையாட்டுக்களிற் சிலவற்றைத் தெரிவுசெய்யச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அவற்றை விளையாடுவதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துங்கள்.
- விளையாட்டுப் பற்றித் தம் கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- கீழ்வரும் விடயங்களின் அடிப்படையிற் கலந்துரையாடி மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.
  - * நாட்டார் விளையாட்டுக்கள் மக்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை.
  - * சிறுவர்கள் இவ் விளையாட்டுக்களை விளையாடுவதில் ஆர்வம் காட்டுவார்.
  - * நாட்டார் விளையாட்டுக்களினூடாக ஒற்றுமை, கூட்டுமுயற்சி, தலைமைத்துவம், மகிழ்ச்சி, விட்டுக்கொடுப்பு ஆகிய பண்புகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன.
  - * நாட்டார் விளையாட்டுக்கள் மூலம் உடல், உள ஆற்றல்கள் விருத்தி செய்யப்படுகின்றன.
  - * நாட்டார் விளையாட்டுக்களில் நட்பு, மோதுகை, ஒற்றுமை, பாத்திரம், கவனம், ஆக்கபூர்வமான தளவுருவங்கள், பாடல், அசைவு போன்ற நாடகப் பண்புகள் அடங்கியுள்ளன.
  - * நாட்டார் விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் கூட்டான நயப்பைப் பெறுவதுடன், களிப்பும் அடையலாம்.

**முதன்மைப் பதங்கள்**

- நாட்டார் விளையாட்டுக்கள்.
- ஆட்டம்.
- கட்டுருவாக்கம்.

### தரவிருத்தி உள்ளீடுகள்
- நாட்டார் கதை நூல்கள்.
- இசைக்கருவிகள்.
- பந்து.
- பேணி.

### கணிப்பீடும் மதிப்பீடும்
- நாட்டார் விளையாட்டுக்கள் பற்றி எடுத்துரைப்பார்.
- நாட்டார் விளையாட்டுக்களை விளையாடுவார்.
- நாட்டார் விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலம் ஆளுமையை வெளிப்படுத்துவார்.
- நாட்டார் விளையாட்டுக்களில் ஆர்வம் கொள்வார்.
- நாட்டார் விளையாட்டுக்களைத் தேடியறிந்து சேகரிப்பார்.

### உசாத்துணைகள்
- ஊரும் வாழ்வும் - பா.இரகுவரன்.
  (தும்பளைக் கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணம்)
- வேரடி மண் - அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்.
- செயற்பாட்டுப் பூங்கா - சிறுவர் பாதுகாப்பு - நோர்வே.
- தமிழ்நாட்டு விளையாட்டுக்கள் - ஞா. தேவநேயப்பாவாணர்.
- இணையத்தளத் தகவல்கள்.



**தேர்ச்சி** **3.0:** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.7:** நாட்டார் விளையாட்டுக்களில் இருந்து ஆட்டத்தைக் கட்டுருவாக்கம் செய்யவல்லவர் ஆவார்.

**செயற்பாடு** **3.7.2:** 'விளையாட்டுக்களில் இருந்து ஆட்டத்தைக் கட்டுருவாக்குவோம்'.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :

- விளையாட்டில் இருந்து ஆட்டத்தைக் கட்டியெழுப்புவார்.
- விளையாட்டினாலும் ஆட்டத்தினாலும் மகிழ்ச்சியடைவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- பசுவும் புலியும் என்னும் நாட்டார் விளையாட்டினை மாணவரை விளையாடச் செய்யுங்கள்.
- மாணவர்கள் வெவ்வேறு வகையான ஆட்டங்களை, விளையாட்டின் மூலம் கட்டியெழுப்பத்தக்க வகையில் நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களது ஈடுபாட்டை வலுப்படுத்தும் வகையில் இசைக்கருவியைப் பயன்படுத்துங்கள்.
- விளையாட்டில் இருந்து விடுபட்டவராகி, இசைக்கேற்ப மாணவரைச் சுயாதீனமாக ஆட்டங்களைக் கட்டியெழுப்ப வழிப்படுத்துங்கள்.
- வெவ்வேறு தாளத்திற்கேற்ப மாணவர்கள் ஆட்டங்களைப் புதிது புதிதாகக் கண்டறியத்தக்க வகையில் இசைக்கருவியைப் பயன்படுத்துங்கள்.
- மாணவரை வட்டமாக வரச்செய்து கண்டறிந்த புதிய ஆட்டங்களைப் பயன்படுத்தி மீளவும் விளையாட வாய்ப்பளியுங்கள்.
- நாட்டார் விளையாட்டினூடாக, ஆட்டத்தைக் கட்டியெழுப்பத்தக்க நுட்பங்கள் மற்றும் ஆட்டத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான நாட்டார் விளையாட்டுக்கள் என்பன தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- ஆட்டத்தைக் கட்டியெழுப்பத்தக்க விளையாட்டுக்களைச் சேகரிக்க வழிப்படுத்துங்கள்

**முதன்மைப் பதங்கள்**

- நாட்டார் விளையாட்டுக்கள்.
- ஆட்டத்தைக் கட்டுருவாக்கம் செய்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மரபு நிலைப்பட்ட நாட்டார் விளையாட்டுக்கள்.
- நாட்டார் விளையாட்டு இறுவட்டுக்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நாட்டார் விளையாட்டினூடாக ஆட்டத்தைக் கட்டுருவாக்கம் செய்யலாம் என்பதை அறிந்திருப்பார்.
- நாட்டார் விளையாட்டுக்களை அடிப்படையாகக்கொண்டு ஆட்டத்தைக் கட்டுருவாக்கம் செய்யும் நுட்பங்களை முன்வைப்பார்.
- ஆட்டத்தைக் கட்டுருவாக்கம் செய்யத்தக்க நாட்டார் விளையாட்டுக்களை இனங்காண்பார்.
- பல்வேறு வகையான ஆட்டங்களை மேற்கொள்வதில் விருப்பம் காட்டுவார்.
- தமது ஆளுமையில் மேம்பாட்டைக் காட்டுவார்.

**உசாத்துணைகள்**

- தமிழ்நாட்டு விளையாட்டுக்கள் - ஞா.தேவநேயப்பாவாணர்.
- செயற்பாட்டுப் பூங்கா - சிறுவர் பாதுகாப்பு –நோர்வே.
- ஊரும் வாழ்வும் - பா.இரகுவரன்.
- நாட்டார் கலைகள் - முனைவர். ஆறு.இராமநாதன்.

**தேர்ச்சி** **4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.1:** சுதேச நாட்டார் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள, சிறுவர் களுக்கு கந்த, எளிமையான கதைகளையும் அவற்றின் பின்னணியையும் அறிந்தவர் ஆவார்.

**செயற்பாடு** **4.1:** 'நாட்டார் கதைகளைக் கற்போம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- சுதேச நாட்டார் கதைகளை வாசித்தும் கேட்டும் அறிந்திருப்பார்.
- சுதேச நாட்டார் கதைகளின் பின்னணியைக் கூறுவார்.
- நாட்டார் கதைகளைத் தேடியறிந்து நயப்பார்.
- நாட்டார் கதைகள் ஊடாக வெளிப்படும் விழுமியங்களைத் தமது சொந்த வாழ்க்கையிற் கடைப்பிடிப்பார்.
- நாட்டார் கதைகளிற் கூறப்பெறும் செய்திகள் பற்றித் தமது கருத்துக்களைக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- கிராமியச் சூழலை வெளிப்படுத்தும் அன்றேல் பண்பாட்டு நடவடிக்கைகளை நினைவுபடுத்தும் அன்றேல் கதை சொல்லும் தன்மையிலான காணொளி ஒன்றினை மாணவர் பார்வையிட வழிசெய்யுங்கள்.
- அவர்கள் பார்த்த காணொளி பற்றிய அபிப்பிராயங்களை வினவிக் கலந்துரையாடுங்கள்.
- நீங்கள் தேடிப் பெற்ற சிறந்த கதையொன்றினைப் பகுதிகளாக்கி, வெவ்வேறு மாணவர்களை வாசிக்கச் செய்து முழுமைப்படுத்துங்கள்.
- வாசித்த கதையின் பண்புகள் பற்றிப் பின்வருமாறு கலந்துரையாடுங்கள்.
  - 2.7 செயற்பாட்டில் வாசித்த கதைக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு.
  - நீங்கள் பார்த்த காணொளிக்கும் வாசித்த கதைக்கும் இடையிலான ஒற்றுமை.
  - இக் கதையிற் சொல்லப்பட்ட செய்தி அன்றேல் படிப்பினை.
  - இதிற் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி எவ்வாறு உள்ளது?
  - பழமொழிகள், மரபுச்சொற்கள் உள்ளனவா?
  - இதிலே கூறப்படும் செய்தி பின்பற்றப்படக்கூடியதா?
- மாணவர்களின் கருத்துக்கள், அபிப்பிராயங்களை அடியொற்றி ஏற்கெனவே தீர்மானித்த நாட்டார் கதைகள் பற்றிய விடயக்கூறுகள் எழுதப்பட்ட அட்டைகளை மாணவருக்கு வழங்குங்கள்.
- அந்த அட்டைகளில் எழுதப்பட்டுள்ள விடயங்களை யார் வந்து விளக்கமுடியும் என வினவுங்கள்.
- குறிப்பிட்ட நேரத்தினை வழங்குங்கள். முன்வந்து விளக்கச் செய்யுங்கள்.
  விளக்கும்போது பாராட்டுங்கள் அன்றேற் புள்ளியிடுங்கள்.
  - நாட்டார் கதைகள் வாய் வழியாகப் பரிமாற்றம் பெற்றவை.
  - அவை கிராமிய மணம் வீசுபவை.
  - எமது முன்னோரின் அனுபவங்களும் படிப்பினைகளும் அதற்குள் உள்ளன.
  - அவை பெரும்பாலும் கிராமியப் பேச்சு மொழியைக் கொண்டவை, எளிமையானவை.
  - வேடிக்கை ,வினோதப் பண்புகளையும் கொண்டவை.
  - அதிற் கூறப்படும் செய்திகள், படிப்பினைகள் நாம் பின்பற்றவேண்டியவை.
  - இவை எமது சொத்துக்கள், இவற்றைப் பேணுவது எமது கடமை.

- தத்தமது பிரதேசத்தில் நிலவும் நாட்டார் கதைகளில் ஒன்றைச் சேகரித்து வருமாறு மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.
- கொண்டு வந்த கதையை வாசிக்கச் செய்யுங்கள் அன்றேல் சொல்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஏற்கெனவே மாணவர் விளக்கிய விடயங்கள், அக்கதையில் உள்ளனவா என்பதனைக் கேட்டறியுங்கள்.
- கணிப்பீட்டுச் செயற்பாட்டுக்கூடாக நாட்டார் கதைகள் அடங்கிய கதைத் தொகுப்பு ஒன்றைச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- இவற்றின் வழியாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.
    - * சுதேச நாட்டார் கதைகள் பண்பாட்டுப் பெறுமானம் கொண்டவை.
    - * அவை உழைப்பு நிலைச் சமூகத்தில் இருந்து படிப்படியாக உருவாகியவை.
    - * அவற்றில் மனித வாழ்வுக்குரிய விழுமியங்கள் உள்ளன.

### முதன்மைப் பதங்கள்
- நாட்டார் பாடல்கள்.
- நாட்டார் கதைகள்.
- கிராமிய வழக்காறுகள்.
- வாய்வழிப் பரம்பல்.

### தரவிருத்தி உள்ளீடுகள்
- நாட்டார் கதை நூல்கள்.
- நாட்டார் கதை இறுவட்டுக்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும்
- சுதேச நாட்டார் கதைகளைப் பற்றி எடுத்துக் கூறுவார்.
- நாட்டார் கதைகளிலுள்ள விழுமியங்களைக் கூறக்கூடியவர் ஆவார்.
- நாட்டார் கதைகளைத் தேடித் தொகுப்பார்.
- நாட்டார் கதைகள் தமது மரபுவழிச் சொத்துக்கள் என்ற உணர்வினைப் பெறுவார்.
- நாட்டார் கதைகளை மதிப்பார்.

### உசாத்துணைகள்
- சிறுவர் கலைக்களஞ்சியம்.



**தேர்ச்சி** 4.0: இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 4.2: சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளில் இடம்பெற்றுள்ள எளிமையான பாடல்களையும் அவற்றின் பின்னணியையும் அறிந்தவராவார்.

**செயற்பாடு** 4.2: 'ஆற்றுகைக் கலைகளில் உள்ள பாடல்களை அறிவோம்'.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகள் பற்றி அறிவார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளில் இடம்பெற்றுள்ள எளிமையான பாடல்களை அறிவார்.
- அத்தகைய எளிமையான பாடல்களைத் தேடியறிந்து பாடுவார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளில் இடம்பெற்றுள்ள எளிமையான பாடல்களை நயப்பார்.
- நாட்டார் பாடல்களின் கலைச் செழுமையை எண்ணிப் பெருமிதமுறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளில் இடம்பெற்றுள்ள எளிமையான பாடல்களைத் தேடியறிந்து கொள்ளல்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகள்.
- ஆற்றுகைக் கலைக்கு அடிப்படையான பாடல்கள்.
- பாடல்களிற் பொதிந்துள்ள பண்பாட்டு விழுமியப் பெறுமானங்கள்.
- பாடல்களின் எளிமையான மொழிநடை.
- சுதேச நாட்டார் பாடல்களின் செழுமைத்தன்மை.
- நாட்டார் பாடல்களின் பாடல்களை மெட்டமைவை ஒட்டிப் பாடுதல்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் பாடல்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
- மாணரால் கேட்கப்பட்ட பாடல்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களால் செவிமடுக்கப்பட்ட நாட்டார் பாடலின் தன்மை பற்றி, அனைத்து மாணவரும் கருத்துக் கூற வழிப்படுத்துங்கள்.
- மாணவரை எண்ணிக்கைக்கேற்பக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் காவடி, கரகம், கும்மி போன்ற நாட்டார் ஆற்றுகைக் கலை வடிவங்களில் உள்ள பாடல்களைப் பாட வழிப்படுத்துங்கள்.
- மாணவரால் பாடப்பட்ட பாடல்கள் தொடர்பிற் பின்வருவன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
    * பாடலின் கட்டமைப்பு.
    * பாடலின் மொழிப்பாங்கு.
    * பாடலின் ஒத்திசைவு.
    * ஆட்டமுறை.
    * பாடலின் ஓசை நயம்.
    * பாடலின் வகைப்பாடு.

## பின்தொடர் பயிற்சி

- மாணவரைச் சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலை வடிவங்களில் இடம்பெற்றுள்ள எளிமையான பாடல்களைத் தேடி வரும்படி அறிவுறுத்துங்கள்.
    - கமக்காரர் தொடர்பான பாடல்கள்.
    - மதச் சடங்குப் பாடல்கள்.
    - தொழில் சார்ந்த பாடல்கள்.
    - வேடிக்கைப் பாடல்கள்.

## முதன்மைப் பதங்கள்

- சுதேச ஆற்றுகைக் கலைகள்.
- பாடல்களும் பண்பாட்டு வெளிப் பயன்பாடும்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் இறுவட்டுக்கள்.
- நாட்டார் பாடல் நூல்கள்.
- கிராமத்தின் இதயம்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளிலுள்ள பாடல்களை இனங்காண்பார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளிலுள்ள பாடல்களைப் பாடுவார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளை இனங்காண்பார்.
- சுதேச பாடல்களைப் பாடி ரசிக்கும் மனப்பாங்கைப் பெறுவார்.
- சுதேச நாட்டார் பாடல்களைத் தேடிச் சேகரிப்பார்.

## உசாத்துணை நூல்கள்

- இலங்கை நாட்டார் கதைகள் - தீபானி.
- ஈழத்து நாட்டார் பாடல்கள் - மகா வித்துவான் F.X.C. நடராசா.
- மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள்
- மன்னார் நாட்டார் பாடல்கள்



**தேர்ச்சி** **4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.3:** சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளைத் தேடியறிந்தவராவார்

**செயற்பாடு** **4.3:** 'நாட்டார் ஆற்றுகைக் கலைகளைத் தேடியறிவோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளைப் பார்ப்பார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளைப் பயிலுவார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளைப் பேணிப் பாதுகாப்பார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளை நயப்பார்.

**பாடத் திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- பின்வருவன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- காலங்காலமாகக் கிராமிய மக்களாற் தொன்று தொட்டு நிகழ்த்தப்பட்டு வருபவை நாட்டார் ஆற்றுகைக் கலைகளாகும்.
- அவை மரபுவழியாகப் பயிலப்பட்டுப் பேணப்பட்டு வருகின்றன.
- இக் கலைகளில் ஆடல், பாடல் என்பன பிரதானமாகும்.
- நாட்டார் ஆற்றுகைக் கலைகள் பக்தியும் மகிழ்வளிப்புத் தன்மையும் கொண்டவை.
- அவை தெய்வீக நம்பிக்கையுடன் சடங்காசாரத் தன்மையுடன் நிகழ்த்தப்படுவனவாயும் உள்ளன. உதாரணம் :- கும்மி, கரகம், காவடி.
- நாட்டார் கலைகள் சமூக ஒற்றுமையினை நிலை நிறுத்துவன. இவை பண்பாட்டின் அடையாளங்களாகக் காணப்படுவன. இவை பயிலப்படவும் பேணப்படவும் வேண்டியவை.
- வகுப்பறையில் நாட்டர் ஆற்றுகைக் கலைகள் அடங்கிய இறுவட்டுக்களைக் காட்சிப்படுத்துங்கள். மாணவர் அவற்றினைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- காட்சிப்படுத்தப்படும் நாட்டார் ஆற்றுகைக் கலைகளை இனங்காண வழிப்படுத்துங்கள்.
- குறிப்பிட்ட நாட்டார் ஆற்றுகைக் கலை வடிவத்தின் ஒரு பகுதிப் பாடல்களைப் பாடி மனப்பாடம் செய்வதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- குறித்த பாடற் பகுதியை இராகத்துடன் பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- குறித்த பாடற் பகுதிக்குப் பொருத்தமான ஆட்டங்களைப் பயிற்றுவியுங்கள்.
- நாட்டார் ஆற்றுகை வடிவங்களின் சில பகுதிகளை ஆடிக்காட்டுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள். ஆட்டத்திற்குரிய படிமுறைகளைச் செய்முறை ரீதியாக விளக்குங்கள்.

**முதன்மைப் பதங்கள்**
- சுதேச ஆற்றுகைக் கலைகள்.
- கிராமிய வடிவங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**
- கிராமியக் கலை வடிவங்களின் இறுவட்டுக்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகள் பற்றி அறிந்து கூறுவார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலை வடிவங்களை இனங்காண்பார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளை நிகழ்த்திக் காட்டுவார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளை நயப்பார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளைப் பேணிப் பாதுகாப்பார்.

**தேர்ச்சி** 4.0: இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 4.4: சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்று இயல்புகளைக் கற்றறிந்தவராவார்.

**செயற்பாடு** 4.4: 'சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்று அம்சங்களை அறிவோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் பண்புகளை அறிந்து கூறுவார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளங்கி முன்வைப்பார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளை மதிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- வெவ்வேறு மக்கட் பிரிவினருக்கிடையே காணப்படும் தனித்துவமான நாட்டார் ஆற்றுகை வடிவங்களைப் பிரித்தறிந்து கொள்ள உதவுங்கள்.
- தமக்கென அடையாளப்படுத்தப்பட்ட நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளங்கிக் கொள்ள உதவுங்கள்.
- நாட்டார் ஆற்றுகைக் கலை வடிவங்கள் எக்காலப்பகுதியில் நிகழ்த்தப்படுகின்றன என்பது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ஒவ்வொரு நாட்டார் ஆற்றுகைக் கலைகளுக்கூடாகவும் கூறப்படும் வெவ்வேறு கருத்துக்களையும் விழுமியங்களையும் உய்த்துணர வழிப்படுத்துங்கள்.
- அவை தொடர்பாகப் பின்வருவற்றை வலியுறுத்துங்கள்.
    - * நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் சமூகப் பெறுமானம்.
    - * அதன் நம்பிக்கை.
    - * சமூக விழுமியங்கள்.
    - * சந்ததி சந்ததியாகத் தொடரும் தன்மை.

**முதன்மைப் பதங்கள்**
- நாட்டார் ஆற்றுகைக் கலைகள்.
- ஆடல், பாடல், கதை சொல்லல்.
- நாட்டார் கலையின் விழுமியங்கள்.
- சந்ததிக் கையளிப்பு.

**தரவிருத்தி உள்ளீடுகள்**
- சுதேச நாட்டார் கலை வடிவங்கள்.
  (மட்டக்களப்பு, மலையகம், மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை)

**கணிப்பீடும் மதிப்பீடும்**
- பல்வேறு நாட்டார் ஆற்றுகைக் கலை வடிவங்களைத் தேடியறிவார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலை வடிவங்களின் பண்புகளைக் கூறுவார்.
- நாட்டார் ஆற்றுகைக் கலை வடிவங்கள் பல்வேறு சமூகப் பிரிவினைகளை மையமாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றமையை ஏற்றுக் கொள்வார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளங்கிக் கொள்வார்.
- சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளை மதிப்பார்.

**தேர்ச்சி** **4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.5:** சமூக, பண்பாட்டுப் பெறுமானமுடைய கருத்துக்களைக் கொண்டமைந்த நாடகப் பொருத்தமான சூழமைவுகளைப் படைக்கக்கூடியவர் ஆவார.

**செயற்பாடு** **4.5:** 'நாட்டார் கலை இலக்கியங்களில் இருந்து நாடகப் பொருத்தமான சூழமைவுகளைப் படைப்போம்'.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- விடுகதைகள், பழமொழிகள் என்பவற்றைத் தேடி அறிவார்.
- அவற்றிற் காணப்படும் சமூக, பண்பாட்டுப் பெறுமானமுடைய கருத்துக்களை இனங் காணுவார்.
- அக் கருத்துக்களைக் கொண்டு நாடகச் சூழமைவுகளைப் படைப்பார்.
- சமூக, பண்பாட்டுப் பெறுமானங்களை மதிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**செயன்முறை 1:**

- நாட்டார் பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள், கதைகள் ஆகியவற்றின் மாதிரிகைகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- தேடிச் சேகரித்த நாட்டார் பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள், கதைகளில் உள்ள விடயப் பொருளை, ஏற்புடைய பொருத்தமான கற்பித்தல் முறையினூடாக மாணவரை இனங்காணச் செய்யுங்கள்.
- பின்வருவன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்
  - * நாட்டார் கலை இலக்கியங்களிற் பண்பாட்டுப் பெறுமானம் காணப்படும்.
  - * கிராமிய மக்களின் வாழ்வியல் அம்சங்கள் வெளிப்படும்.
  - * அனுபவங்கள் மூலமான படிப்பினைகள் சொல்லப்படும்.
  - * தொழில் சார்ந்த விடயங்கள் பொதிந்திருக்கும்.
  - * பேச்சு வழக்கான மொழிப் பாவனை இருக்கும்.
  - * நகைச்சுவை உள்ளிட்ட பல்வேறு சுவை உணர்வுகள் காணப்படும்.
  - * நாடகப் பண்புடைய சூழமைவுகள் காணப்படும்.

**செயன்முறை 2:**

- தெரிவு செய்யப்பெற்ற நாட்டார் கலை இலக்கிய வடிவங்களில் உள்ள நாடகப் பாங்கான சூழமைவுகளை மாணவர் இனங்காண வழிப்படுத்துங்கள்.
  - * உரையாடற் பாங்கு.
  - * எடுத்துரைக்கும் தன்மை.
  - * கதை சொல்லப்படுதல்.
  - * பல்வேறு பாத்திரங்கள் தொடர்புபடுதல்.
  - * சித்திரிப்புக்குரிய சாத்தியப்பாடுகளைக் கொண்டிருத்தல்.
- நாட்டார் கலை இலக்கியங்களில் இருந்து சித்திரிப்புக்குகந்த நாடகச் சூழமைவு ஒன்றினை இனங்காணச் செய்யுங்கள்.

**செயன்முறை 3:**

- இனங்காணப்பெற்ற நாடகச் சூழமைவைச் சித்திரிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களைக் குழுவாகப் பிரித்து இயங்கச் செய்யுங்கள்.
- செயற்படும்போது,
  * அவற்றின் அளிக்கைப் பெறுமானம்.
  * வெளியைப் பயன்படுத்தல்.
  * அழகியற் பாங்கான முன்வைப்பு.
  * நாட்டார் வடிவத்துக்குரிய பேச்சுவழக்கு.
  * கிராமியப் பாங்கை வெளிப்படுத்தல்.

  போன்ற விடயங்களை முன்னிறுத்தி வழிப்படுத்துங்கள்.
- சித்திரிப்பின் பின்னர், அவர்களின் அனுபவங்களைக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
  * எமது பண்பாட்டின் பெறுமதிமிக்க வளங்களில் நாட்டார் கலை இலக்கிய வடிவங்களும் முக்கியமானவை.
  * இவை எமது முன்னோரின் வாழ்வனுபவங்கள், தொழில் சார் நடைமுறைகள், பட்டறிவின் பதிவுகளே.
  * இவ் வடிவங்களுக்குள் நாடகப் பொருத்தமான சூழமைவுகள் உள்ளன.
  * அச்சூழமைவினைச் சித்திரிக்கும்போது எமது மூத்தோரின் வாழ்வனுபவத்தினை நாமும் பெறுகின்றோம்.

**முதன்மைப் பதங்கள்**

- சூழமைவுகளைச் சித்திரித்தல்.
- அழகியற் பாங்கான முன்வைப்பு.
- கதை சொல்லல்.
- எடுத்துரைக்கும் பண்பு.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- அவ்வப் பிரதேசம் சார்ந்த
* நாட்டார் பாடல்கள்.
* கதைகள்.
* விடுகதைகள்.
* பழமொழிகள்.
- இசைக்கருவிகள்.
* சல்லரி.
* தாளம்.
* மிருதங்கம்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நாட்டார் பாடல்கள், கதைகள், பழமொழிகள் மற்றும் விடுகதைகளில் உள்ள கருத்துக்களை இனங்காண்பார்.
- நாட்டார் கலை இலக்கியங்களிலுள்ள பண்பாட்டம்சங்களை எடுத்துரைப்பார்.
- நாடகச் சூழமைவுடைய நாட்டார் கலை இலக்கியங்களை ஆற்றுகை செய்வார்.
- தமது சூழலில் உள்ள நாட்டார் கதைகள், பாடல்கள், பழமொழிகள், விடுகதைகளைத் தேடிச் சேகரிப்பார்.
- நாட்டார் கலை இலக்கியங்களிற் பற்றுறுதி கொள்வார்.

**தேர்ச்சி** **4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.6:** நாட்டார் அரங்கின் சமூக, பண்பாட்டு, வரலாற்று அம்சங்களைக் கற்றுணர்ந்தவர் ஆவார்.

**செயற்பாடு** **4.6:** 'கும்மி பற்றிக் கற்போம்.'

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- நாட்டார் அரங்குகளில் ஒன்றான கும்மி பற்றி அறிந்திருப்பார்.
- கும்மிப் பாடல்களைப் பாடி ஆடுவார்.
- அவற்றின் பண்பாட்டு, வரலாற்று அம்சங்களை விளங்கிக் கொண்டிருப்பார்.
- நாட்டார் அரங்க வடிவங்களைப் பயில்வதில் ஆர்வம் காட்டுவார்.
- சுதேச நாட்டார் அரங்கின் முக்கியத்துவம் பற்றி அறிந்து, அவற்றைப் பாதுகாப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
- நாட்டார் கலைகள் பல்வகைப்பட்டவை. (கோலாட்டம், கும்மி, கரகம், காவடி, மற்றும்)
- நாட்டார் அரங்க வடிவங்களிற் பல்வேறுபட்ட அரங்கப் பண்பாட்டு, வரலாற்று அம்சங்கள் பொதிந்துள்ளன (கூட்டுணர்வு, ஒன்றிணைவு, மகிழ்ச்சி).
- கும்மி எனும் கலை வடிவம், பெண்கள் வயது வேறுபாடில்லாமல் ஒருங்கிணைந்து ஒருவர் பாட ஆரம்பிக்க, ஏனையோர் அதனைத் தொடர்ந்து பாடி, கை குவித்துத் தட்டிக்கொண்டு, வட்டமாகச் சுற்றி ஆடும் ஆட்டத்தைக் குறிப்பதாகும்.
- கும்மி கொட்டினால் மழை பெய்யும் என்ற நம்பிக்கையும் உண்டு.
- கும்மி பல வகைகளில், பல்வேறு தேவைகளுக்காக ஆடப்படுகிறது.
  உதாரணம் :-பூப்புனிதச் சடங்கு, இறப்பு வீடு, அம்மன் ஊர்வலம்.
- இது இலகுவாகப் பயிலக் கூடியதாக உள்ளது.

**செயன்முறை:**

- கிராமிய நடன இறுவட்டு ஒன்றினை மாணவர் பார்ப்பதற்கு ஒழுங்கு செய்யுங்கள்.
- மாணவரை வட்டமாக அமரச் செய்து, ஒலிக்க விடப்படும் கும்மிப் பாடல்களைச் செவிமடுப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அப்பாடலை ஆசிரியரும் மாணவரும் இணைந்து பாட வழிப்படுத்துங்கள்(பொருத்தமான இசைக்கருவியைப் பயன்படுத்தலாம்)
- மாணவரை எண்ணிக்கைக்கேற்பக் குழுக்களாக்குங்கள்.
- பாடலுக்குரிய ஆடலைக் குழு ரீதியாக ஆடிப் பயில வசதி வாய்ப்புக்களை வழங்குங்கள்.
- குழு ரீதியில் அவ்வாடலை நிகழ்த்திக் காட்டச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மாணவர் தம் மன உணர்வை வெளிப்படுத்த இடமளியுங்கள்.
- நாட்டார் அரங்க வடிவங்களில் கும்மியின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணி தொடர்பான அனுபவ அறிவினை வழங்குங்கள்.
- பல்வேறுபட்ட கும்மியின் வகைகளை அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பமளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்**

- சமூக பண்பாடு.
- வரலாற்றுப் பின்னணி.
- கும்மி.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கும்மிப் பாடல் ஒலிப்பேழை.
- றபான்.
- தாளம்.
- காணொளிப்பேழை.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நாட்டார் அரங்குகளில் ஒன்றான கும்மி பற்றி அறிந்து கொள்வார்.
- கும்மி ஆடப்படுவதற்கான காரணங்களை அறிக்கைப்படுத்துவார்.
- கும்மிப் பாடல்களைப் பாடி ஆடுவார்.
- கும்மிப் பாடல்களைப் பாடி ஆடுவதில் ஆர்வம் காட்டுவார்.
- பல்வேறு வகையான கும்மிப் பாடல்களைத் தேடி அறியும் ஆர்வம் பெறுவார்.



**தேர்ச்சி** **5.0:** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** **5.1:** நாடக எழுத்துருவை நயப்பார்.

**செயற்பாடு** **5.1.1:** 'பிள்ளை அழுத கண்ணீர் - நாடக எழுத்துருவை நயப்போம்'.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- 'பிள்ளை அழுத கண்ணீர்' - எனும் சிறுவர் நாடக எழுத்துருவை வாசிப்பார்.
- சிறுவர் நாடக எழுத்துருவின் பண்புகளை அறிந்து கொள்வார்.
- எழுத்துருவிலுள்ள நயப்புக்குரிய அம்சங்களை எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- நாடக எழுத்துருவை வாசிக்கும் போது கவனிக்கவேண்டிய பிரதான அம்சங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
    * எழுத்துரு வாசிப்பின் போது விடயப்பொருள் முக்கியமானதாகும்.
    * எழுத்துரு வாசிக்கும்போது பாத்திரத்திற்கேற்ப வாசித்தல் சிறப்பாகக் கருதப்படும்.
    * சிறுவர் நாடகத்திற்குரிய பண்புகளை விளங்கிக்கொள்ள முடியும்.
    * நாடகப் பாங்கான உரையாடல் மூலம் அந் நாடகப் பண்புகளை அறிய முடியும்.
- மாணவர் ஒருவரை எழுத்துருவின் சில பகுதிகளை இயல்பாக வாசிக்கச் செய்யுங்கள்.
- இன்னொரு மாணவரை வாசிப்பு நுட்பங்களைக் கையாண்டு வாசிக்கச் செய்யுங்கள். (ஏற்ற இறக்கம், கவர்ச்சி, லாவகம்).
- இரண்டு பேருக்குமிடையிலுள்ள வேறுபாட்டை மாணவருக்கு விளக்குங்கள்.
- தொடர்ந்து, நுட்ப முறைகள் கலந்து வாசிக்கும்போது நயத்தல் நடைபெறும் முறையை விளக்குங்கள்.
- நாடகத்தின் அனைத்துப் பகுதிகளையும் வாசிக்கும் நோக்கில் மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் வாசிக்கும் போது ஏனைய குழுவினர் நயக்குமாறு கூறுங்கள்.
- ஒட்டுமொத்த வாசிப்பின்போது கண்டுகொண்டவற்றிலிருந்து சிறுவர் நாடகப் பண்புகளை வெளிக்கொணருங்கள்.
- விதிக்கப்பெற்ற நாடக எழுத்துரு வாசிப்பினூடாக வெளிக்கொணரப்படும் பண்புகளைக் கூறுங்கள்.
    * ஒருவர்க்கு ஒருவர் உதவி செய்தல்.
    * முயற்சி செய்தல்.
    * மரங்களை நாட்டுவதன் அவசியம்.
    * அனைத்து ஜீவராசிகளுக்கும் நீர் அவசியம்.
    * ஒற்றுமையாகச் செயற்பட்டால் எதையும் சாதிக்கலாம்.
    * செழிப்பான உலகில் வளமான வாழ்வு.

**முதன்மைப் பதங்கள்**

- நயத்தல்.
- வாசிப்பு நுட்பங்கள்.
- சிறுவர் நாடகம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- 'பிள்ளை அழுத கண்ணீர்' - நாடக எழுத்துரு.
- நுட்பமுறைகள் அடங்கிய அட்டவணை.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சிறுவர் நாடகம் ஒன்றை வாசிக்கும் முறை பற்றிக் கூறுவார்.
- சிறுவர் நாடகத்தினை நயக்கத்தக்க வகையில் வாசிப்பார்.
- வாசிக்கும் போது கவனிக்கவேண்டிய நுட்பமுறைகளைப் பட்டியற்படுத்துவார்.
- வாசிப்புக்கூடாகச் சிறுவர் நாடகம் ஒன்றின் பண்புகளைக் கண்டறிவார்.
- நாடகம் தரும் பண்புகள் கண்டு தாமும் அவ்வாறு நடப்பார்.

**தேர்ச்சி** **5.0:** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** **5.1:** நாடக எழுத்துருவை நயப்பார்.

**செயற்பாடு** **5.1.2:** 'பிள்ளை அழுத கண்ணீர் - நாடக எழுத்துருவின் கரு, விடயப் பொருள், பாத்திரங்கள், சொல்லாடல்கள் என்பவற்றை நயப்போம்'.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :

- 'பிள்ளை அழுத கண்ணீர்' சிறுவர் நாடகத்தின் கரு, பாத்திரங்கள், சொல்லாடல்கள் மற்றும் விடயப்பொருளை அறிவார்.
- சிறுவர் நாடக எழுத்துருக்களை நயப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- விதிக்கப்பெற்ற நாடக எழுத்துருவை வாசித்த பின்பு, பின்வருவனவற்றை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - அதன் கரு ‘‘சூழலிற் பசுமை பேணுதல்’ என்பதைக் கண்டுகொள்ளல்.
  - கருவை விளக்குவதற்கும், நாடக ஓட்டத்திற்கும், நாடக முழுமைக்கும் பாத்திரங்கள் பிரதானமானவை.
  - பிள்ளை, எலி, ஆடு, தவளை, வயல்,மலை, மேசன் போன்ற பாத்திரங்கள் இடம் பெறுகின்றன.
  - ஒவ்வொரு பாத்திரத்தின் இயல்பு, தன்மை என்பவற்றுக்கேற்ப அவை நாடகத்தில் ஊடாடுகின்றன.
    உதாரணம்:- வயலம்மா, ஆடக்கா, மலை மாமா.
  - பிரதான பாத்திரமாக எலி இடம்பெறுகிறது.
  - பாத்திரங்களுக்கிடையிலான சொல்லாடலுக்கூடாகவே நாடகம் வளர்த்துச் செல்லப் படுகிறது.
  - பாத்திரங்களையும் சூழமைவுகளையும் விளங்கிக்கொள்ளச் சொல்லாடல் உதவுகிறது.
  - சொல்லாடல் என்பது தனி ஒரு பாத்திரத்தையோ (தன்னுரை , புறச்சொல்) இரு பாத்திரங்களுக்கிடையிலோ அன்றேல் இரண்டுக்கு மேற்பட்ட பாத்திரங்களுக்கிடையிலோ நிகழலாம்.
  - சொல்லாடல் ஒவ்வொன்றும் கருத்துப் புலப்படும் வகையிலேயே இடம்பெறுகின்றன.
  - சொல்லாடல் ஊடாக நாடகத்தின் விடயப்பொருள் துல்லியமாகப் புலப்படும்.
  - விடயப்பொருளை விளங்கிக் கொள்ளும் முறையில் வாசிக்கும்போது நுட்ப ரசனையைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- தெரிவு செய்யப்பட்ட மாணவர் சிலரை எழுத்துருவை வாசிக்கவிட்டு, ஏனையோரைப் பாத்திரங்களை இனங்காண இடமளியுங்கள்.
- ஒவ்வொரு பாத்திரத்துக்கும் ஒவ்வொரு இயல்பு காணப்படும் என்பதைக் கூறுங்கள்.
- பாத்திரங்களுக்கிடையிற் சொல்லாடல் வேறுபடும் விதத்தை எடுத்துரையுங்கள்.
- தெரிவு செய்யப்பட்ட சொல்லாடலைக் கருத்துப் புலப்பட வாசிக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- மாணவரிடம் வினாக்களைத் தொடுத்து பாத்திரம், சொல்லாடல் பற்றிக் கலந்துரை யாடுங்கள்.
- பாத்திரம், சொல்லாடல் என்பவற்றினூடாக, நாடகத்தின் விடயப்பொருள் பற்றி எடுத்துரையுங்கள்.
- நாடகம் ஒன்றை நயக்கும்போது நாடகத்தின் கரு, பாத்திரம், சொல்லாடல், விடயப்பொருள் என்பன பற்றிக் கவனத்திற் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

### முதன்மைப் பதங்கள்

- விடயப்பொருள்.
- சொல்லாடல்.
- நயத்தல்.
- மானுட நேயர்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பிள்ளை அழுத கண்ணீர் - நாடக எழுத்துரு – சி. ஜெய்சங்கர்.
- பாத்திரங்கள் எழுதப்பட்ட அட்டை.
- பாத்திரங்கள் வரையப்பட்ட தாள்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும்

- நாடகத்தின் கருவை வாசித்து விளங்கிக்கொள்வார்.
- நாடகப் பாத்திரங்களையும், அவற்றின் இயல்புகளையும் கூறுவார்.
- நாடகத்திற் சொல்லாடல் இடம்பெறும் முறை பற்றி விளக்குவார்.
- சொல்லாடல்களைப் பேசிப் பழகுவார்.
- பல்வேறு நாடகங்கள் வாசிக்கும் மனப்பக்குவத்தைப் பெறுவார்.

### உசாத்துணை நூல்கள்

- ‘பிள்ளை அழுத கண்ணீர்’ சிறுவர் நாடக எழுத்துரு - சி. ஜெய்சங்கர்.
- நாடக வழக்கு (தொகுப்பு நூல்) - கந்தையா ஸ்ரீகணேசன்.
- குழந்தைகளும் நாடகமும், அரங்கியல் - சி.மௌனகுரு.

**தேர்ச்சி** **5.0:** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** **5.1:** நாடக எழுத்துருவை நயப்பார்.

**செயற்பாடு** **5.1.3:** 'பிள்ளை அழுத கண்ணீர் - சிறுவர் நாடகத்தின் ஆசிரியரை அறிந்து கொள்வோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- பிள்ளை அழுத கண்ணீர் சிறுவர் நாடகத்தின் ஆசிரியர் பற்றித் தெரிந்து கொள்வார்.
- சிறுவர் நாடகங்களை ஆக்கும் திறன்களைப் பெற்றுக்கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- பின்வருவன தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
  - 'பிள்ளை அழுத கண்ணீர்' நாடகத்தின ஆசிரியர் கலாநிதி.சி. ஜெய்சங்கர் ஆவார்.
  - இவர் யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்தவர்.
  - இவர் நாடகக் கலைஞர், கூத்துக் கலைஞர், கவிஞர், விமர்சகர் என்னும் பல்திறன் கொண்டவர்.
  - பல நாடகங்களை எழுதியுள்ளதோடு நெறிப்படுத்தியும் உள்ளார்.
    உதாரணம்: தம்மதீபத்தின் கதை – எழுத்துருவாக்கம்.
    நிலாந்தனின் - நவீன பஸ்மாசுரன் கதை, அகதிகளின் கதை – நெறிப்படுத்தல்.
  - சிறுவர் நாடகம், சமூக நாடகம், கூத்துருவாக்க நாடகம் எனப் பல நாடகங்களைத் தயாரித்துள்ளார்.
- இவர் போன்று வேறு பலரும் சிறுவர் நாடகங்களை எழுதியுள்ளனர்.
- இலங்கையில் -
  - குழந்தை. ம. சண்முகலிங்கம்.
  - சி. மௌனகுரு.
  - மாவை. நித்தியானந்தன்.
  - சோமலதா சுபசிங்க (சிங்களம்).
- தமிழ்நாட்டில் -
  - வேலு சரவணன்.
  - சே.இராமானுஜம்.
- சிறுவர் நாடகங்களை வாசிப்பதனூடாக நாமும் சிறுவர் நாடகங்களை ஆக்கமுடியும் என்பதை விளக்குங்கள்.
- சிறுவர் நாடகங்களை எழுதியோர் யார்? யார்? என வினவுங்கள்.
- குழந்தை ம.சண்முகலிங்கம், சி. மௌனகுரு, மாவை. நித்தியானந்தன், சோமலதா சுபசிங்க, வேலு சரவணன், சே.இராமானுஜம் ஆகியோரின் படங்களைக் காட்டி இனங்காண இடமளியுங்கள்.
- 'பிள்ளை அழுத கண்ணீர்' நாடகாசிரியரது படத்தைக் காட்டுங்கள்.
- அவரால் எழுதப்பெற்ற ஏனைய நாடகங்கள் பற்றி விசாரித்து விளக்கமளியுங்கள்.
- சி.ஜெய்சங்கர் பற்றிய சுய விவரம் அடங்கிய பக்கப்புரட்டி ஒன்றைத் தயாரித்து விளக்கமளியுங்கள்.
- மாணவரை இரு குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் பத்து வினாக்கள் வீதம் தெரிந்தெடுக்குமாறு கூறுங்கள்.

- இரண்டு குழுக்களுக்கும் புள்ளியிடும் அட்டவணை ஒன்றைப் பச்சைப் பலகையிற் தயாரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் வினாக்களைக் கேட்கவும் பதிலளிக்கவும் வழிப்படுத்துங்கள்.
- புள்ளிகளை வழங்கிப் பாராட்டுத் தெரிவியுங்கள்.
- நாடகத்தின் கரு, சொல்லாடல், விடயப்பொருள் என்பவற்றை மீள வலியுறுத்துங்கள்.
- இவை நாடகத்தில் முக்கியம் பெறும் என்பதை அவர்கள் கூறும் வகையில் வினாக்களைக் கேளுங்கள்.
- தாமாக நாடகம் உருவாக்குவதற்குச் சில கருக்களை வழங்குங்கள்.
  - மனிதரிடத்தே அன்பு செலுத்துதல்.
  - பிராணிகளில் இரக்கம் காட்டுதல்.
  - மூத்தோரை மதித்தல்.

### முதன்மைப் பதங்கள்

- சமூகமயமாதல்.
- சுயவிவரம்.
- நாடக வாசிப்பு.
- கரு.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- சிறுவர் நாடகாசிரியர்களது ஒளிப்படங்கள்.
- நாடக எழுத்துரு – பிள்ளை அழுத கண்ணீர்.
- ஆசிரியரின் சுயவிவரப் பக்கப்புரட்டி.
- சி. ஜெய்சங்கரது நாடகங்களின் அட்டவணை.



**தேர்ச்சி** 5.0: நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.2: விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவினை ஆற்றுகை நிலையில் நயப்பார்.

**செயற்பாடு** 5.2.1: 'பிள்ளை அழுத கண்ணீர் - நாடகஆற்றுகையை நயப்போம்'.
''.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- சிறுவர் நாடக ஆற்றுகையைப் பார்ப்பார்.
- சிறுவர் நாடக ஆற்றுகையின் பண்புகளை விளங்கி முன்வைப்பார்.
- சிறுவர் நாடகங்களைத் தேடிப்பார்க்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- விதந்துரைக்கப்பெற்ற நாடக ஆற்றுகையை அன்றேல் இறுவட்டினை அன்றேல் யாதாயினும் ஒரு சிறுவர் நாடக இறுவட்டை மாணவர் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- மாணவர் பார்வையிட்ட ஆற்றுகையில் அவரது மனதைக் கவர்ந்த விடயங்கள் தொடர்பாகக் கேட்டறியுங்கள்.
- அவை மாணவரது விருப்பிற்கு ஏற்புடையதாக அமைந்தமைக்கான காரணங்களைக் கேட்டு அவற்றைப் பட்டியற்படுத்துங்கள்.
- பார்வையிடப்பெற்ற ஆற்றுகையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை அவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையிற் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
    - நாடக எழுத்துரு என்பது ஆற்றுகைக்கு அடிப்படையானதும் இலக்கியப் பரிமாணம் உடையதுமாகும்.
    - மனவெளியை மேடையாக்கி எழுத்துருவை நயக்க முடியும்.
    - வேடஉடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை, ஒளி, ஒலி போன்ற அரங்க மூலகங்கள் இணைகின்றபோது எழுத்துரு உயிர் பெறுகின்றது.
    - நாடக எழுத்துருவானது பல படிமுறைகளிற்கு ஊடாக ஆற்றுகை நிலையை அடைகின்றபோது, நயத்தல் சார்ந்த முழுமையை உணர முடியும்.
    - நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் நயப்பதன் மூலம் மன நிறைவு அடையலாம்.
    - ஆற்றுகை நிலையின் முழுமை கருதிப் பல்வேறு கலைஞர் இணைந்து பணியாற்றுவர்.
    - ஆற்றுகை நிலை நயத்தல் ஆனது உடனெதிர் விளைவுகளைக் கொண்டதாகக் காணப்படும்.
- எழுத்துரு நிலையிலும் சரி, ஆற்றுகை நிலையிலும் சரி பின்வரும் அடிப்படை மூலக்கூறுகளை விளங்கிக்கொள்வதன் ஊடாகச் சிறப்பான முறையில் நயக்க முடியும்.
    * விடயப்பொருள்.
    * கருப்பொருள்.
    * பாத்திரங்கள்.
    * சொல்லாடல்.
    * வேட உடை.
    * ஒப்பனை.
    * சிறுவர் நாடகப் பண்புகள்.
    * இசை.

**முதன்மைப் பதங்கள்**

- நயத்தல்.
- சிறுவர் நாடகம்.
- ஆற்றுகை நிலை.
- விதந்துரைக்கப்பெற்ற நாடகம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தொலைக்காட்சி.
- கணினி.
- சிறுவர் நாடக இறுவட்டுக்கள்.
- 'பிள்ளை அழுத கண்ணீர்' நாடக எழுத்துரு - சி.ஜெயசங்கர்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நாடகத்தின் நலிவுகள்,வலிவுகள் பற்றிக் கருத்துத் தெரிவிப்பார்.
- சிறுவர் நாடகங்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருப்பார்.
- சிறுவர் நாடகங்களைப் பார்க்கும் பழக்கத்தைப் பெற்றிருப்பார்.
- சிறுவர் நாடகங்களை நயந்து கூறுவார்.
- சிறுவர் நாடகச் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆர்வத்தைக் காட்டுவார்.

**தேர்ச்சி** 5.0: நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.2: விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவினை ஆற்றுகை நிலையில் நயப்பார்.

**செயற்பாடு** 5.2.2: 'சித்திரிப்பை விளங்கிக்கொள்வோம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- சித்திரிப்புப் பற்றி அறிந்திருப்பார்.
- சித்திரிப்பின் வகைப்பாடுகளை விளக்கிக் கூறுவார்.
- ஆற்றுகையில் சித்திரிப்பின் முக்கியத்துவத்தினை விவரிப்பார்.
- சித்திரிப்பின் பிரயோக நுட்பம் குறித்து எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவினை ஆற்றுகை நிலையில் நயப்பதற்காகப் பின்வரும் விடயங்கள் தொடர்பிற் கலந்துரையாடுங்கள்.
- நாடக ஆற்றுகை, பார்ப்போர் முழுமையாக விளங்கிக்கொள்வதற்குச் சித்திரிப்புத் துணை புரிகின்றது.
- எழுத்துரு, ஆற்றுகை நிலையை அடைவதற்கு நால்வகைச் சித்திரிப்புகளின் பங்களிப்பு இன்றி அமையாதது.
  * உடல்வழிச் சித்திரிப்பு.
  * உணர்ச்சிவழிச் சித்திரிப்பு.
  * குரல்வழிச் சித்திரிப்பு.
  * காண்பியவழிச் சித்திரிப்பு.
- ஆற்றுகையில் சித்திரிப்பை முறையாகப் பிரயோகிப்பதன் ஊடாக அழகியல் சார்ந்த முழுமையை நயக்க முடியும்.
- ஆற்றுகையில் பார்ப்போர் பங்கு பற்றுவதை வலுப்படுத்துவதிற் சித்திரிப்பு செல்வாக்குச் செலுத்துகின்றது.
- பார்ப்போர், ஆற்றுகைசார் மனநிறைவைப் பெறுவதற்கும் சித்திரிப்புத் துணை நிற்கின்றது.
- நால்வகைச் சித்திரப்பைத் தனித்தனியே மாணவர் இனம் கண்டுகொள்ளத்தக்கவாறு பொருத்தமான படங்களை வகுப்பறையிற் காட்சிப்படுத்துங்கள்.
- காட்சிப்படுத்தப்பட்ட படங்களை அனைத்து மாணவர்களும் பார்க்கக்கூடியவாறு வழிப்படுத்துங்கள்.
- நால்வகைச் சித்திரிப்புகள் எழுதப்பட்ட சொல்லட்டைகள் யாதேனும் ஒவ்வொன்றைத் தெரிவு செய்யச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- தெரிவு செய்யப்பட்ட சொல்லட்டைகளைத் துணையாகக் கொண்டு காட்சிப்படுத்தப்பட்ட படங்கள் குறிப்பிடும் சித்திரிப்புகளை இனம் காண வழிப்படுத்துங்கள்.
- மாணவர் இனம் கண்ட சித்திரிப்புகளின் பொருத்தப்பாடு குறித்து ஏனைய மாணவர்களிடம் கேட்டறியுங்கள்.
- மாணவர் அனைவரையும் வகுப்பறையிற் சுயாதீனமாக உலாவ விடுங்கள்.
- பொருத்தமான இசைக் கருவியைப் பயன்படுத்தி எழுப்பப்படும் ஒலிக்கு ஏற்ப நான்கு சம குழுக்களாக இணைய வழிப்படுத்துங்கள்.
- திருவுளச்சீட்டு மூலம் ஒவ்வொரு குழுவும் தமக்கான யாதாயினும் ஒரு சித்திரிப்பைத் தேர்ந்து எடுக்க வாய்ப்பளியுங்கள்.

- சித்திரிப்புப் பற்றிய கண்டறிதலுக்குரிய நேரத்தைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- சித்திரிப்புப் பற்றிய குழுநிலைசார் கண்டறிதலிற் பின்வரும் விடயங்கள் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனபதை வலியுறுத்துங்கள்.
    * 'பிள்ளை அழுத கண்ணீர்' எனும் நாடக ஆற்றுகை நிலை நின்று சித்திரிப்பை இனங்காணல்.
    * குழு சார்ந்த முன்வைப்பிற்காக விவரணம், நாடகப் பாங்கான உரையாடல், நிகழ்த்திக் காட்டல் போன்ற பொருத்தமான நுட்பங்களைக் கையாளுதல்.
    * குழுவில் உள்ள அனைவரும் பங்கு கொள்ளல்.
    * வசதிக்கேற்பப் பொருத்தமான துணைக்கலை அம்சங்களைக் கையாளுதல்.
- ஒவ்வொரு குழுவாகத் தமது விடயங்களை முன்வைக்கவும், ஏனைய குழுக்கள் தமது கருத்துகளைக் கூறவும் வாய்ப்பளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மாணவர் விளங்கிக்கொள்ளும் வகையில் மீள வலியுறுத்துங்கள்.
    * சித்திரிப்பு விளக்கம்.
    * பிரயோக நுட்பம்.
    * அழகியல் அம்சம்.
    * ஆற்றுவோர் - பார்ப்போர் தொடர்பு.
- பொருத்தமான இறுவட்டைத் துணையாகக் கொண்டு மாணவருக்குத் தேவையான மேலதிக விளக்கத்தை வழங்குங்கள்.

### முதன்மைப் பதங்கள்
- சித்திரிப்பு.
- பிரயோக நுட்பம்.
- அழகியல் அம்சம்.
- ஆற்றுகை நிலை.

### தரவிருத்தி உள்ளீடுகள்
- நாடக இறுவட்டுக்கள்.
- சித்திரிப்புக் குறித்த படங்கள்.
- டிமைன் தாள்.
- பிள்ளை அழுத கண்ணீர் நாடக எழுத்துரு – சி.ஜெயசங்கர்.
- றபான் அன்றேல் மிருதங்கம்.

### கணிப்பீடும் மதிப்பீடும்
- சித்திரிப்புப் பற்றி விளங்கிக் கொள்வார்.
- ஆற்றுகையில் சித்திரிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வார்.
- சித்திரிப்புகளை இனம் காண்பார்.
- ஆற்றுகையில் சித்திரிப்பின் பிரயோக நுட்பம் குறித்து விளங்கிக் கொள்வார்.
- சித்திரிப்புக் கலை பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவார்.

**தேர்ச்சி** **5.0:** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** **5.2:** விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவினை ஆற்றுகை நிலையில் நயப்பார்.

**செயற்பாடு** **5.2.3:** 'ஆற்றுகை நிலையில் துணைக் கலைகளை நயப்போம்'.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- ஆற்றுகை நிலை நயத்தலினூடாகத் துணைக் கலைகளை இனங்காணுவார்.
- ஆற்றுகை நிலை நயத்தலில் துணைக் கலைகளின் பங்களிப்பை விளங்கியிருப்பார்.
- ஆற்றுகை நிலை நயத்தலின் மூலம் துணைக் கலைகளின் பிரயோகம் தொடர்பான திறனைப் பெற்றிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- விதந்துரைக்கப்பெறும் நாடக எழுத்துருவினை ஆற்றுகை நிலையில் நயத்தல் தொடர்பிற் பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
- நாடகமொன்றினை மேடையில் ஆற்றுகை செய்யும்போது பல்வேறு துணைக்கலைகள் பயன்படுத்தப்படுகின்றன.
- துணைக் கலைகள் ஒவ்வொன்றும் தனக்கேயுரிய தனித்துவப் பண்புகளைக் கொண்டிருக்கும்.
- வேடஉடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, ஒளி, ஒலி போன்ற துணைக் கலைகளை ஆற்றுகையிற் பொருத்தமான வகையிற் பிரயோகிப்பதன் மூலம் ஆற்றுகை சார்ந்த அழகியல் முழுமையைப் பெறலாம்.
- துணைக் கலைகளை அரங்கில் பிரயோகிப்பதற்குக் கற்பனா சக்தியும் தொழினுட்பத் திறனும் அவசியமாகும்.
- நாடகத்தின் வெற்றியில் துணைக்கலைகளின் செல்வாக்கு இன்றியமையாததாகும்.
- துணைக் கலைகள் தொடர்பான படங்கள், உண்மைப் பொருள்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்துங்கள்.
- வசதிக்கேற்ப மாணவர் வகுப்பறையில் நுழையும்போதே இச்சூழலை அவதானிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- உண்மைப் பொருள்களைத் துணையாகக் கொண்டு மாணவர் தாம் வாழும் சூழலிற் பார்த்த ஆற்றுகைகள் அன்றேல் இறுவட்டுக்களில் துணைக் கலைகள் பற்றிக் கலந்துரை யாடுங்கள்.
- மாணவர் எண்ணிக்கைக்கேற்பக் குழுக்களாக்குங்கள்.
- ஏற்கெனவே நயந்த நாடக ஆற்றுகையில் இனங்கண்ட துணைக் கலைகளைக் குழுவாகப் பட்டியற்படுத்த வாய்ப்பளியுங்கள்.
- மாணவர் செயற்பாட்டின்போது தேவையான வசதி வாய்ப்புக்களையும் ஆலோசனை களையும் வழங்கி வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தாம் கண்டறிந்த விடயங்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் தம் கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளியுங்கள்.
- ஏற்கெனவே நயந்த நாடக ஆற்றுகையைத் துணையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
    * இனங்கண்ட துணைக் கலைகள்.
    * ஆற்றுகையிற் துணைக் கலைகளின் பயன்பாடும் பொருத்தப்பாடும்.
    * சாதக, பாதக விளைவுகள்.
- துணைக் கலைகள் தொடர்பான மேலதிக விளக்கத்துக்காகப் பொருத்தமான இறுவட்டினைப் பயன்படுத்தி விளக்கமளியுங்கள்.

### முதன்மைப் பதங்கள்
- துணைக்கலைகள்.
- கற்பனா சக்தி.
- தொழினுட்பத் திறன்.

### தரவிருத்தி உள்ளீடுகள்
- டிமை தாள்.
- பெயின்ரிங் ஸ்ரிக்.
- மாக்கர்.
- இறுவட்டுக்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும்
- நாடக ஆற்றுகையில் துணைக் கலைகள் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருப்பார்.
- ஆற்றுகையில் துணைக் கலைகளின் பயன்பாட்டை அறிந்து கொள்வார்.
- ஆற்றுகையில் துணைக் கலைகளைப் பிரயோகிக்கும் நுட்பத்தை விளங்கிக் கொள்வார்.
- தமக்குப் பரிச்சயமான துணைக் கலைகளை ஆக்குவதில் ஆர்வம் காட்டுவார்.
- துணைக் கலைகளை இனங்காண்பார்.

## கணிப்பீட்டுக் கருவிகள்

**01. தவணை** : 1

**02. தேர்ச்சி** : 4.0

**03. தேர்ச்சி மட்டம்** : 4.1

**04. விடய உள்ளடக்கம் :**
- சுதேச நாட்டார் கதைகளைத் திரட்டுதல்.
- சுதேச நாட்டார் கதைகளின் பின்னணியைப் பயிலுதல்.

**05. அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள்:**
- தத்தமது பிரதேச வாசிகளுடன் தொடர்பு கொள்வார்.
- பிரதேசத்தில் வழக்கிலுள்ள நாட்டார் கதைகளைச் சேகரிப்பார்.
- அக் கதைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியைக் கூறுவார்.
- கதைகளைத் தொகுத்து வெளியிடுவார்.
- கதைகளை விரும்பி வாசிப்பார்.

**06. நேரம்** : இரண்டு வாரங்கள்

**07. கணிப்பீட்டுக் கருவி** : சுய ஆக்கங்கள்

**08. கணிப்பீட்டுக் கருவி அறிமுகம் :**

தத்தமது பிரதேசங்களில் வழங்கப் பெற்று வரும் நாட்டார் கதைகளைக் கேட்டறிந்து, அவற்றின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியுடன் சுவைபட எழுதி, நாட்டார் கதைத் தொகுப்பாக முன்வைப்பதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

**06. கருவியை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் :**
**ஆசிரியருக்கானவை:**
- ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக இச்செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டும் என்பதை அறியத்தாருங்கள்.
- தத்தம் பிரதேச வாசிகளைச் சந்தித்து அந்தப் பிரதேசத்துக்கே உரித்தான நாட்டார் கதைகளையும், அவற்றின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியையும் கேட்டறிய அறிவுறுத்துங்கள்.
- கேட்டறிந்த கதைகளைச் சுவைபட எழுதி, ஒரு நாட்டார் கதைத் தொகுப்பாக முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒரு தொகுப்பில் குறைந்தது ஐந்து கதைகளேனும் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
- ஒவ்வொரு கதையையும் யாரிடம் இருந்து பெற்றனர் என்பதையும் அக்கதைக்குப் பின்புலமாயுள்ள சமூக, பண்பாட்டு, வரலாற்றுத் தகவல்களையும் சுருக்கமாக எழுதுமாறு கூறுங்கள்.

- தேவைப்படின் ஒவ்வொரு கதைக்கும் பொருத்தமான படங்களை வரைந்து இணைக்கலாம் என்பதை வலியுறுத்துங்கள்.
- ஒவ்வொரு நாட்டார் கதைக்கும் பொருத்தமாகத் தலைப்பிடுமாறும் கதைத் தொகுப்பிற்குப் பெயரிடுமாறும் கேளுங்கள்.
- அட்டைப் படத்தை வடிவமைத்து இணைக்குமாறு கூறுங்கள்.
- மாணவராற் சமர்ப்பிக்கப்பட்ட கதைத் தொகுப்புக்களை வகுப்பறையில் பார்வைக்கு வையுங்கள்.
- அனைத்து மாணவரையும் பார்வையிட வழிப்படுத்துங்கள்.

**மாணவருக்கானவை:**

- நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பிரதேசத்தில் உள்ள முதியோர், படைப்பாளிகள், அறிஞர்கள் போன்றோரைச் சந்தித்து அப்பிரதேசத்திற்கே உரித்தான நாட்டார் கதைகள் பற்றிக் கேட்டறியுங்கள்.
- அக்கதைகள் தோன்றிய பின்னணியைக் கேட்டறியுங்கள்.
- குறைந்தது ஐந்து கதைகளையேனும் இவ்வாறு திரட்டி அவற்றைச் சுவைபட எழுதுங்கள்.
- கதையின் இறுதியில் அக்கதையை உங்களுக்குச் சொன்னவரின் பெயரையும் குறிப்பிடுங்கள்.
- ஒவ்வொரு கதைக்கும் பின்னால் உள்ள சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாகக் குறிப்பிடுங்கள்.
- கதைகளைத் தொகுப்பாக்குங்கள்.
- ஒவ்வொரு கதைக்கும் பொருத்தமான படங்கள் தேவைப்படின் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு கதைக்கும் பொருத்தமான தலைப்பை இடுங்கள்.
- அதுபோலக் கதைத் தொகுதிக்குப் பொருத்தமான தலைப்பை இடுங்கள்.
- உரிய தினத்தில் ஆசிரியரிடம் சமர்ப்பியுங்கள்.

## 07. கணிப்பீட்டு நியதிகள்

| தொ. இல. | மாணவர் பெயர் | 04 புள்ளி<br>நாட்டார் கதைகளைத் தேடித் திரட்டுகிறார். | 04 புள்ளி<br>நாட்டார் கதைகளைச் சுவைபட எழுதுகிறார். | 04 புள்ளி<br>நாட்டார் கதைகளின் பின்புலத்தையும் குறிப்பிடுகிறார். | 04 புள்ளி<br>கதைகளுக்கும் கதைத் தொகுதிக்கும் பொருத்தமான தலைப்பை இடுகிறார். | 04 புள்ளி<br>கதைகளைக் கொண்ட தொகுப்பை நேர்த்தியாக முன்வைக்கிறார். | 20 புள்ளி<br>மொத்தப் புள்ளி | 10 புள்ளி<br>இறுதிப்புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

மிக நன்று : 04
நன்று : 03
நடுத்தரம் : 02
மேலும் முன்னேற வேண்டும் : 01

## கணிப்பீட்டுக் கருவிகள்

**01. தவணை** : 2

**02. தேர்ச்சி** : 1.0

**03. தேர்ச்சி மட்டம்** : 1.6

**04. விடய உள்ளடக்கம் :**
- இயந்திரங்கள், வாகனங்களின் வடிவங்களைப் போலச் செய்தல்.
- இயந்திரங்கள், வாகனங்களின் அசைவுகளைப் போலச் செய்தல்.
- இயந்திரங்கள், வாகனங்களின் ஒலிகளைப் போலச் செய்தல்.

**05. அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள்:**
- போலச் செய்தலிற் போதிய பயிற்சியைப் பெறுவார்.
- சூழலிலுள்ள பல்வேறு வாகனங்கள் மற்றும் இயந்திரங்களினை அவதானிக்கும் பழக்கத்தைப் பெறுவார்.
- போலச்செய்தலின் பொருட்டுத் தமது உடலையும் குரலையும் தாக்கவன்மையுடன் பயன்படுத்துவார்.
- போலச்செய்தலை விருப்புடன் செய்வார்.
- அழகியலுணர்வை வெளிப்படுத்துவார்.

**06. நேரம்** : 40 நிமிடயங்கள்

**07. கணிப்பீட்டுக் கருவி** : குழுச் செயற்பாடு.

**08. கணிப்பீட்டுக் கருவி அறிமுகம் :**
வழங்கப்பெறும் செயற்பாட்டுப் பத்திரத்திற் குறிப்பிடப்பெறும் இயந்திரம் அன்றேல் வாகனம் ஒன்றின் வடிவம் , அசைவுகள், ஒலிகள் என்பவற்றைக் கலை நயத்துடன் குழுவாகச் செய்து காட்டுவதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

**06. கருவியை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் :**
**ஆசிரியருக்கானவை:**
- மாணவர் தம் படைப்பாற்றலை வெளிப்படுத்துவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்கேற்ப இடத்தை ஒழுங்கு செய்யுங்கள்.
- போலச்செய்தல் பற்றிக் கற்ற விடயங்களை நினைவுபடுத்திக்கொள்ள அவகாசம் வழங்குங்கள்.
- கணிப்பீட்டுக் கருவியை அறிமுகம் செய்யுங்கள்.
- கணிப்பீட்டு நியதிகளை விளக்குங்கள்.
- சாத்தியமான முறையில் மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமக்கான விடயப்பொருளைத் தேர்ந்தெடுக்கச் சந்தர்ப்ப மளியுங்கள்.

- கீழ்க்காணும் பட்டியலில் உள்ள விடயங்களையோ அன்றேல் மாணவர் வயதுக்குப் பொருத்தமான வேறு விடயப்பொருள்களையோ எழுமாற்றாகத் தெரிவுசெய்ய வழிப் படுத்துங்கள்.
  • வண்டில் • மிதிவண்டி • தேர் • அரைக்கும் இயந்திரம் • கடிகாரம்
- மாணவர்கள் தமது செய்துகாட்டல்கள் குறித்துத் தமக்குள் கலந்துரையாடவும் செய்து பார்க்கவும் அவகாசம் வழங்குங்கள்.

**மாணவருக்கானவை:**

- உங்கள் குழுவிலுள்ள அங்கத்தவர்களை அறிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் செயலாற்றத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் விடயப்பொருள் என்பவற்றை ஆசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.
- உங்களது குழுச்செயற்பாடு எந்தெந்த நியதிகளின் கீழ் கணிப்பிடப்படுகின்றது என்பதை அறிந்து உங்களைத் தயார்ப்படுத்துங்கள்.
- வழங்கப் பெற்ற விடயப்பொருள் பற்றிக் குழுவிற்குள் கலந்துரையாடுங்கள்.
- குழுவிலுள்ள ஒவ்வொருவரும் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வையுங்கள்.
- மற்றவரது கருத்துக்களைச் செவிமடுங்கள்.
- உங்களது செயற்பாட்டிற் கலைநயம் வெளிப்படும் வகையிற் கற்பனையைப் பயன்படுத்துங்கள்.
- வழங்கப் பெற்ற விடயப்பொருளைக் குழுவாகச் செய்து காட்டுங்கள்.

## 07. கணிப்பீட்டு நியதிகள்

| தொ. இல. | மாணவர் பெயர் | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 20 புள்ளி | 10 புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வடிவத்தைப் போலச் செய்கிறார். | அசைவியக்கத்தைப் போலச் செய்கிறார். | ஒலிகளைப் போலச் செய்கிறார். | கற்பனையை வெளிப்படுத்துகிறார் | கூட்டுணர்வைக் காட்டுகிறார். | மொத்தப் புள்ளி | இறுதிப்புள்ளி |
| | | | | | | | | |

மிக நன்று : 04
நன்று : 03
நடுத்தரம் : 02
மேலும் முன்னேற வேண்டும் : 01

## கணிப்பீட்டுக் கருவிகள்

**01. தவணை** : 3

**02. தேர்ச்சி** : 5.0

**03. தேர்ச்சி மட்டம்** : 5.2

**04. விடய உள்ளடக்கம் :**
- 'பிள்ளை அழுத கண்ணீர்' எனும் சிறுவர் நாடகம் சித்திரிக்கப்பெற்ற முறைமையினை நயத்தல்.
- அச் சிறுவர் நாடகத்திற் துணைக் கலைகள் பயன்படுத்தப் பெற்றுள்ள விதத்தினை நயத்தல்.

**05. அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள்:**
- சிறுவர் நாடகங்களை விருப்பத்துடன் பார்ப்பார்.
- பார்த்த நாடகம் சித்திரிக்கப்பெற்ற முறைமையினை நயப்பார்.
- தாம் பார்த்து நயந்தவற்றைப் பேச்சு மூலம் எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றிருப்பார்.
- துணைக் கலைகளின் சேர்க்கை நாடகத்திற்கு மெருகு சேர்த்ததை எண்ணி வியப்புறுவார்.

**06. நேரம்** : 01 அன்றேல் 02 பாடவேளைகள்.

**07. கணிப்பீட்டுக் கருவி** : பேச்சு.

**08. கணிப்பீட்டுக் கருவி அறிமுகம் :**
விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவான 'பிள்ளை அழுத கண்ணீர்' எனும் நாடகத்தைப் பார்த்து, அது சித்திரிக்கப்பெற்றுள்ள முறைமை பற்றியும் அதிற் துணைக் கலைகளின் பயன்பாடு பற்றியும் தாம் நயந்தவற்றைப் பேச்சு மூலம் எடுத்துரைப்பதே இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**06. கருவியை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்:**
**ஆசிரியருக்கானவை:**
- 'பிள்ளை அழுத கண்ணீர்' நாடகத்திற் தாம் நயந்தவற்றைப் பற்றி இரண்டு நிமிடங்களுக்கு மேற்படாத பேச்சை ஆயத்தம் செய்து, முன்வைக்க வேண்டும் என்பதை மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.
- மாணவர்கள் ஆயத்தம் செய்யவேண்டிய பேச்சுக்கான விடயத் தலைப்புக்களை ஆயத்தம் செய்யுங்கள்.
  உதாரணமாக:
  1. எனக்குப் பிடித்த நாடகப் பாத்திரம்.
  2. நாடகத்தில் என்னைக் கவர்ந்த பாடல்கள்.
  3. நான் கண்டு வியந்த மேடை அலங்கரிப்பு.
  4. பாத்திரங்களுக்குப் பொருந்திய வேடஉடைகள்.
  5. நான் சுவைத்த நாடகக் கதை
- மாணவர்களை 1 முதல் 5வரை எண்ணச் செய்து, அவ்வெண் ஒழுங்கில் ஒவ்வொரு தலைப்பையும் ஒவ்வொருவருக்கு வழங்குங்கள்.
- பேச்சுக்குரிய நுட்பங்களுடன் பேசவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
- கணிப்பீட்டு நியதிகளைத் தெளிவாக விளக்குங்கள்.

**மாணவருக்கானவை:**

- நீங்கள் பார்த்து நயந்த 'பிள்ளை அழுத கண்ணீர்' நாடகத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நினைவுபடுத்துங்கள்.
- அந்நாடகம் தொடர்பில் ஆசிரியராற் தரப்படும் தலைப்பின் கீழ் இரண்டு நிமிடத்திற்கு மேற்படாத பேச்சொன்றை நிகழ்த்த வேண்டும்.
- ஒரு வார கால அவகாசத்துட் பேச்சுக்கான தயார்ப்படுத்தலைச் செய்து கொள்ளுங்கள்.
- பேச்சு நுட்பங்களைப் பயனபடுத்திப் பேச்சினைச் சுவாரசியமாக நிகழ்த்துங்கள்
- சக மாணவரது பேச்சுக்களையும் செவிமடுங்கள்.
- அனைவரையும் கை தட்டிப் பாராட்டுங்கள்.

## 07. கணிப்பீட்டு நியதிகள்

| தொ. இல. | மாணவர் பெயர் | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 04 புள்ளி | 20 புள்ளி | 10 புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பேச்சை முறையாக ஆயத்தம் செய்கிறார். | பேச்சிற் பொருத்தமான அம்சங்களை முன்வைக்கிறார். | பேசுவதற்கான நுட்பங்களைப் பயன்படுத்துகிறார். | பேச்சு வழியாகத் தன் நாடக நயப்பை வெளிப்படுத்துகிறார். | விடயத் தலைப்பிற்குள் நின்று நேரத்தையும் அனுசரித்துப் பேசுகிறார். | மொத்தப் புள்ளி | இறுதிப்புள்ளி |
| | | | | | | | | |

மிக நன்று : 04

நன்று : 03

நடுத்தரம் : 02

மேலும் முன்னேற வேண்டும் : 01